
February 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

8ம் ஆண்டில்



# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

February 2018
சுவடி — 7
ஓலை — 12

## வணக்கம் பல

போரும் மனிதவாழ்வும் ஆதிகாலந்தொட்டு இந்தக் காலம் வரை தவிர்க்க முடியாமல் இணைந்தே வருகின்றன. ஒவ்வொருமுறையும் போருக்கு எதிரான அமைதிக் குரல்கள் உலகம் முழுதும் ஒலித்தபடிதான் இருக்கிறது என்றாலும், போர் என்பது முற்றாக ஓய்ந்தாபடில்லை! இந்நிலையில், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வட—தென் கொரியா நாடுகளிடையே அமைதிப் பேச்சுவார்த்தை சுமூகமான முறையில் நடைபெற்றது, ஒரு நல்ல தொடக்கத்துக்கான அறிகுறி ஆகும்! இவ்விரு நாடுகள், பரஸ்பரம் கைகுலுக்கிக் கொள்வது உலக சமாதானத்தை எதிர்நோக்கும் மக்களுக்கு இவ்வாண்டு தரும் புத்தாண்டுப் பரிசாக அமைந்திருக்கிறது என்றால் மிகையல்ல!

ஈரான் மக்கள் தங்கள் உரிமைக்காகவும், நன்மைக்காகவும் போராடுவதாக, அமெரிக்க அதிபர் கடந்த சில வாரங்களாக சமூக வலைத்தளங்களில் தனது கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருந்ததால், ஈரான் அரசு தற்காலிகமாக வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், தங்கள் நாட்டில் சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டை முடக்கியது. அதன்பின்னர் ஒருவழியாக வன்முறை முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்து 'நன்றி அமெரிக்கா!' என்று கிண்டல் தொனியில் கூறி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தது ஈரான் அரசு.

எல்லாவற்றுக்கும் எதிர்வினை ஆற்றத்தான் வேண்டும் என்றால், அணுகுண்டு இல்லாமலே இவ்வுலகம் அழிவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து விடும்! சில நேரங்களில் நகைச்சுவை இழையோட நம் கருத்தை வெளிப்படுத்துவது நலம் பயக்கும்.

தமிழகத்தில் நடக்கும் அரசியல் கேலிக்கூத்தைப் பார்க்கும்போது நகைச்சுவை பொங்கி வழிகிறது. கூடவே சோகரசமும் ததும்பி வழிகிறது. ஆளுமை நிறைந்த அரசியல் தலைவர்கள் கோலோச்சிய தமிழகம், இன்று தரம் தாழ்ந்த நிலையில் நிற்பதை நோக்கும்போது மனம் நொந்துகொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

இவற்றை உள்ளடக்கி மலர்கின்ற 'அய் தமிழ்' இதழ், உலக அரசியல் முதல் உள்மனத் தேடல் வரையிலான படைப்புக்களுடன் வருகிறது. வாசக அன்பர்கள் வழக்கம்போல வரவேற்று, தொடர்ந்து தங்களது பங்களிப்பை நல்கி, இதழோடு இணைந்து வாருங்கள்! தமிழால் சிறப்போம்! தமிழைச் சிறப்பிப்போம்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

மீண்டும் எழும்
மக்கள் புரட்சி
கூத்தாடிக்கு
கொண்டாட்டமா!

உரக்க ஒலிக்கும் உண்மை
புதிய தலைமை
ஓங்குமா கை?

மக்களா? மாக்களா

விடை கொடுப்போம்
மரண தண்டனைக்கு!

அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்

சித்தர் ஆகலாம்!

மருத்துவ தமிழ்

தப்பில்லா தப்பு!

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



# மீண்டும் எழும் மக்கள்

### எதைநோக்கி செல்கிறது இரான் போராட்டம்?

“இரானில் சில நகரங்களில் நடந்து வரும் போராட்டங்கள், இரானில் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்து வருகிறது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை வலியுறுத்தி பலரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், “சட்டவிரோதக் கூட்டங்களை” தவிர்க்க வேண்டும் என இரான் உள்துறை அமைச்சர் எச்சரித்ததையும் போராட்டக்காரர்கள் அமெரிக்கா முத்திரை குத்தியுள்ளது.

இரான் அதி உயர் தலைவர் அயத்துல்லா அலி கமேனி, போராட்டங்கள் குறித்த தனது முதல் கருத்தில் இதை கூறியிருந்தார்.

ஐ.நா சபைக்கான அமெரிக்க பிரதிநிதியான நிக்கி ஹேலி, இந்த போராட்டங்கள், `தன்னிச்சையானது` என்று கூறினார். மேலும், அங்கு நிலவும் சூழல் குறித்து பேச, ஐ.நா சபையின் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க, அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.




இந்த போராட்டம் தொடங்கியபோது, நாட்டின் பொருளாதார நிலை குறித்த ஒரு போராட்டமாகவே இருந்தது. ஆனால், இது விரிவடைந்து, கோபங்கள் அதிகமான நிலையில், அவை அரசியலை ஒரு முக்கிய விஷயமாக எடுத்துகொண்டன. அதிபர் மீது பரவலாக விமர்சனம் வைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக, தடைகள், ஊழல் மற்றும் திறமையற்ற மேலாண்மை திறன் கொண்ட இரானின் பொருளாதாரத்தில், நல்ல மாற்றம் கொண்டுவருவார் என்று புறந்தள்ளியுள்ளனர். குறையும் வாழ்க்கை தரும், உணவுப் பொருட்களின் விலை உயர்வு உள்ளிட்ட பிரச்சனைகளை வலியுறுத்தி கடந்த வியாழக்கிழமையன்று மஷாத் என்ற இடத்தில் தொடங்கிய போராட்டங்கள், பின்னர் பல நகரங்களுக்கு பரவின.

வன்முறை வெடித்ததற்க்குக் காரணம், வெளிநாட்டு சக்திகளின் சதி என இரானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.சமீபத்திய போராட்டங்களில் பின்னால், வெளிநாட்டவர்கள் இருந்து செயல்படுவதாக, இரான் தெரிவித்த குற்றச்சாட்டுகளை `அர்த்தமற்றது` என்று

Locations of key protests





எதிர்பார்த்து, அவருக்கு வாக்களித்தவர்களை, அதிபர் ஏமாற்றத்தில் ஆழ்த்தினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பிரச்சனைகளில் இரானின் பங்கு குறித்தும் விமர்சிக்கப்பட்டது. நாட்டு வறுமையில் விழுந்துகொண்டு இருந்த நிலையில், அந்நாடு கொண்டு வந்திருந்த வெளியுறவுக் கொள்கை

பிறகு நடந்த போராட்டம் போல இல்லாமல், இந்த போராட்டத்தில் குறிப்பிடும் வகையிலான தலைமை என்று யாரும் இல்லை. அந்த காலத்தில், நாட்டின் பெரும் செல்வந்தர்கள் பிளவுபட்டனர். இது அத்தகைய தருணமல்ல, அதனால், இந்த போராட்டம் தொடர்வது என்பது கடினமான ஒரு விஷயமாகிறது.



மிகவும், விலை உயர்ந்ததாக இருந்தது. நாட்டின் அதி உயர் அதிகாரியான அயத்துல்லா கமேனி உள்ளிட்ட முக்கியஸ்தர்களும், போராட்டக் காரர்களால் குறிவைக்கப்பட்டனர்.

இந்த போராட்டத்திற்கு வெளிநாட்டவர்களே காரணம் என்று அவர் பதிலளித்தார். கடந்த காலங்களில், வெளிநாட்டு தலையீடுகளால், இரான் அவதிப்பட்டுள்ளது. அதனால், அவரின் வார்த்தைகள் சிலரை குறிப்பிடும் வகையில் இருக்கலாம். மேலும், பாதுகாப்பு படையினரிடமிருந்து இதற்கான பதில் என்பது, மிகவும் கடினமாகவும் வரலாம்.

2009 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலுக்குப்

ஆனால், இந்த போராட்டம் நடக்கிறது என்பதே மிகப்பெரிய விஷயம். இரானில் பல ஆண்டுகளாக நிலவும், அடக்குமுறை, வறுமையால், மக்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

## இரானில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் ஏன்?

இரான் போராட்டம் ஒருநாளில் முடிந்துவிடும்எதிர்ப்பு போராட்டமாக இருக்கும் பிறகு மறைந்து விடும் என்றும் நினைத்தேன்" என்கிறார் பிரிட்டிஷ்—இரானியர் ஆரியனே மொஷிரி. இரான் முழுவதும் 50க்கும் மேற்பட்ட



இரானியர்களுக்கு பொருளாதார நன்மைகள் எதுவும் உண்மையிலுமே கிடைக்கவில்லை. அதனால்தான் இளைஞர்கள், தொழிலாளர் வர்க்கத்தினர் என பலதரப்பட்ட மக்கள் இணைந்து கடந்த வாரம் ஆர்ப்பாட்டத்தை தொடங்கினார்கள்.

“அந்த ஒப்பந்தம் சமூக—பொருளாதார நலன்களைப் பற்றி மட்டும் அல்ல, அரசியல் ஆதாயத்தையும் கொண்டது என்பது விரைவில் வெளிப்பட்டது” என்கிறார் ஆரியனே.

நகரங்களுக்கு பரவிய இரான் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பெருமளவிலான இளைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

எதிர்ப்பாளர்கள் “தோற்கடிக்கப்பட்டனர்” என இரானிய புரட்சிகரக் காவல்படை (ராணுவம்) அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாமியப் புரட்சியின்போது ஆரியனே மொஷிரியின் பெற்றோர்கள் இரானை விட்டு வெளியேறினார்கள்

ஆர்ப்பாட்டங்களுக்கான காரணங்கள் சில ஆண்டுகளாக உருவாகிவந்தாலும், சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் நடைபெற்ற நிலையில், தற்போது ஆர்ப்பாட்டங்கள் வலுத்துள்ளதைப் பற்றி ஆச்சரியப்படுகிறார் 23 வயதான ஆரியனே.

“இது(ஆர்ப்பாட்டம்) உண்மையில் திடீரென ஏற்பட்டது” என்று அவர் நியூஸ்பீட் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

“மக்கள் அனைவரின் குரலும் தேர்தலில் ஒலித்ததாக நினைக்கிறீர்களா?” என்று அவர் கேட்கிறார்.

நிறைய இளைஞர்களை பாதிக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதாக உறுதியளித்த பிறகே ஹசன் ரூஹானி கடந்த ஆண்டு மே மாதம் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரான் தன்னுடைய அணு ஆயுத ஆய்வைக் கைவிடுவதற்குப் பதிலீடாக இரான் மீதான பொருளாதாரத் தடைகள் தளர்த்தும் திட்டத்தில் பிரிட்டன் உள்ளிட்ட ஆறு நாடுகளுடன் ஒரு ஒப்பந்தத்தில் ரூஹானி கையெழுத்திட்ட பின்னர் வழங்கப்பட்ட வாக்குறுதி இது.

ஆனால் இந்த உடன்படிக்கையினால்

“எதிர்ப்பாளர்கள் எதிர்காலத்தை பற்றி பேசுகிறார்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை, பலர் மாதாந்திரத் தவணை கடனில்தான் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதுதான் நிதர்சனம்.

“சிரியாவில் ஏன் பணம் செலவிடுகிறீர்கள், ஏன் மக்களான எங்களுக்கு அரசு பணம் செலவழிப்பதில்லை?” என்ற முழக்கங்களை ஆர்ப்பாட்டங்களில் கேட்கமுடிந்த்து என்கிறார் ஆரியனே.

இரான் அரசு 2013இல் செலவுகளை குறைக்கும் சிக்கன நடவடிக்கைகளை ஆரம்பித்ததை, “ஒரு குறிப்பிட்ட அளவுக்கு” இங்கிலாந்துடன் ஒப்பிடலாம் என்றும் ஆரியனே கூறுகிறார்.

“அரசின் மேம்பாட்டுத் திட்டங்களில் நிறைய குறைக்கப்பட்டன.”

“வெவ்வேறு நாடுகளில் இருந்தாலும் சிலர் ஒரேவிதமான அழுத்தங்களைக் கொண்டிருப்பார்கள் என்பதை அது உங்களுக்கு சொல்கிறது.” ஆனால், ஒப்பீடு இத்தோடு முடிந்துவிடுகிறது. மில்லியன் கணக்கான இரானியர்களால் பயன்படுத்தப்படும் செயலி டெலிகிராம் அதிகாரிகளால் தடை செய்யப்பட்டுள்ளது

பேஸ்புக், கூகுள் மற்றும் டிவிட்டர் உள்ளிட்ட பிரபல தளங்கள் இரானில் தடை செய்யப்பட்டுள்ளன. போராட்டங்கள் தொடர்பான வீடியோக்கள், செய்திகளை பிறருடன் பகிர்வதை தடுக்கும்வகையில் நாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த டெலிகிராம் செயலியின் செயல்பாடு தாற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

“இரானில், ஒவ்வொருவருக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை இருப்பதாக கூறுகிறார்கள், ஆனால் நீங்கள் 450 பேரை கைது செய்து அது பொய் என்று நிரூபித்துவிட்டார்கள்” என்று ஆரியனே கூறுகிறார்.

“எங்களுக்கும் இரான் மக்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சனை என்னவென்றால், நாங்கள் அனைவரும் பொருளாதார நிலையில் ஏறக்குறைய ஒன்றுபோல் இருக்கிறோம்“ என்று ஆரியனே மேலும் கூறுகிறார்.

“ஆனால் குறைந்தபட்சம் எங்கள் அதிருப்தியை வெளிப்படையாக வெளிப்படுத்தும் உரிமை இங்கிலாந்தில் எங்களுக்கு இருக்கிறது” என்று முத்தாய்ப்பாய் கூறுகிறார் ஆரியனே.







நன்றி அமெரிக்கா!

‘வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடுவதையே வெளியுறவுக் கொள்கையாகக் கொண்டு செயல்படும் நாடு அமெரிக்கா’ என்ற பெயருக்கு மேலும் ‘பெருமை’ சேர்ப்பதுபோல உள்ளது அந்நாட்டின் அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் செயல்பாடு. ஈரானில் இப்போது அரசுக்கு எதிராக நிகழ்ந்து வரும் போராட்டத்தில் ஆயுதம் ஏந்தாத போராளியாக டுவிட்டர் சமூக வலைதளம் மூலம் கிளர்ச்சியூட்டி வருகிறார் டிரம்ப்.

ஈரானில் வன்முறை வெடித்த கடந்த ஒரு வாரத்தில் டிரம்ப்பின் டுவிட்டர் பதிவுகளில் பாதிக்குமேல் ஈரான் பிரச்னையை மையமாகக் கொண்டே அமைந்தன. ஈரான் மக்கள் தங்கள் உரிமைக்காகவும், நன்மைக்காகவும் போராடுவதாகக் கூறி அமெரிக்காவில் இருந்து தொடர்ந்து ஆதரவுக் கரம் நீட்டி வருகிறார்.

வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஃபேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ்ஆப் போன்ற சமூக வலைதளங்களின் பயன்பாட்டை ஈரான் அரசு தாற்காலிகமாக முடக்கியது. இதற்கு எதிராகவும் கருத்து தெரிவித்து ஈரானிய மக்களின் கருத்துரிமையும் சுதந்திரமும் பறிக்கப்படுவதாக டுவிட்டரில் கடுமையாகக் குற்றம்சாட்டினார் டிரம்ப்.

இப்போது ஈரானிய மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் இதே டிரம்ப், சில மாதங்களுக்கு முன்பு ஈரான் உள்ளிட்ட 8 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வருவதற்கு தடை விதித்தார் என்பதை நினைவுகூர்ந்தாக வேண்டியுள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிரான தற்போதைய போராட்டங்களை ஏனைய வல்லரசு நாடுகள் அமைதியாக கவனித்து வருகின்றன. இந்தியா போன்ற வளரும் நாடுகள் ஈரான் உள்நாட்டுப் பிரச்னையால் கச்சா எண்ணெய் விலை உயருமோ என்ற கவலையில் ஆழ்ந்துள்ளன. எனினும், அமெரிக்க அதிபர் மட்டும் பிரச்னையைத் தூண்டுவதில் ஆர்வம் காட்டி வருகிறார். அதற்கான காரணமும் உலகம் அறிந்ததுதான்.

ஈரான் அணு ஆயுதங்களை ரகசியமாகத் தயாரித்து வருவதாக கடந்த சுமார் 40 ஆண்டுகளாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. இது தொடர்பாக ஈரான் மீது பல பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா ஏற்கெனவே விதித்துள்ளது. ஆனால், ஈரானுக்கு முதல் முதலில் அணு ஆயுதத் தயாரிப்புக்கான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அளித்தது அமெரிக்காதான் என்பது கசப்பான உண்மை.

தனது கைப்பாவையான ஈரானின் ஷா



வம்சத்தின் கடைசி மன்னர் முகமது ரிசா ஆட்சியில் இருந்தபோது (1967) அணு ஆயுதத் தயாரிப்புக்குத் தேவையான யுரேனியத்தை பல்வேறு தரப்பு எதிர்ப்புகளையும் மீறி ஈரானுக்கு அமெரிக்கா அளித்தது. 1979—ஆம் ஆண்டு ஏற்பட்ட ஈரானிய புரட்சி ஷா மன்னரின் ஆட்சியைத் தூக்கி வீசியது.

அமெரிக்காவுக்கு எதிரான கொள்கைகளை உடைய அயதுல்லா (ஈரானிய ஷியா மதத் தலைவர்) ருஹல்லா கொமேனியிடம் அதிகாரம் சென்றது. ஈரானின் ஒட்டுமொத்த மதம், அரசியல் தலைவர் அயதுல்லா மட்டுமே. இப்போது அப்பொறுப்பில் இருப்பவர் அயதுல்லா அலி கமேனி. அவரும் தீவிர அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை உடையவர் என்பதுதான் பிரச்னை தொடரக் காரணம்.

மன்னராட்சி அகற்றப்பட்டதில் இருந்து ஈரான்—அமெரிக்க உறவு ஏழாம் பொருத்தமாக மாறியதில் வியப்பேதும் இல்லை. கடந்த 2015—ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமா பிற வல்லரசு நாடுகளுடன் இணைந்து ஈரானுடன் அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தை மேற்கொண்டார். ஆனால், டிரம்ப் அதிபர் ஆனவுடன், ஈரான் ரகசியமாக அணு ஆயுதம் தயாரிப்பதான குற்றச்சாட்டில் அந்த ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டன. ஈரானுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எடுத்தார் டிரம்ப். இப்போது, அங்கு அரசுக்கு எதிராக ஏற்பட்டுள்ள கிளர்ச்சிக்கும் ஆதரவு அளித்து வருகிறார்.

தற்போது ஈரானில் நிலவி வரும் விலைவாசி உயர்வு, பொருளாதாரப் பிரச்னைகளை மையமாகக் கொண்டு தொடங்கிய போராட்டம், பின்னர் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாக உருவெடுத்து நாட்டின் பல்வேறு நகரங்களுக்குப் பரவியது. வன்முறையில் 20—க்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோன நிலையில், ஈரான் அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது. நாட்டில் அந்நிய சக்திகள் வன்முறையைத் தூண்டுவதாக அமெரிக்கா மீது மறைமுகமாகக் குற்றம்சாட்டினார் அயதுல்லா அலி கமேனி.

ஈரானிய மக்கள் மீது அமெரிக்காவுக்கு இப்போது ஏற்பட்டுள்ள திடீர் பாசத்தையே அந்நாட்டு அரசு தனக்கு சாதகமாக்கிக் கொண்டது. அரசு இயந்திரத்தின் உதவியுடன், ஈரானியப் போராட்டம் குறித்த டிரம்ப் மற்றும் அமெரிக்க அதிகாரிகளின் கருத்துகள் மக்களிடையே வேகமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளன!

ஈரான் மீது சர்வதேச பொருளாதாரத் தடைகளை விதிப்பதில் முன்னின்று நடத்திய அமெரிக்கா, இப்போது ஈரானியர்கள் நலனில் திடீர் அக்கறை கொள்வது, ‘ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவதற்கு’ ஒப்பானது என்ற பாணியில் பொதுமக்கள் மத்தியில் ஈரான் அரசு முன்னெடுத்த பிரசாரத்துக்கு உடனடியாக பலன் கிடைக்கத் தொடங்கியது.

ஈரானின் முக்கிய நகரங்களில் அரசு ஆதரவுப் பேரணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. அதில் அமெரிக்க எதிர்ப்பு கோஷங்களுடன் பங்கேற்கும் ஈரானியர்களின் எண்ணிக்கை அரசுத் தரப்புக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

நாட்டில் வன்முறை முடிவுக்கு வந்துவிட்டதாக ஈரான் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிவித்த ஈரான் அதிகாரிகள் இறுதியாக கிண்டல் தொனியில் கூறிய வார்த்தை ‘நன்றி அமெரிக்கா!’

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"திமுகவை அழிப்பதற்கோ, ஒழிப்பதற்கோ எவராலும் முடியாது!"

**ஸ்டாலின்**


*(ஆமா! நான் ஒருத்தனே போதும்னு சொல்ல வர்றார் செயலு!)*



"போக்குவரத்து ஊழியர்கள் கேட்கும் ஊதியத்தை தர மனம் உள்ளது; பணம் இல்லை!"

**செங்கோட்டையன்**

*(அந்த அம்மா போனப்பறம் நல்லா பேச கத்துக்கிட்டீங்கய்யா! )*



"கிம் ஜோங் உன்னுடன் நேருக்கு நேர் பேச்சுவார்த்தைக்கு தயார்!"

**ட்ரம்ப்**

*(பெரியண்ணே! நீங்க எதுக்கும் தயார்னு எல்லாருக்கும் தெரியும்! ஆனா பேச்சு வார்த்தை நேர்மையா இருக்குமான்னு யாரும் நம்பத் தயாரில்லே!)*



"ரஜினியுடன் பாஜக கூட்டணி வைத்தால் வேறு மாநிலம் செல்வேன்!"

**சுப்பிரமணியன் சுவாமி**

*(இதுக்காகவாவது ரஜினி அரசியலுக்கு வந்தே ஆகணும்!)*




## 2 ஆண்டுகளுக்குப் பிறகு வட–தென் கொரியா அமைதிப் பேச்சுவார்த்தை

**வ**ட கொரியாவின் தொடர் அணுஆயுத சோதனை காரணமாக தென் கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் கடந்த இரு ஆண்டுகளாக மோதல் போக்கு வலுத்து வந்தது. வடகொரியாவின் அத்துமீறல்களை முடிவுக்குக் கொண்டுவர தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து ராணுவ கூட்டுப் போர் பயிற்சியில் ஈடுபட்டது. இதன் காரணமாக கொரிய தீபகற்பப் பகுதியில் பதற்றம் நிலவி வந்தது.



இந்த நிலையில், தென் கொரியாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கள் நாடும் பங்கேற்க விரும்புவதாக வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் கடந்த புத்தாண்டு தினத்தில் அறிவித்தார். இது, தென் கொரியா மட்டுமல்லாமல் உலக நாடுகள் அனைத்தையும் வியப்பில் ஆழ்த்தியது.

இதுகுறித்து தென்கொரிய ஒருங்கிணைப்புத் துறை அமைச்சர் ஷன் ஹே—ஸங் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வட கொரிய பிரதிநிதிகளுடன் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடத்திய அமைதிப் பேச்சுவார்த்தை மிகவும் சுமுகமான முறையில் இருந்தது. வட கொரிய தலைமை பிரதிநிதி ரிசன் குவான் குழுவுடனான இந்த பேச்சுவார்த்தை இருதரப்பு கொரிய மக்களுக்கும் புத்தாண்டு பரிசாகவும், நல்ல தீர்வுகளை தருவதாகவும் அமைந்தது.

பிப்ரவரி மாதம் 9ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரையில் தென்கொரியாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் வட கொரிய வீரர்கள் கலந்து கொள்வது குறித்து இந்த பேச்சுவார்த்தையின்போது விரிவாக விவாதிக்கப்பட்டது. இறுதியில், விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் அடங்கிய குழுவை அனுப்பி வைக்க வட கொரியா ஒப்புதல் தெரிவித்தது. இருநாடுகளுக்கிடையேயான ராணுவ நேரடி




தொலைபேசி சேவையை மீண்டும் தொடங்கவும் சம்மதிக்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்டு பிரிந்துபோன குடும்பங்களை தாற்காலிகமாக ஒருங்கிணைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இருநாடுகளுக்கிடையே பதற்றத்தைப் போக்கும் வகையில் ராணுவ ரீதியிலான பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டது.

கூடிய ஏவுகணைகளும் தங்களிடம் இருப்பதாகக் கூறினார். மேலும், அந்த அணு ஆயுதங்களை இயக்கக் கூடிய கட்டுப்பாட்டு விசை தனது மேஜையில் எப்போதும் தயாராக இருப்பதாக எச்சரித்தார்.

எனினும், தென் கொரியாவில் தொடங்கவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கள் நாட்டு வீரர்களை அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தை



கொரிய தீபகற்பத்தில் அணுஆயுத அச்சுறுத்தல் இல்லாத நிலையை எட்டுவதற்கான தேவை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. கொரிய தீபகற்பத்தில் அமைதி மற்றும் சமரசத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தை முக்கியம் என்பதை வடகொரிய பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டுள்ளனர் என்றார் அவர்.

வட கொரிய அதிபர் கிம் ஜோங்—உன் ஆற்றிய புத்தாண்டு உரையில், அமெரிக்காவைத் தாக்கி அழிப்பதற்கான அணு ஆயுதங்களும், அந்த ஆயுதங்களை அமெரிக்கா வரை ஏந்திச் செல்லக்

நடத்தத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பான்முன்ஜோம் எல்லை கிராமத்தில், கடந்த டிசம்பர் 2015—ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தென் கொரியா முன்வந்தது.

இதற்கிடையே, வட கொரியாவின் எதிர்ப்பையும் மீறி ஆண்டு தோறும் நடைபெறும் அமெரிக்க—தென் கொரிய கூட்டு ராணுவப் பயிற்சி இந்த முறை தள்ளிவைக்கப்பட்டது.

மேலும் இது தொடர்பான பேச்சு வரத்தையில் தங்கள் நாட்டு அதிகாரிகளை அனுப்ப தயாராக உள்ளதாக வடகொரியா கூறியது. இதற்கு தென் கொரியா தரப்பிலும் வெள்ளைக் கொடி காட்டடப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் இங்குள்ள இணை சந்திப்பு நடந்தது. இப்பகுதி வடக்கு மற்றும் தென் கொரியாவால் அதிக எண்ணிக்கையிலான ராணுவ வீரர்களைக் கொண்டு பாதுகாக்கப்படும், எல்லையாகும்.




இந்த நிலையில் சியோலில் தென் கொரியா — வடகொரியா பிரதிநிதிகள் பங்கேற்கும் கூட்டம் நடைபெறுகிறது. இதில் தென்கொரிய அமைச்சர் சோ மியோங்—கியோன், வடகொரியாவின் பிரதிநிதிகள் குழு தரப்பில் ரி சன் க்வான் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பு குறித்து க்வான் கூறும்போது, "எங்கள் சகோதரர்கள் அளித்த நம்பிக்கையில் நாங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளோம்" என்றார்.

தென்கொரிய அமைச்சர் சோ மியோங்—கியோன், கூறும்போது, "இந்த சந்திப்பு எங்கள் பேச்சு வார்த்தை பயணத்தின் முதல் அடியாக இருக்கும் என்று நம்புகிறேன். சில ஆண்டுகளாக தென் கொரியா — வடகொரியா இடையே பேச்சு வார்த்தை நடைபெறாததால் இந்த அனுபவம் புதுமையானதாக உள்ளது" என்றார்.

2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு தென் கொரியா — வடகொரியா இடையே பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது. இதன் மூலம் இரு நாடுகளுக்கிடையே நிலவிய போர் பதற்றம் குறையும் என்ற எதிர்பார்ப்பு உலக நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது.

இரு நாட்டு எல்லையில் உள்ள ராணுவம் விலக்கப்பட்ட பகுதியான பன்முன்ஜோமில் 'சமாதான கிராமம்' என அழைக்கப்படும் பகுதியில் உள்ள 'அமைதி மாளிகையில்' இந்த பாதுகாப்பு பகுதியில், தென்கொரியாவின் பக்கத்தை வட கொரிய வீரர் ஒருவர் கடந்தபோது, வடகொரிய ராணுவத்தாலேயே சுட்டு காயப்படுத்தப்பட்டுள்ளார்.

வட கொரியா ஏவுகணை ஏவிய பிறகு, கேசோங் தொழில் மண்டலத்தின் கூட்டு பொருளாதார திட்டத்தை தென் கொரியா இடைநிறுத்தியது. அப்போது முதல் இரு நாடுகள் இடையிலான உறவுகள் மோசமடைந்தது.

இந்த சம்பவம், தென் கொரியாவுடனான தனது தொடர்புகளை வட கொரியா துண்டிக்க வழிவகுத்தது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே கடைசியாக உயர்அளவு பேச்சுவார்த்தைகள், 2015—ஆம் ஆண்டு டிசம்பரில் நடந்தது. தடை செய்யப்பட்ட ஆயுத திட்டங்களை வட கொரியா தொடர்ந்து மேம்படுத்தி வந்ததால், பதற்றங்கள் அதிகரித்தன.

வட கொரியாவும் ரிசோனோ—க்வோன் தலைமையிலான ஐந்து பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு அனுப்புகிறது. தென் கொரிய விவரங்களுக்கான வட கொரிய அரசு நிறுவனத்தின் தலைவராக ரி—சோனோ—க்வோன் உள்ளார்.


மூத்த பேச்சுவார்த்தையாளராக அறியப்படும் ரி, 2006 முதல் வட கொரிய பிரதிநிதிகளை வழிநடத்தி வருகிறார்.

வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை ஏற்பட அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பெருதும்

உதவியதாக தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக்கில் வடகொரியா பங்கேற்க உள்ளது என்று 2 ஆண்டுகளுக்குப் பிறகு செவ்வாய்க்கிழமை நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு நாடுகளும் வடகொரியாவின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் ரி சன் க்வான் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

இதன் முடிவில், குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக தங்கள் நாட்டு வீரர்களை அனுப்பி வைக்க வடகொரியா ஒப்புக் கொண்டது. அவர்களுடன் உயர்நிலை




தெரிவித்தன.

ஐ.நா.வின் கடும் எதிர்ப்பையும் மீறி, வடகொரியா தொடர்ந்து அணுகுண்டு மற்றும் ஏவுகணை சோதனையில் ஈடுபட்டது. இதனால் கடந்த இரு ஆண்டுகளாக வடகொரியா, தென்கொரியா இடையே மோதல் போக்கு நிலவுகிறது. இதன் தொடர்ச்சியாக, தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபட்டன. இதனால் கொரிய தீபகற்பப் பகுதியில் பதற்றம் நிலவி வந்தது. வடகொரியா, அமெரிக்கா இடையே கடும் வார்த்தைப் போர் நடைபெற்றது.

இந்நிலையில், தென் கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கள் நாடும் பங்கேற்க விரும்புவதாக வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் கடந்த புத்தாண்டு தினத்தில் அறிவித்தார். இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்த உயர் அதிகாரிகளை அனுப்ப தயார் என்றும் தெரிவித்தார். இதற்கு தென்கொரியாவும் சம்மதம் தெரிவித்தது.

இதையடுத்து, இருநாட்டு எல்லையில் தென்கொரிய பகுதியில் உள்ள அமைதி கிராமமான பன்முஞ்சோமில் இருநாட்டு பிரதிநிதிகள் இடையே நேற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் தென்கொரியாவின் ஒருங்கிணைப்புத் துறை அமைச்சர் சோ மியோங்—கியோன், அதிகாரிகள் குழு, ஆதரவாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்டோரையும் அனுப்பி வைப்போம் என வடகொரியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வடகொரியாவுடனான பேச்சுவார்த்தை குறித்து தென்கொரியா அதிபர் மூன் ஜே இன் செய்தியாளர்களிடம் கூறும்போது, “இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை ஏற்பட ட்ரம்ப் பெரிதும் உதவினார். இந்த விவகாரத்தில் ட்ரம்ப்புக்கு என் நன்றி கூற விரும்புகிறேன்.

வடகொரியா மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளின் விளைவாய் இந்தப் பேச்சுவார்த்தை ஏற்பட்டிருக்கலாம்.

தென் கொரியா — வடகொரியா இடையே இந்த பேச்சுவார்த்தையின் மூலம் அணுசக்தி தொடர்பான வடகொரியாவின் அணுஆயுத சோதனைகளை நிறுத்துவதுதான் முக்கிய நோக்கம். இதில் நமது அடிப்படை நிலைப்பாடு ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்படாது” என்றார்.


போர்ச்சூழலுக்கு பழக்கப்பட்ட இவ்விரு நாடுகளும், சமாதானமாய் கைகுலுக்கிக் கொள்வது உலக சமாதான ஆர்வலர்களை மகிழ்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது.



# உரக்க ஒலிக்கும்

### அமெரிக்க அதிபராக இருப்பதற்கான மனநலம் டிரம்புக்கு உள்ளதா? சர்ச்சை நூலால் பரபரப்பான விவாதம்

டொனால்டு டிரம்ப் பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே அவரது மன நலம் குறித்த கேள்வியை எழுப்பும் புத்தகங்கள் வந்துள்ளன. அவரிடம் காண்பதாக சொல்லப்படும் உளவியல் அறிகுறிகள் குறித்து பல உளவியல் வல்லுநர்கள் முன்பே சந்தேகங்களை கிளப்பியுள்ளனர்.




ஆனால், தற்போது அமெரிக்காவில் அரசியல் சர்ச்சையை கிளப்பி இருக்கும், மைக்கேல் வோல்ஃப் எழுதிய 'ஃபைர் அன்ட் ஃப்யூரி' என்ற நூல், டிரம்பின் உளவியல் பற்றி கிளப்பியுள்ள பிரச்சினைகள் அவர் அமெரிக்க அதிபராகத் தொடர்வதற்குத் தேவையான உளவியல் தகுதி உடையவரா என்ற விவாதத்தை எழுப்பிவிட்டது. சமூக வலைத்தளங்களிலும், செய்தித் தளங்களிலும் இந்த விவாதம் நிரம்பி இருக்கிறது.

தமது புத்தகத்தை சந்தைப்படுத்துவதற்கான பிரசாரத்தில் ஈடுபட்ட வோல்ஃப், 71 வயதான டிரம்ப், கூறிய விஷயத்தையே மீண்டும் மீண்டும் கூறுவதாகத் தெரிவித்தார். கூறியதையே திரும்பத் திரும்பக் கூறுவது குறுகிய கால நினைவாற்றல் உள்ளிட்ட காரணங்களால் நிகழலாம்.

இது டெமன்ஷியாவின் அறிகுறியாகவும் இருக்கலாம். 60 வயதுக்கு மேற்பட்ட ஆள்களில் 5 முதல் 8 சதவீதம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது உலக சுகாதார நிறுவனம். "முன்பெல்லாம் கூறியதையே, வார்த்தை மாறாமல் வெளிப்பாடும் மாறாமல் 30 நிமிடங்களுக்குள் மீண்டும் கூறிவந்த டிரம்ப், தற்போது அதை 10 நிமிடங்களுக்குள் செய்கிறார்," என்கிறார் வோல்ஃப். அவர் கூறுவது போல எந்தத் தருணத்தில் டிரம்ப் பேசினார் என்று எந்த விளக்கத்தையும் அவர் கூறவில்லை.

இந்தப் புத்தகத்தை மோசடி என்றும் பொய்களால் நிரம்பியது என்றும் விமர்சித்துள்ளார் டிரம்ப். இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் கூறுவதுபோல வெள்ளை மாளிகையை அணுகி உரையாடி



# உண்மை

தகவல்களைத் தெரிந்துகொள்ள அவருக்கு தாம் அனுமதி ஏதும் தரவில்லை என்கிறார் அவர்.

பேண்டி எக்ஸ் லீ என்ற உளவியல் பேராசிரியர் ‘டேஞ்சரஸ் கேஸ் ஆஃப் டொனால்டு டிரம்ப்’ என்ற பெயரிலும், அல்லென் ஃப்ரான்செஸ் என்பவர் ‘ட்விலைட் ஆஃப் அமெரிக்கன் சேனிடி’ என்ற பெயரிலும், கர்ட் ஆண்டர்சன் என்பவர் ‘ஃபேன்டசிலேண்ட்’ என்ற தலைப்பில் தலைப்பிலும் டிரம்பின் உளவியல் தொடர்பாக புத்தகங்கள் எழுதியுள்ளனர்.



பெரும்பாலும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அடங்கிய ஒரு செனடர்களிடம் பேசிய பேராசிரியர் லீ, ‘டிரம்பிடம் அறிகுறிகள் தெரிகின்றன. அவர் விரைவில் அவற்றை வெளியிடுவார்’ என்று கூறியிருந்தார். ஆனால், இந்த நூல்களை எழுதிய எவரும் டிரம்புக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அல்லர். அப்படியே அளித்திருந்தாலும் மருத்துவ நியதிப்படியும், அமெரிக்கச் சட்டத்தின்படியும், டிரம்பின் உடல் நலன் குறித்த தகவல்களை அவர்கள் வெளியிட முடியாது.

## பதவிக்கு என்ன ஆகும்?

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் 25வது திருத்தத்தின்படி, தமது பணிகளையும், அதிகாரத்தையும் செயல்படுத்த அதிபரால் முடியாதபோது துணை அதிபர் பொறுப்புகளை எடுத்துக்கொள்வார். அதிபரின் அமைச்சரவையும், துணை அதிபரும் இதற்கான நடைமுறைகளைத் தொடக்கவேண்டும். தற்போதுள்ள நிலையில் அமெரிக்காவில் இது நடப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றபோதும், இதைச் செய்யவேண்டும் என்று பலர் குரல் கொடுக்கின்றனர்.

## முந்தைய அதிபர்களில் யாருக்கு?

அமெரிக்க அதிபர்களில் சிலர் மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆப்ரஹாம் லிங்கனின் மன அழுத்த நோயால் பல சிக்கல்கள் எழுந்தன. மிக அண்மைக் காலத்தில், 1981 முதல் 1989 வரை அதிபராக இருந்த ரொனால்டு ரீகனுக்கு

அடிக்கடி குழப்பமும், சமயத்தில் அவர் எங்கே இருக்கிறார் என்ற சந்தேகமும் வருவதுண்டு. அவர் பதவிக்காலம் முடிந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவருக்கு 'அல்சைமர்ஸ் டிசீஸ்' இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், 25—வது திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்தி எந்த அதிபரும் இதுவரை அமெரிக்காவில் பதவி நீக்கப்பட்டதில்லை.



## டிரம்புக்கு என்னதான் பிரச்சினை?

இதுவரை அவரது உடலைப் பரிசோத்ததாகக் கூறி மருத்துவர் எவரும் பேசியதில்லை, எனவே அவரது மன நலனைப் பற்றிப் பேசுவதற்கு உண்மையான ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆனாலும், டிரம்புக்கு 'நார்சிஸ்டிக் பெர்சனாலிட்டி டிசார்டர்' என்ற பிரச்சினை இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். இந்தப் பிரச்சினை இருப்பவருக்கு மற்றவர்களைப் புரிந்துகொள்ள முடியாது. டாம்பீகம் இருக்கும். மற்றவர்களைவிட தம்மை உயர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொள்வர் என்று கூறப்படுகிறது.

இது தவிர, வோல்ஃபின் புத்தகம் வெளியானதை அடுத்து காக்னிடிவ் டிசார்டர் எனப்படும் புரிந்துகொள்ளல் குறைபாடு அவருக்கு உள்ளதா என்றும் சிலர் கேட்கின்றனர். அவர் முன்பு பேசுகிற முறையிலிருந்து இப்போது பேசுகிற தொனி பெரிதும் மாறுபட்டிருப்பதாக நரம்பியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். இந்த மாற்றம் அவருக்கு 'அல்செய்மர்ஸ் டிசீஸ்' போன்ற ஏதேனும் ஒரு நரம்பியல் பிரச்சினையால் இருக்கலாம் அல்லது வெறும் வயோதிகக் கோளாறாகவும் இருக்கலாம் என்று சில வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## இந்த விவாதம் நியாயமானதா?

இந்த விவாதம் வெட்கக்கேடானது, நகைக்கத்தக்கது என்கிறார் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சாரா ஹக்கபீ சான்டெர்ஸ். அவர் உளவியல் தகுதி இல்லாதவராக இருந்தால், தகுதிவாய்ந்த பல வேட்பாளர்களைத் தோற்கடித்து இன்று இந்த இடத்தில் உட்கார்ந்திருக்க மாட்டார் என்பது அவரது வாதம். டிரம்பின் குடியரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இது பாரபட்சமான தாக்குதல் என்கிறார்கள்.

உளவியலாளர்கள் தாங்கள் பரிசோதித்துப் பார்க்காத ஒருவருக்கு குறிப்பிட்ட நோய் இருக்கலாம் என்று கூறுவதை அவர்கள் தொழில் சார்ந்த அறம் அனுமதிக்கவில்லை என்றும், இப்படி செய்வதன் மூலம் கோல்ட்வாட்டர் ரூல் என்கிற விதியை அவர்கள் மீறுவதாகவும் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

## நான் மேதாவி: டிரம்ப்

இதனிடையே தமது மன நலன் கேள்விகளை நிராகரித்த டிரம்ப் தம்மை உறுதியான மனம் கொண்ட மேதாவி என்று வருணித்துக் கொண்டுள்ளார். முதல் முயற்சியிலேயே அமெரிக்க அதிபராவதற்கு அறிவாளியாக இருந்தால் மட்டும் போதாது. மேதாவியாக இருந்தால்தான் முடியும் என்று அவர் டிவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

'எனது வாழ்நாள் முழுவதிலும் என் இரண்டு பெரிய சொத்துகளாக இருப்பவை மன உறுதித் தன்மையும், அறிவோடு இருப்பதும்தான். குறுக்குப் புத்தியுள்ள ஹிலரி கிளிண்டன் இந்த வாதத்தையும் பயன்படுத்திப் பார்த்தார். ஆனால், எல்லோருக்கும் தெரியும், அவர் பொசுங்கிப் போனார். நான் வெற்றிகரமான வியாபாரியாக இருந்து உச்சநிலை டி.வி. நட்சத்திரமாக உயர்ந்தவன்' என்று அவர் இன்னொரு டிவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.



தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37



# புதிய தலைமை ஓங்குமா

## ஓங்கும் கை !

சில மாதங்களுக்கு முன்னால் வரை, இனி 'காங்கிரஸ் இல்லாத இந்தியா' உருவாகும் என்று பேசினால், அதை நம்பவும் பலர் இருந்திருப்பார்கள். குஜராத் சட்ட மன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, அத்தகைய எண்ணமே விரட்டியடிக்கப்பட்டிருக்கிறது. குஜராத் மாநிலத்தில் காங்கிரஸுக்கு ஆதரவு பெருக நான்கு காரணங்கள் இருந்தன. இவையே தேசிய அளவிலும் அக்கட்சிக்குப் புத்துயிர் ஊட்டும்.




முதலாவதாக, கட்சியின் தலைமைப் பதவியை ராகுல் காந்தி வெகு இலகுவாகக் கையாண்டார். குஜராத்தின் குறுக்கும் நெடுக்கும் பயணம் செய்ததுடன் 30—க்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களில் பேசினார். யாரோ எழுதிக் கொடுத்துப் பேசிய காலம் போய்விட்டது. அந்தந்த ஊர்களுக்கேற்ப அவரே அரசியல் செய்திகளைப் பேசினார். பரம்பரையாக வந்த அரசியல் தலைவர் என்ற தலைக்கனம் இல்லாமல் மிகுந்த பொறுப்புணர்வுடன் பேசுவதுடன், மற்றவர்கள் சொல்வதை ஆர்வமுடன் கேட்பவராகவும் இருக்கிறார் என்று மக்கள் மகிழ்ந்தனர்.

இரண்டாவதாக, தன்னை முன்னிறுத்திக்கொள்ளாமல் பின்னாலிருந்து செயல்படும் தன்மையால் வெவ்வேறு அரசியல் நோக்கங்களுடன் இருந்த ஹர்திக் படேல், அல்பேஷ் தாக்கோர், ஜிக்னேஷ் மேவானி ஆகியோரை ஒரே மேடையில் கொண்டுவர அவரால் முடிந்தது. காங்கிரஸ் தலைமையில் அவர்கள் திரளக் காரணமாக இருந்தது, ராகுல் மீது அவர்களுக்கிருந்த நம்பிக்கைதான். 'குறிப்பிடத்தக்க' இந்த சமூகக் கூட்டணியை ராகுலைத் தவிர, வேறு எந்த காங்கிரஸ் தலைவராலும் ஏற்படுத்தியிருக்க முடியாது. 'குறிப்பிடத்தக்கது' என்று இக்கூட்டணியைக் குறிப்பிடக் காரணம், வெறும் சாதி எண்ணிக்கை அடிப்படையில் அல்லாமல் வேலைவாய்ப்பின்மை, நில உரிமைகள், வேளாண் துறைத் துயரங்கள் போன்றவற்றைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதால்தான்.

### வியப்பில் ஆழ்த்திய ராகுல்

மூன்றாவது, கட்சியின் கள அமைப்புகளைப் பயன்படுத்துவது பற்றியது. குஜராத் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்திய படேல்களின் அணி திரளலை காங்கிரஸ் அப்படியே பயன்படுத்திக் கொண்டது. ஆனால், சூரத் நகரில் அதற்குத் தோல்வி ஏற்பட்டது.




ஜவுளி நகரமான சூரத்தில் பாஜக மீது கோபம் கொப்பளித்தது என்றாலும், வாக்குச்சாவடி அளவில் காங்கிரஸ் வலுவாக இல்லாததால் மொத்தமிருந்த 16 தொகுதிகளில் 15—ல் பாஜகவே வென்றது. காங்கிரஸின் இடைநிலைப் பகுதியிலும் கடைநிலைப் பகுதியிலும் அமைப்பு சீர்குலைந்திருக்கிறது. அவற்றைச் சீர்திருத்தி வலுப்படுத்தினால்தான் கட்சியின் அமைப்புச் சக்கரத்தில் அது வலுவான ஆரக்காலாகத் திகழும்.

**ஜி. சம்பத்**

விரிவான பேச்சு அல்ல என்றாலும் மக்களைத் திரட்டவும், மக்களுக்கான திட்டங்களில் கவனம் செலுத்தவும் தான் செய்யப்போவது என்ன என்று தெரிவித்துவிட்டார்.



தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்கு மிகவும் அவசியமானது என்னவென்றால், மக்களால் நம்பக்கூடிய, ஏற்கக்கூடிய, தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய மாற்று அரசியல் திட்டங்களை முன்வைப்பதுதான். இந்த இடத்தில்தான் ராகுல் காந்தி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டார்.

காங்கிரஸ் தலைவராகப் பதவி ஏற்றவுடன் அவர் நிகழ்த்திய சிறு சொற்பொழிவில் அரசியல் பற்றிய தன்னுடைய தொலைநோக்குப் பார்வையைச் சிறப்பாகத் தொட்டுக்காட்டினார். அது

## டேவிட் x கோலியாத்

ராகுல் காந்திக்கும் மோடிக்கும் உள்ள வேறுபாடுகள் அனைவருக்கும் தெரியும். அரசியல் அந்தஸ்து, செல்வாக்கு, கவர்ச்சி, வெற்றிகள் என்று ஒப்பிட்டால் பைபிள் கதையில் வரும் டேவிட்டைப் போல ராகுலும், கோலியாத்தைப் போல மோடியும் இருக்கின்றனர். இந்த வேறுபாட்டைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் வழியை ‘டேவிட்’தான் கண்டுபிடிக்க வேண்டும். மோடி செல்வாக்கிலும் அதிகாரத்திலும் மிதக்கிறார் என்றால், ராகுல்

அமரிக்கையாகச் செயல்படுகிறார்; அன்பை விதைப்பவராகத் தெரிகிறார். மோடியின் கோபாவேசமான அரசியலுக்கு மாற்றாக அன்புமயமான அரசியலை முன்னெடுக்கிறார் ராகுல்.



வெறுப்புணர்வுக்கு எதிராக சகோதரத்துவத்தை வளர்க்கிறார்; ஆணவத்துக்கு எதிராக அடக்கத்தைக் கையாள்கிறார். ஒற்றைத்தன்மைக்கு எதிராகப் பன்மைத்தன்மையை வலியுறுத்துகிறார். அச்சத்தை ஊட்டும் அரசியலுக்கு எதிராக அன்பை வளர்க்கும் அரசியலுக்கு ஆதரவு காட்டுகிறார்.

குஜராத் பிரச்சாரத்தில் இந்த அடிப்படையிலேயே பேசிய ராகுல், இடையிடையே குஜராத் பாணி, முன்னேற்றம், ரஃபேல் விமான பேரம், பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி ஆகியவை குறித்து சுருக்கென்று தைக்கும் விதத்தில் விமர்சித்தார். “காங்கிரஸ் அல்லாத இந்தியாவை உருவாக்குவோம் என்று பாஜக கூறினாலும், பாஜக அல்லாத இந்தியாவை உருவாக்க நினைக்கமாட்டோம், பாஜகவும் ஒரு பகுதி மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கும் கட்சியே என்று பேசியதுதான்” அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

மனிதனை மனிதன் சாப்பிடும் இந்தக் காலத்தில் ராகுலின் இந்தப் பண்பு அதிர்ச்சியாகக்கூட இருந்தது. நேரு காலத்து சுதந்திரச் சிந்தனையாளர்கள்கூட குழப்பமும் வியப்பும் அடைந்தார்கள்.

## புதிய மாற்றம்

இதைவிட வியப்பு குறைவாகவும், சற்றே ஜீரணிக்க முடியாததாகவும் இருந்தது, குஜராத்தில் அவர் சில கோயில்களுக்குச் சென்றது. பிரச்சாரத்தின்போது தன்னுடைய ‘இந்து’ அடையாளத்தைக் காட்டியதன் மூலம் இந்துத்துவ சக்திகளின் வலையில் அவர் விழுந்துவிட்டார் என்று சிலர் பேசினர். இது ‘மிதமான இந்துத்துவா’ என்று சிலர் வர்ணித்தனர். நெற்றியில் திருநீறு அணிந்துகொண்டு, சிறுபான்மைச் சமூக மக்களுடைய நிலை பற்றி பிரச்சாரத்தில் ஏதும் பேசாததை அவர்கள் இப்படியாகத்தான் பார்த்தனர்.

இது எதிர்பாராதது அல்ல; அதே சமயம் வடிவத்துக்கும் — சாரத்துக்கும் பேதம் புரியாத குழப்பம் இது. 2009—ஐ விட 2017 மதரீதியாக அணி சேர்ந்திருக்கிறது. அதிலும் குஜராத் முன்னிலையில் இருக்கிறது. வாக்களிக்கும்போது ஒருவருடைய மத அடையாளம்தான் முக்கியமாகிவிடுகிறது.

குஜராத்துக்காகப் போட்ட இந்த வேஷத்தை காங்கிரஸ் களையாவிட்டால், அதற்குக் கிடைக்க வேண்டிய ஆதரவு குறையத் தொடங்கும்.

அரசியல் களத்திலிருந்து மதவாத நச்சுகளை அகற்றுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும். இதை சமூக இயக்கமாகக் கடைப்பிடிக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. ராகுல் இதைப் புரிந்துகொண்டிருக்கிறார். கோயில்களுக்குச் செல்வது ‘மிதவாத இந்துத்துவா’ அல்ல, ‘புத்திசாலித்தனமான மதச்சார்பின்மை’ என்று தன்னுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கிறார் ராகுல்; பெரும்பான்மைச் சமூக மதத்துடன் அடையாளப்படுத்திக்கொள்ளும் அதே வேளையில், பேரினவாதத்துக்கு இரையாகிவிடாமலும், சிறுபான்மையினரின் அரசியல் சட்ட உரிமைகளை விட்டுத் தராமலும் இருக்கும் நிலையே தங்களுடையது என்று நிலைநாட்ட விரும்புகிறார்.

கத்தி மேல் நடப்பதைப் போன்ற சாகசம் இது, எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனால் காங்கிரஸுக்குக் கூடுதலாக எத்தனை வாக்குகள் கிடைத்தன என்று பார்க்க வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கையால் மிகவும் அரண்டது பாஜகதான்.

## சோதனைக் களம்

கட்சித் தலைவராக வழிநடத்திச் செல்ல ராகுலுக்குத் திறமை இருக்கிறதா என்பதைச் சோதிக்கும் களமாக அமைந்துவிட்டது குஜராத் தேர்தல். வாரிசு என்ற வகையில் கிடைத்த கட்சித் தலைவர் பதவிக்கு ராகுல் தகுதியானவர்தானா என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை அவருக்கு இருந்தது.

பாஜகவை நேருக்கு நேர் சந்திக்க காங்கிரஸால் முடியும் என்பதையும் இத்தேர்தல் காட்டியிருக்கிறது. அச்சத்தை ஊட்டும் கட்சிக்கு எதிராக, அன்பை விதைக்கும் மாற்று வழிமுறையை ராகுல் வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார். அச்சத்துக்கும் அன்புக்கும் இடையிலான கடும் மோதல்களின் வழியாக இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். இனி அந்த மோதல்கள் வாக்காளர்களின் மனங்களில்தான் நடைபெறும்.

*சுருக்கமாகத் தமிழில்: சாரி© ‘தி இந்து’ ஆங்கிலம்.*

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# தமிழே

## தமிழ்நாட்டில் அரசியல் வெற்றிடம் இருக்கிறதா?

உலகம் கதைகளால் ஆளப்படுவது என்று ஆழமாக நம்புபவன் நான். டெல்லியிலோ, சென்னையிலோ வசதியான அறைக்குள் உட்கார்ந்து புள்ளிவிவரங்களுக்குள் தலையைப் புதைத்துக்கொண்டு அரசியலை அணுகுபவர்கள் இதை ஒப்புக்கொள்ள மறுக்கலாம். ஆள நினைப்பவர்கள் முதலில் தங்களைப் பற்றிய கதைகளை உருவாக்குகிறார்கள்; கூடவே எதிரிகளைப் பற்றிய கிசுகிசுக்களையும் உருவாக்குகிறார்கள். கதைகளின் வழியாகவே அதிகாரத்தின் சூட்சமக் கயிறுகள் இயக்கப்படுகின்றன.



நரேந்திர மோடி அதிகாலை நான்கு மணி வரை உழைக்கிறார் என்று நேற்று செல்பேசிக்கு வந்த ஒரு கதை சொன்னது. ஆச்சரியம் என்னவென்றால், அவர் நள்ளிரவு மூன்றரை மணிக்கெல்லாம் எழுந்துவிடுகிறார் என்று முந்தைய வாரத்தில்தான் இன்னொரு கதையை வாசித்திருந்தேன். ஜெயலலிதாவின் மறைவு, கருணாநிதியின் ஓய்வுக்குப் பின் இப்படி தமிழ்நாட்டைச் சுழற்றியடிக்கும் ஒரு கதை, 'தமிழ்நாட்டு அரசியலில் பெரிய அரசியல் வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது!'

வாசகர்களைச் சந்திக்கையில், இப்போதெல்லாம் நான் அதிகம் எதிர்கொள்ளும் கேள்வி: 'ஊடகங்கள் சொல்கின்றனவே, இந்த வெற்றிடத்தை யார் நிரப்புவார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?' நான் பதிலுக்கு இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுவைக்கிறேன், 'வெற்றிடமா, அது எங்கே இருக்கிறது?' எனக்கு இந்தச் சந்தேகம் இருக்கிறது. உண்மையாகவே வெற்றிடம் வெளியே இருக்கிறதா அல்லது கதையாக உருவாக்கப்படுகிறதா?

கருணாநிதி, ஜெயலலிதா இருவருமே பெரும் ஆளுமைகள். இன்றைய தமிழக அரசியல் களத்தில் அவர்கள் இருவரின் இருப்பும் இல்லாமலிருப்பது ஒரு பேரிழப்பு; அவர்களுடைய வழித்தோன்றல்களை அவர்களோடு ஒப்பிட முடியாதது என்பது உண்மை. ஆனால், நினைவில் கொள்ளுங்கள். இன்று கருணாநிதி, ஜெயலலிதாவோடு அவர்களுடைய வழித்தோன்றல்களை ஒப்பிடுகையில் வழித்தோன்றல்கள் எப்படி பலவீனமாகக் காட்சியளிக்கிறார்களோ, அப்படியே நேற்று கருணாநிதி, ஜெயலலிதாவும் அவர்களுடைய முன்னோடிகளோடு ஒப்பிடுகையில் பலவீனமாகக் காட்சியளித்தவர்கள். அண்ணா காலத்திய அண்ணாவும் கருணாநிதியும் ஒன்றா அல்லது எம்ஜிஆர் காலத்திய எம்ஜிஆரும் ஜெயலலிதாவும் ஒன்றா?

திமுக, அதிமுக இரு கட்சிகளும் தலா கிட்டத்தட்ட ஒரு கோடிப் பேரை உறுப்பினர்கள், அபிமானிகளாகக் கொண்ட கட்சிகள். தமிழ்நாட்டு



மக்கள்தொகையுடன் ஒப்பிட்டால், மூன்றில் ஒரு பங்கினர் இந்த இரு கட்சிகளோடு தங்களை ஏதோ ஒரு வகையில் பிணைத்துக்கொண்டவர்கள். இரு ஆளுமைகளோடு எப்படி இரு கட்சிகள் காணாமல் போகும்?

அரசியல் இயக்கங்களை அவற்றின் பண்புகளோடு அல்லாமல் வெறும் தலைவர்களாகப் புரிந்துகொள்ளும் அபத்தத்தின் வெளிப்பாடு இது! ஒரு கேள்வி கேட்டுக்கொள்வோம், ஜெயலலிதா மட்டும்தான் அதிமுக என்றால், எப்படி அந்தக் கட்சி இன்னும் வலுவாக நீடிக்கிறது? தங்களுக்குள் பல கோஷ்டிகளாகப் பிரிந்திருக்கும் அதிமுகவினர் அதேசமயம் ஏன் வேறு கட்சிகளை நோக்கி நகராமல் இருக்கிறார்கள்? வெறுமனே ஆட்சியதிகாரம் மட்டுமே அதிமுகவின் கடைசி தொண்டரையும் அந்தக் கட்சியோடு பிணைத்திருக்கிறது என்று நான் நம்பவில்லை.



இந்தியா தன்னுடைய இயல்பில் ‘காங்கிரஸ்தன்மை’யை அதிகம் கொண்டிருக்கிறது என்றால், தமிழ்நாடு தன்னுடைய இயல்பில் அதிகம் ‘திராவிடத்தன்மை’யைக் கொண்டிருக்கிறது.

**சமஸ்**

திராவிடக் கட்சிகளின் அரசியல் கலாச்சாரமும் தமிழர்களின் அரசியல் கலாச்சாரமும் வெவ்வேறானவை அல்ல. திராவிடக் கட்சிகளின் சாதனைகள் தமிழர்களின் சாதனைகள் என்றால், திராவிடக் கட்சிகளின் இழிவுகளும் தமிழர்களின் இழிவுகள்தானே? வெறுமனே கட்சிகளை மட்டும் அவற்றுக்கு எப்படி பொறுப்பாக்க முடியும்?

ஜனநாயகத்தை நேசிக்கும் ஒருவனாக நீண்ட கால நோக்கில் இந்த ஓராண்டு தமிழக அரசியல் நகர்வுகளை ஆக்கபூர்வமானவையாகவே பார்க்க விரும்புகிறேன். கருணாநிதி, ஜெயலலிதா இருவருடைய ஆளுமையின் மறைவிலிருந்த நம்முடைய அமைப்பின் பல பலகீனங்களை இந்த ஓராண்டின் நகர்வுகள் அம்பலப்படுத்தி இருக்கின்றன. ஆளுநர் நடத்தும் ஆய்வுகள் முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் பன்னீர்செல்வத்தின் பலகீனத்தை மட்டும் அல்ல; அரசியலமைப்பின் கோளாறுகளையும் சேர்த்துதானே காட்டுகின்றன?

சிக்கல்களினூடாகத்தான் தலைவர்கள் உருவெடுக்கிறார்கள். கருணாநிதி, ஜெயலலிதா இருவருக்குப் பின்னும் அப்படி இரு தலைவர்கள் உருவெடுத்துவிட்டதாகவே தோன்றுகிறது.

எண்ணிக்கை பலமற்றதும் அழுத்தப்பட்டதுமான



ஒரு சமூகத்திலிருந்து வந்த கருணாநிதி இந்தச் சாதிய சமூகத்தில் இத்தனை ஆண்டுகள் திமுக எனும் பேரியக்கத்தைக் கட்டியாண்டது ஒரு பெரும் சாதனை என்றால், எந்தச் சலனமுமின்றி கருணாநிதியைப் பதிலீடு செய்து அந்த இடத்தில் ஸ்டாலின் உறுதியாக அமர்ந்ததும், கட்சியை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததும் குறிப்பிடத்தக்க தொடக்கமே!

ஜெயலலிதாவுக்குப் பின் எதிரே பிரதான கட்சியான அதிமுக முழுக்க தமிழ்நாட்டின் பெரும் சாதிகளின் ஆதிக்கத்துக்குள் போய்விட்ட நிலையில், திமுக அந்த அலைக்குள் சிக்காததோடு மெல்ல எல்லாச் சமூகங்களுக்குமான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் முனைப்பையும் வெளிப்படுத்திவருகிறது. ராசாவின் எழுச்சியும் கட்சியின் ஒரே தலித் மாவட்டச் செயலரான கணேசனுக்கு ஸ்டாலின் அளிக்கும் முக்கியத்துவமும் கட்சியின் அக்கறைகள் நகரும் திசையைத் துல்லியமாகச் சொல்கின்றன.

அதிமுக — திமுக இரு கட்சிகளுக்கும் இடையிலான எண்ணிக்கை வேறுபாடு சட்ட மன்றத்தில் மிகக் குறைவாகவே இருக்கும் சூழலிலும், “எந்தக் கட்சியையும் உடைத்து ஆட்சி அமைக்கப்போவதில்லை” என்ற ஸ்டாலினின் அறிவிப்பை முக்கியமானதாகப் பார்க்கிறேன். ‘தேர்தலில் தோற்றாலும் பரவாயில்லை; இனி ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் இழிவு வேண்டாம்’ என்ற அவருடைய நிலைப்பாடு இன்று அவருக்குத் தோல்வியைத் தந்திருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தை மேம்படுத்துவதோடு கட்சியின் கண்ணியத்தையும் வளர்த்தெடுக்கும் முடிவு அது. கடந்த கால தவறுகளிலிருந்து கட்சியை மீட்டெடுப்பதில் ஸ்டாலின் கொண்டிருக்கும் பொறுப்பை இது உணர்த்துகிறது.

வெட்டு ஒன்று — துண்டு இரண்டு என்று பேசும் ஸ்டாலினின் அணுகுமுறை கருணாநிதியினுடையது அல்ல. ஆனால், கடந்த கால அலங்காரப் பேச்சுகளிலிருந்து திமுக விடுபடுவதும் கூடுதல் வெளிப்படைத்தன்மையான மொழிக்கு அது மாறுவதும் நல்லது என்றே நினைக்கிறேன்.

மோடிக்கு எதிராகத் திரள்வது தொடர்பாக நாடு முழுக்க எதிர்க்கட்சிகள் பேசிவந்தாலும், தேசிய அளவில் ஒரு குடைக்குள் எதிர்க்கட்சிகள் இன்னும் திரண்ட பாடில்லை. பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் இன்னும் மோதிக்கொண்டிருக்கின்றன. ஸ்டாலினால் தமிழ்நாட்டில் ஒரு கூட்டணிக்கு வித்திட முடிந்திருக்கிறது. தன்னுடைய கடுமையான விமர்சகரான வைகோவை அவர் உள்ளிழுத்தது அவரிடம் வளர்ந்துவரும் நெகிழ்வுத்தன்மைக்கு உதாரணம்.

திமுகவுக்குள் இளைய தலைமுறையினரை



வளர்த்தெடுக்கும் முயற்சிகள், சித்தாந்தரீதியிலான சரிவிலிருந்து கட்சியை மீட்டெடுக்கும் முனைப்புகள்




தொடங்கியிருப்பதைக் கட்சிக்குள் பேசுகிறார்கள். திருமணங்கள், கூட்டங்களில் புத்தகங்களைப் பரிசளித்துக்கொள்வதில் தொடங்கி கட்சியின் கடந்த கால வரலாற்றை இளையோருக்குக் கடத்தும் நிகழ்ச்சிகள் வரை பட்டியலிடுகிறார்கள். இவை யாவும் நல்ல அறிகுறிகள்.

எதிரிலும் மாற்றங்கள் தெரியத் தொடங்கியிருக்கின்றன. அதிமுகவுக்குள் ஓராண்டாக நடந்துவரும் அதிகாரச் சண்டைகளின் மத்தியில், அடுத்த தலைமைக்கான அக்கட்சியினரின் தேடலுக்கு ஆர்கே நகர் தேர்தல் முடிவு ஒரு தெளிவைக் கொடுத்திருப்பதுபோலவே தோன்றுகிறது. கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு தினகரன் பேட்டிகளையும் பேச்சுகளையும் ஒரு பெரிய கூட்டம் ரசிப்பதை இன்று பார்க்க முடிகிறது. காரணம் இல்லாமல் இல்லை. சமகால அரசியல் மொழியிலிருந்து மாறுபட்ட ஒரு மொழி அவருக்குச் சாத்தியமாகி இருக்கிறது.

பழனிசாமி, பன்னீர்செல்வம்போல பதுங்காமல் ஊடகங்களுக்கு முகங்கொடுப்பதும், அலட்டிக்கொள்ளாத உடல்மொழியோடு யதார்த்த தளத்தில் உரையாடுவதும், எந்தக் கேள்விக்கும் சிரித்தபடி அனாயசமாக பதில் அளிப்பதுமான அணுகுமுறை அவர் மீதான கவன ஈர்ப்பின் மையமாக மாறியிருக்கிறது. எம்ஜிஆரோ, ஜெயலலிதாவோ விவரிக்காத கட்சியின் கள அரசியல் நிலவரங்களை தன்னுடைய விவாதங்களின் வழி மையப்புள்ளிக்கு தினகரன் கொண்டுவருகிறார். தேவையற்ற போலி மதிப்பீடுகளையும் பிம்பங்களையும் உடைக்கிறார். “அரசியல்வாதிகளுக்கு வசதி எங்கிருந்து வருகிறது?” என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு, “அரசியல்வாதி என்றால் கோவணத்தோடு நிற்க வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்?” என்ற அவருடைய பதில் கேள்வியை ஒரு பதமாகச் சொல்லலாம்.

கீழ் நிலையிலுள்ள அதிமுக தொண்டர்களிடம் பேசுகையில் எதிர்வரவிருக்கும் கணக்குகள் மேலும் துல்லியமாகின்றன. “மாநில அரசாங்க இயந்திரம், மத்திய அரசாங்க துணை, பணம் இவ்வளவும் இருந்தும் பழனிசாமி — பன்னீர்செல்வம் ரெண்டு பேரும் சேர்ந்து தினகரனைத் தோற்கடிக்க முடியலை. பொதுவில பேசுறவங்க அவரு காசு கொடுத்து ஜெயிச்சுட்டாருன்னு பேசுறாங்க. நேத்திக்கு ஜெயலலிதாவும் இங்கே செலவு செஞ்சுதான் ஜெயிச்சாங்க. எம்ஜிஆர், ஜெயலலிதா ரெண்டு பேருமே எல்லாருக்கும் முன்னாடி கெத்தா நின்னவங்க. அதிமுக தலைமைன்னா அப்படி ஒரு கெத்து வேணும். டெல்லியை எதிர்க்குற கெத்து தினகரனுக்கு இருக்கு. பழனிசாமியோட ஆட்சி போனா கட்சி தினகரன்கிட்ட போயிடும்!”

மதச்சார்பின்மைப் பாதையே தன் பாதை என்றும் பாஜக நிரந்தரமான எதிரி என்றும் தினகரன் அறிவித்ததும் முன்னதாக அலைக்கற்றை வழக்கிலிருந்து கனிமொழி விடுவிக்கப்பட்டபோது “ஒரு தமிழனாக இதை வரவேற்கிறேன்” என்று சொன்னதும் அரசியலில் வேறொரு தளம் நோக்கியும் தினகரனை நகர்த்தியிருக்கின்றன.


விருப்பங்களுக்கும் விளைவுகளுக்கும் அப்பாற்பட்டு ஒரு விஷயம் திட்டவட்டமாகப் புலப்படுகிறது. ஸ்டாலினும் தினகரனும் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தை நிர்ணயிப்பதற்கான எல்லா அறிகுறிகளும் வெளிப்படுகின்றன. இவர்கள் இருவரும் தமிழகத்தின் இரு துருவ அரசியல் குமிழுக்குள் பொருந்தும் சூழலில் வெற்றிடம் எங்கே இருக்கிறது?

எல்லாக் கதைகளுமே அதன் முழு இலக்கையும் எட்டிவிடுவதில்லை. ரஜினி, கமல், விஷால் எல்லோருமே அரசியலுக்குள் வரலாம். அவர்களுக்கான இடத்தை அவர்களே உருவாக்க வேண்டும். காலியிடம் என்று ஏதுமில்லை!

# மக்களா?

### கொள்கை வகுப்பதில் மக்களுக்குப் பங்கில்லையா?

அரசின் கொள்கைகளை வெறுமனே எதிர்ப்பது மட்டும் பயன் தராது. அதற்கு மாற்றாகச் செய்ய வேண்டியது என்ன என்று மக்களே முன்வந்து 'பெரும் பாய்ச்சலுக்கான பிரகடனம்' ஒன்றைத் தயாரிப்பதும் முக்கியம். கனடாவில் இதற்கு 'லீப் மேனிஃபெஸ்டோ' என்று பெயரிட்டிருக்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில், பெர்னி சாண்டர்ஸ், ஜெரிமி கோர்பின், அர்விந்த் கேஜ்ரிவால் என்று வழக்கமான அரசியல்வாதிகள் அல்லாத தலைவர்கள் மக்களுடைய கவனத்தை ஈர்த்திருப்பதற்குக் காரணம் மாற்று அரசியல் பிரகடனம்தான்.




கனடாவில் 2015—ம் ஆண்டு வசந்த காலத்தில் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 60 தன்னார்வத் தொண்டர்கள் ஒரே இடத்தில் கூடினர். பருவநிலை மாறுதல், பூர்வகுடிமக்களுக்கான உரிமைகள், சமூக நீதி, உணவு நீதி, தொழிலாளர் நல இயக்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் அவர்கள்.

### தீர்வுகளை நோக்கி

தங்களுடைய பிரச்சினைகளுக்காக மட்டும் போராடாமல் அனைத்துப் பிரச்சினைகளையும் ஒட்டுமொத்தமாக இணைத்து, நாளைய உலகுக்காகப் பொதுத் திட்டங்களை வகுத்தால் என்ன என்று தங்களுக்குள் விவாதித்தார்கள். இன்னின்ன நெருக்கடிகளை முதலில் கவனிக்க வேண்டும் என்ற வற்புறுத்தல்கள் இல்லாமல் பொறுமையாக விவாதித்து, ஒட்டுமொத்தத் தேவைகளைக் கொண்ட அறிக்கையைத் தயாரித்தார்கள். நெருக்கடிகளை அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் மாற்றுத் திட்டங்களையும் கூட உருவாக்கினர். பிரச்சினைகள் பெரிதாகிவிட்டதால் தீர்வை நோக்கி வெறும் அடிமேல் அடி எடுத்து வைத்தால் போதாது, அது பெரும் பாய்ச்சலாக இருக்க வேண்டும் என்பதற்காக அதை 'லீப் மேனிஃபெஸ்டோ' என்றார்கள்.


நிலங்களைப் பண்படுத்தி விவசாயம் செய்யும் விவசாயிகளின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்; அனைவருக்கும் திட்டவட்டமான ஆண்டு வருமானத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் அறிக்கை தயாரிக்கப்பட்டது. கல்வி, சுகாதாரத்துக்குக் குறைந்த நிதியை அரசு முதலீடு செய்வதையும்,




அருண் பிலிப் சைமன்

சிக்கனம் என்ற பெயரில் மின்சக்தி தயாரிப்புத் துறையைச் சிறிதும் அக்கறையில்லாமல் தனியார்மயமாக்குவதையும் அந்த அறிக்கை கண்டித்தது. நிலம், நீர், காற்றை மாசுபடுத்தாத மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அந்த அறிக்கை, மின்னாற்றல் மூலங்கள் அனைத்தும் சமூகத்துக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டுமே தவிர தனியாருக்கு அல்ல என்றது.

பொதுப் போக்குவரத்து வழிமுறைகளை அதிகப்படுத்த வேண்டும் என்பது இன்னொரு வலியுறுத்தல். இத்தகைய யோசனைகள், கோரிக்கைகளை எல்லா நகரங்களிலும் அரங்கக் கூட்டங்களில் வெளியிட்டு உள்ளூர் சமூகங்களின் யோசனைகளையும் கோரிக்கைகளையும் ஏற்க ஜனநாயகரீதியில் வாய்ப்புகள் தரப்படுகின்றன. இவையெல்லாம் ‘கற்பனைக் கனவு’ என்று கூறவே பலருக்கும் தோன்றும். முடிவுகளை எடுப்பதில் பெருநிறுவனங்களுக்கு இருக்கும் ஏகபோகத்தை முறியடிப்பதில் இதன் சாத்தியக்கூறு அடங்கியிருக்கிறது.





### இந்தியப் பின்னணியில்

இந்தியாவுக்குள்ள நெருக்கடிகள், கனடாவுக்குள்ள நெருக்கடிகளிலிருந்து வேறுபட்டவை. பட்டியல் இனத்தவரின் பிரச்சினைகளுக்கும் சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ‘என்னுடைய பிரச்சினை உன்னுடைய பிரச்சினையைவிடப் பெரியது,முக்கியமானது’ என்ற அணுகுமுறை நம்மை வலுவிழக்கச்செய்துவிடும். நம்முடைய பிரச்சினைகளுக்குள்ள சங்கிலித் தொடர்பை அடையாளம் கண்டு, பொதுவான கோரிக்கை அறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

இதில் தொடர்புபடுத்தும் சில கண்ணிகளை இங்கே குறிப்பிடுகிறேன். பருவநிலை மாறுதல் காரணமாக ஏழைகள், விவசாயிகள், பூர்வகுடிகள்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பெரு நிறுவனங்களுக்கு ஆதரவாக அரசுகள் எடுத்த முடிவுகள், அவர்கள் மீதான கண்காணிப்புகளையும் கட்டுப்பாடுகளையும் பெருமளவுக்குத் தளர்த்திவிட்டன. இதனால் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல ஏற்றத்தாழ்வும் அதிகரித்துவருகிறது.

பெரும் பணக்காரத் தொழிலதிபர்களுக்குத் தரப்படும் வரிச் சலுகைகளால் சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்க முடியாமல் நிதிப்பற்றாக்குறை ஏற்படுகிறது. நடுத்தர வர்க்கத்துக்கு வருமானம் அதிகரித்தால் அது பொருளாதாரத்துக்கு உதவும் என்பது நடக்கவில்லை. வருமான ஏற்றத்தாழ்வுகள் இந்தியாவில் வேகமாக அதிகரித்து வருகின்றன. மக்களுடைய கவனத்தைத் திசைதிருப்பும் வகையில்




என்று சமீரா ஐயங்கார் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். மக்களை ஒடுக்குவதற்காகப் புதிது புதிதாக தொன்மங்கள் உருவாக்கப்படுகின்றன. அவையனைத்தும் உண்மைகள் என்றே கூறப்படுகின்றன. எனவே அநீதி இழைக்கப்பட்டால்கூட அந்த அமைப்பை எதிர்த்துப் போராடுவது மக்களுக்குக் கடினமாக இருக்கிறது.

நியாயமான, சுதந்திர நாடு வேண்டும் என்றுதான் சுதந்திரத்துக்காகப் போராடிய தியாகிகள் விரும்பினார்கள். நம்முடைய அரசியல் சட்டத்தின் முகப்புரையும் அதைத்தான் உறுதிகூறுகிறது. அதுவே இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையுமாக இருக்கிறது. எனவே பெரும் பாய்ச்சலான தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பது நம்முடைய அறிவுஜீவிகள், தன்னார்வத் தொண்டர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், விவசாயிகள், பட்டியல் இனத்தவர், பூர்வகுடிகள் என்று அனைவருக்குமான கடமையாகிறது. நம்முடைய பன்முகத்தன்மையைக் கொண்டாடும் விதத்தில்கூட இந்த அறிக்கையைத் தயாரிக்கலாம். மத்திய, மாநில அரசுகளே கொள்கை தயாரிப்பில் ஈடுபடுவதால் அனைத்து இந்திய அளவில் மக்களிடையே இந்த விஷயத்தில் எதிர்வினை அவசியம். மக்கள் மேடை தலைமைதாங்கத் தொடங்கினால், அரசியல்வாதிகள் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று நவோமி கிளின் கூறியிருக்கிறார்!

வெவ்வேறு பிரிவினருக்கு வெவ்வேறு கொள்கைகளை அரசு கடைப்பிடிக்கிறது.




## முக்கிய சவால்கள்

‘சமூகம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது; அதில் ஒரு பகுதி மற்றதைவிட அதிக உரிமைகள் கொண்டதாக இருக்கிறது’ என்று பிரெஞ்சு தத்துவ அறிஞர் ழாக் தெரிதா கூறுகிறார். நூற்றாண்டுகளாகத் தொடரும் இந்தப் பாகுபாட்டால் இந்த ஏற்றத்தாழ்வுகள் இயல்பானவைதான் என்ற மனநிலையை மக்களிடையே ஏற்படுத்திவிட்டது. நாம் வித்தியாசமானவர்கள், ஆனால் சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம். நியாயமான சமூகம் ஏற்பட இந்த உண்மை மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

அதிகாரிகளின் திறமைக் குறைவால் பல துயரங்கள் நேர்கின்றன. வலியால் துடிக்கும் மக்களுக்கு வலிமறப்பு மாத்திரைகள்தான் தரப்படுகின்றன. அவர்களைச் சமாதானப்படுத்த, பலியாடுகள் அடையாளம் காணப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றன. சமூகத்திருக்கும் நினைவிழப்பு நோய், வலி என்பது நம்முடன் சேர்ந்ததுதான் என்ற உணர்வை ஊட்டி நம்மை அப்படியே தொடரவைக்கிறது.

“நான் தொன்மங்களை விரும்புகிறேன், அறிவியலையும் விரும்புகிறேன்; இரண்டுமே வெவ்வேறு உண்மைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இரண்டுமே தத்தம் துறையில் முக்கியமானவை. இரண்டையும் கலந்தால் இரண்டுமே மதிப்பிழந்துவிடும். இதை அப்படியே பரப்புவது இதைவிடப் பெரிய ஆபத்து”

தமிழில்: சாரி, © தி இந்து ஆங்கிலம்.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*



# விடை

## நீதியின் மேலான அநீதி

மரண தண்டனை என்பது கொலைகாரர்களுக்கும் அரசுக்குமானது மட்டுமல்ல. அது சமூகம் சம்பந்தப்பட்டது. ஒரு நாட்டின் நீதி, பண்பு பற்றியது.

மக்களின் தாராள குணம், கலாசாரம், மன்னிக்கும் மாண்பு பற்றியது. எனவேதான் அரசும், ஆளப்படும் மக்களும் எல்லா அம்சங்களிலும் ஒன்றில்லை. பல அம்சங்களில் எதிரெதிராக இருக்கிறார்கள். அதில் முதலில் இருப்பது மரண தண்டனை வழங்குவது பற்றியதுதான்.

ஒரு நாடு நாகரிகமான நாடு, முன்னேற்றம் அடைந்த நாடென்றால் அது மரண தண்டனையை ஒழித்த நாடுதான்.


உலகத்தில் 147 நாடுகள் சட்டப்பூர்வமாக மரண தண்டனையை ஒழித்துவிட்டன. ஆனால், செல்வ வளம் கொழிக்கும் நாடான, படித்தவர்கள் நிறைந்த நாடான அமெரிக்கா மரண தண்டனை விதிக்கும் நாடாக இருக்கிறது. பழைமையான நாகரிகமும், பண்பாடும் கொண்ட சீனாவில்தான் அதிகமானவர்கள் மரண தண்டனை பெறுகிறார்கள்.

ஜப்பான், வங்கதேசம், பல அரபு நாடுகள் உள்பட 47 நாடுகளில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை உண்டு. இந்தியாவில் நீதிமன்றங்கள் மரண தண்டனை விதிக்கின்றன. இந்தியாவின் பாரம்பரிய கோட்பாடுகளில், மரண தண்டனை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

1983—ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம், 'அரிதினும் அரிதான வழக்குகளில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கலாம்' என்றது. அரிதான ஒன்றுக்கு மரண தண்டனை என்பதால் அது புனிதமானதாகிவிடாது. அது உயிர் பறிக்கும் கொடுஞ்செயல்தான்.

மனிதர்கள் ஏன் சகோதர மனிதர்களை கொலை செய்கிறார்கள் என்பதை அரசியல், சமூக, பொருளாதார உளவியல் அடிப்படையில் ஆராய்ந்தார்கள்.

கொலைக்கு உளவியல் ஒரு காரணமாக இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது மற்றவர்கள் மீது கொள்ளும் வெறுப்பு, பகைமை, பொறாமை அவர்கள் அவதூறு செய்வது, அவமானப்படுத்துவது என்பனவற்றாலும், பாலியல் ஈடுபாட்டாலும் கொலை செய்கிறார்கள். கொள்ளையடிக்கும்போது எதிர்க்கிறவர்களையும் கொல்கிறார்கள்.






# கொடுப்போம்
## மரண தண்டனைக்கு !

தன் குடும்பத்தின் கௌரவம், பெண்களின் மாண்பு நிந்திக்கப்படும்போது நேரடியாகவோ, கூலிப்படையை விட்டோ கொலை செய்கிறார்கள்.

பிடிபட்டால் உயிர் பறிக்கப்படும் என்பது தெரிந்து இருந்தாலும், அது பற்றி கவலைப்படாமல் கொலை செய்கிறார்கள். இது பல்லாண்டுகளாக நடந்து வருகிறது என்பதால் அரசு பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எதற்காக நடந்தது என்பது அதற்கு முக்கியமில்லை. நடந்துவிட்டது. அதற்குக் காரணமானவர்கள் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக காவல் துறை, நீதி துறையை அரசு அமைத்து இருக்கிறது. இவை மக்கள் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு. ஆனால் இவ்விரண்டும் எப்பொழுதும் எல்லா மக்களுக்கும் சம அளவில் கிடைப்பதில்லை.

மரண தண்டனை பெறுகிறவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏழைகள், படிப்பறிவு அற்றவர்கள். பெரிய வக்கீல்கள் வைத்து வாதாட பண வசதியற்றவர்கள். எனவே 'சந்தேகத்தின் பலனைப் பெற முடியாமல்', தூக்கு தண்டனை பெற்றுவிடுகிறார்கள்.




**சா. கந்தசாமி**

தண்டனை என்பது இரண்டு அம்சங்கள் கொண்டது. முதல் அம்சம், குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்க வேண்டும். இரண்டாவது அம்சம், மக்கள் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் பயம் கொள்ள வைப்பது. சட்டம் ஒரே நேரத்தில் இரண்டு காரியங்கள் செய்கிறது. ஒன்று வெளிப்படையாகத் தெரிவது. அதுதான் கொலைக்குப் பதில் கொலை. இரண்டாவது ஓர் உயிரைப் பறித்தால் பறிக்கிறவர் உயிர் பறிக்கப்படும் என்று சொல்லாமல் சொல்வது.

கொலைக்குக் கொலை என்பது பழி வாங்குவதுதான். நீதி வழங்குவதல்ல. ஆனால் உயிர் என்பது பண்டமாற்றுப் பொருளில்லை. ஓர் உயிரைக் கொடுத்து இன்னோர் உயிரை மீட்டெடுக்க முடியாது. போனது, இல்லாமல் போனதுதான்.

எனவேதான் மரண தண்டனை என்பது எதற்கும் தீர்வாகாது. அது அப்பட்டமான பழி வாங்கும் காரியம். நாகரிக உலகத்தில் நகைப்பிற்குரியது. மனித வளர்ச்சி, முன்னேற்றம் என்பதையெல்லாம்

பின்னுக்குத் தள்ளிவிடுகிறது.

மரண தண்டனை என்பது, பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு 'பழி வாங்கப்பட்டுவிட்டது' என்ற மன நிறைவு ஏற்படலாம். ஆனால், குற்றத்திற்கு தண்டனை இருக்கிறது என்பதாலேயே அதற்கு பயந்து எவரும் குற்றம் செய்யாமல் இருப்பது இல்லை. பயமுறுத்தி மனிதர்களை அடக்கிவிட முடியாது என்பதுதான் சரித்திரமாக இருக்கிறது.




ஏசுநாதர் பிறப்பதற்கு 1,700 ஆண்டுகளுக்கு முன்னால் சுமேரியாவை ஆண்ட ஹம்முராபி என்ற மன்னன் குற்றம்—தண்டனை பற்றி கல்வெட்டில் பொறித்து வைத்திருக்கிறான். அதில் முதல் சட்டம், கொலைக் குற்றம் செய்தவனுக்கு மரண தண்டனை. அவன் கல்வெட்டில் 25 வகையான குற்றங்களுக்கும் மரண தண்டனை என்று இருக்கிறது. அது காலத்தால் பழையதாகிவிடவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் சிறிது மாற்றிக்கொண்டு செயல்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணுக்குக் கண் என்றால் உலகம் முழுவதும் பார்வையற்றவர்களே இருப்பார்கள்' என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டார்.

ஒரு நாட்டில் மரண தண்டனை என்பது திருடர்கள், கொள்ளைக்காரர்கள், பயங்கரவாதிகளுக்கானது என்பது மட்டுமல்ல. அசலான காரணங்களுக்காக அரசை எதிர்த்துப் பேசுகிறவர்கள், எழுதுகிறவர்கள், புரட்சி செய்கிறவர்களுக்கும்கூட ஆனதுதான்.

அரசாங்கம் என்பது மேதைகள், மனிதாபிமானிகள், சமூக சீர்திருத்தவாதிகள், விஞ்ஞானிகள், சமரசம் அற்ற எழுத்தாளர்கள் மட்டுமே கொண்டதில்லை. சர்வாதிகாரிகள், மக்கள் விரோதிகள் ஆட்சியைப் பிடித்துக்கொண்டு உத்தமர்களைப் பிடித்து மரண தண்டனை கொடுப்பதும் காலம் காலமாக நடந்துகொண்டே வருகிறது. அதில் பொதுமக்களும் உற்சாகத்தோடு கலந்துகொண்டு தண்டனை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதுதான் வரலாற்றின் முரண்.

'சிந்தியுங்கள். ஒவ்வொன்றையும் நன்கு பரிசீலனை செய்யுங்கள். பரிசீலனைக்கு உட்படாத வாழ்க்கை சாரமற்றது' என்று சொன்ன சாக்ரடீஸை குற்றவாளி என்று பிரதிநிதிகள் சபைதான் அறிவித்தது.

பின்னர் அதுவே அவர் நஞ்சுண்டு சாக வேண்டுமென தீர்ப்பு வழங்கியது. அதனை அவர் ஏற்றுக் கொண்டார்.

சிறைக்குச் சென்றார். நண்பர்களோடும், சீடர்களோடும் உரையாடிக் கொண்டே இருந்தார். ஒரு காவலர் நஞ்சோடு வந்தார். சாக்ரடீஸ் நஞ்சுக் கோப்பையை கையில் வாங்கிக்கொண்டு, "நாம் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் சாகப் போகிறேன். அவர்கள் வாழப் போகிறார்கள். ஆனால் யார் சாகப் போகிறது, யார் வாழப் போகிறது என்று கடவுள் அறிவார்" என்றார்.

### சாக்ரடீஸ் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்.

யேசு கிறிஸ்து விஷயத்திலும் அதுவே நடந்தது. யேசுநாதர் மீது குற்றம் இல்லையே என்று அவருக்கு தண்டனை கொடுக்க கவர்னர் மறுத்துவிடுகிறார். ஆனால், கூடி இருந்த மக்கள் யேசுவைத் தண்டிக்க வேண்டுமென்று கூச்சலிட்டு சிலுவையில் அறைய வைத்துவிட்டார்கள்.

ஒரு மனிதரைக் குற்றவாளி என்று தீர்மானித்து மரண தண்டனை கொடுக்க நீதிபதிக்குச் சாட்சிகள், ஆவணங்கள், வக்கீல்கள் மட்டுமே போதுமானவை இல்லை. பல நேரங்களில் உண்மையான குற்றவாளியை விட்டுவிட்டு அப்பாவி மீது சகலவிதமான குற்றங்களையும் ஏற்றி மரண தண்டனை வழங்கப்படுவதும் உண்டு.

நாட்டில் பொது அமைதியை ஏற்படுத்தவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், மக்களிடையே பயத்தை நிரந்தரமாக ஏற்றி வைக்கவும், சந்தேகப்படும் ஆளை குற்றவாளியாக்கி மரண தண்டனை கொடுத்து அரசாங்கம் திறமையாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை நிலைநாட்டவும் அவசியம் இருக்கிறது என்று சமூக விமர்சகர்கள் சொல்கிறார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஏற்பட்ட பின்னர், அது நாடு பிடிக்க முற்பட்டபோது, அதனை எதிர்த்த கட்டபொம்மன், மருது சகோதரர்களை பொது இடத்தில் தூக்கில் போட்டு மக்களைப் பயமுறுத்தியது.

இங்கிலாந்தில் திருட்டுக் குற்றத்திற்காக ஒருவனை பொது இடத்தில் தூக்குப் போடவிருந்தார்கள். அதனை வேடிக்கை பார்க்க பெரும்

திரளானவர்கள் கூடியிருந்தார்கள். அவர்களிடம் இருந்து பணத்தைத் திருடர்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்.


பிரான்ஸ் நாட்டில் சமூகப் புரட்சி ஏற்பட்டுப் புதிய அரசு ஏற்பட்டது. அந்த அரசு பிரெஞ்சு மன்னர், அரசி உள்பட ஆயிரக்கணக்கானவர்களைக் கில்லட்டின் என்ற இயந்திரத்தில் வைத்து தலையை வெட்டியது.

மனிதர்கள் பற்றி எத்தனைதான் உயர்வாகச் சொன்னாலும், அவர்களிடம் இயற்கையாகவே கொடூரமான எண்ணங்கள் பல இருக்கின்றன. ஒருவனைக் கொல்ல விரும்பாவிட்டாலும், ‘குற்றவாளி’ என்று அரசு முத்திரை குத்தி மரண தண்டனை கொடுப்பதை மக்கள் அங்கீகரிக்கிறார்கள். அதனைப் படித்து, படமாகப் பார்த்து சந்தோஷம் அடைகிறார்கள். அதனை அரசு நியாயப்படுத்திக் கொண்டே வருகிறது. அதுதான் மிகவும் மோசமான செயற்பாடு.

மரண தண்டனை மூலமாக ஓர் உயிர் பறிக்கப்படுகிறது என்பதைத் தவிர, அதில் வேறொரு பயனுமில்லை. அதோடு அது அப்பட்டமான மனித உரிமை மீறல்.

ஒரு கொலையை அங்கீகரிக்க முடியாது என்பதுபோல அரசாங்கத்தின் மரண தண்டனையையும் ஏற்க முடியாது. மரண தண்டனை அவசியம் என்று சொல்வதற்கான எல்லா காரணங்களும் அர்த்தம் இழந்துவிட்டன.

மரணதண்டனை என்பது, ஒரு அதிகார நிறுவனம் தனது நடவடிக்கைகளூடாக மனிதர் ஒருவரின் உயிர்வாழ்வைப் பறிக்கும் தண்டனை ஆகும். மனிதர் இழைக்கும் குற்றம் அல்லது தவறு அவரின் உடல் சார்ந்த செயல்பாடாகப் புரிந்துகொள்ளப்பட்ட தொன்மைக்கால தண்டனை முறைகளில் இதுவும் ஒன்றாகும். திருட்டைச் செய்த மனிதரின் கை துண்டிக்கப்படுதல், வேதத்தைக் கேட்டதற்காக காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுதல் போன்ற தண்டனை முறைகளுக்கும் மரண தண்டனைக்கும் இடையிலான கோட்பாட்டு அடிப்படை ஒன்றேயாகும். மிகப் பழைய காலம் முதலே கடுமையான குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு வந்துள்ளது. அதில் குறிப்பானது கொலையாகும். எல்லா நாடுகளிலும் கொலைக்கு மரணதண்டனை விதிக்கப்படுதல் ஏதேனும் ஒரு காலப்பகுதியில் நிலவிவந்துள்ளது. எனினும் கடுமையான குற்றம் எது என்பது அவ்வச் சமூகங்களின் பண்பாடு, அரசு அல்லது அரசனின் கொள்கைகள், அரசியல் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபட்டு அமையும். இத் தண்டனை நிறைவேற்றப்படும் முறையும் நாட்டுக்கு நாடும், காலத்துக்குக் காலமும் வேறுபாடாக இருந்து வந்துள்ளன. தலையை வாளினால் அல்லது வேறு முறைகள் மூலம் துண்டித்தல், கழுவில் ஏற்றுதல், கல்லால் எறிந்து கொல்லுதல், கல்லில் கட்டிக் கடலில் எறிதல், கம்பத்தில் கட்டிவைத்துச் சுடுதல், கழுத்துவரை நிலத்தில் புதைத்து யானையால் மிதிக்கச் செய்தல், காட்டு விலங்குகளுக்கு இரையாக்குதல், தூக்கில் இடுதல், உயிருடன் புதைத்தல், நஞ்சூட்டுதல், துப்பாக்கியால் சுடுதல், மின்னதிர்ச்சி கொடுத்தல் போன்று பல முறைகள் கையாளப்பட்டு வந்துள்ளன.




கொலை, தேசத்துரோகம், அரசுக்கு அல்லது அரசனுக்கு எதிரான சதி செய்தல் போன்ற குற்றங்கள் பரவலாக மரணதண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டவை. இவை தவிர அரசு சார்பான மதங்களுக்கு எதிரான குற்றங்கள், பாலியல் குற்றங்கள் போன்றனவும் சில சமூகங்களில் மரண தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்படுகின்றன. தற்காலத்தில் சில நாடுகளில் போதை மருந்துகளைக் கடத்துதல் போன்றவையும் மரணதண்டனைக்கு உரிய குற்றங்களாக ஆக்கப்பட்டுள்ளன.

மரணதண்டனை நவீன நீதிமுறைகளின் அடிப்படைக்கோட்பாடுகளுக்கு எதிரானது என்றும் அதனை ஒழிக்கவேண்டும் என்றும் பல்வேறு கருத்துகள் வலுப்பெறத் தொடங்கிய பின்னர் பல நாடுகள் மரணதண்டனையை முற்றாக ஒழித்து விட்டன. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் இப்போது மரணதண்டனை விதிக்கப்படுவது இல்லை. வேறு பல நாடுகளிலும் இது பற்றிய விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

# சமுதாயச் சதுரங்கம்

"அனைத்தும் சமம்" எனக் கூறும்
சமத்துவவாதிகள் சரிகிறார்கள்
பொருளாதாரத்தில் கூடுதலால்

சமுதாயத்திற்காக சரணடையும்
சாமியார்கள் சரணம் பாடுகிறார்கள்
கழுதைக்குரலில்

சமத்துவத்தை சாடும் சராசரிகள்
தன் சமூகத்தையே
சுரண்டும் கரையான்கள்.

சமுதாயத்திற்காக உண்மை கூறும்
உத்தமர்களுக்கு
சங்கு ஊதுகிறார்கள் சமர்த்தர்கள்
சமுதாயம் ஓர் சதுரங்கம்
சாணக்யராய் சதுராடினால்
சகலமும் சரியாகும்
இந்த சமுதாயத்தில்.

வெங்கடேஷ்

# நானறியேன் விடைதனை

ஒருவேளை சோற்றுக்கு
ஓடாய் உழைக்கும்
மனிதனும் இங்கே...

நல்லவராக வேடமிட்டு
கொள்ளையடிக்கும்
கூட்டமும் இங்கே...
அடுத்த வேளைக்கு வழியின்றி
தவிக்கும் வறியவனும் இங்கே...

அடுத்தவர் சொத்தை
திட்டமிட்டு அபகரிக்கும்
திருடர்களும் இங்கே...
பொதுநலன் கருதி
பாடுபட்ட பண்பாளர்
வாழ்ந்ததும் இங்கே...
சுயநலம் ஒன்றே
கொள்கை என்று
வாழ்பவர்களும் இங்கே...

ஏழை எளியோன்
வறுமை வறியோன்
நிலையும் மாறுமோ ...
பசியும் பட்டினியும்
மண்ணில் என்றுதான்
மறையுமோ...

மாறிடுமா சமுதாயம்
மாற்றிடுமா இந்நிலையை
நானறியேன் விடைதனை...?

பழனி குமார்

# புத்தகம்

புத்தகமே நீ என்ன
காகித குடத்தில் ஊற்றப்பட்ட
தங்கநீரா அரையானாலும்
நிறையானாலும் அலம்புவதே இல்லையே...

புத்தகமே நீயொரு
மிகச்சிறந்த நிலை கண்ணாடி
முகத்தை மட்டும் காட்டுவதில்லை
அகத்தையும் காட்டுகிறாய்
உன்னை பார்ப்பவர்கள் எல்லாம்
அதில் தன்னையும் காண்கிறார்கள்...

புத்தகமே நீயொரு
சாகாவரம் பெற்ற பிள்ளை
உன் தாயும் தந்தையும்
அழிந்தாலும் நீ அழிவதேயில்லை...

புத்தகமே நீயொரு
சமத்துவத்தை போதிக்கும் ஞானி
நீ ஆத்திகனாக நாத்திகனாக
பகுத்தறிவாளனாக உள்ளாய்
உன் முகவரியால் தான்
நான் என் முகவரியை காண்கிறேன்...

இன்னல் பல தாங்கி
பத்து மாதம் சுமந்தால்
ஒரு குழந்தை பிரசவமாகிறது
உன்னை என் நெஞ்சில்
சுமக்கிறேன் பல்லாண்டுகளாய்
இன்னும் உன்னை பிரசவிக்க முடியவில்லை...

புத்தகமே உனை முதலில்
தோளில் சுமந்தேன்
முதுகில் சுமந்தேன்
இதயத்திலும் சுமக்கிறேன்
நீ சுமையல்ல சுகம்...

செல்வமுத்து மன்னார்ராஜ்

தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத நாயகனாகவும், ஒவ்வொரு படங்களிலும் தன்னை வித்தியாசப்படுத்தி காண்பிக்கும் கலைஞனாகவும் வலம் வருபவர் விஜய் சேதுபதி. இயக்குநர் பாலாஜி தரணிதரன் இயக்கத்தில் உருவாகும் ‘சீதக்காதி’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக், வயதான முதியவர் கெட்டப்பில் விஜய் சேதுபதியின் பிறந்த நாளன்று வெளியிடப்பட்டது. “இந்தப் படம் ஒரு மேடை நாடக சூழலில் ஆரம்பிக்கும். இதில் விஜய் சேதுபதி வயதான கேரக்டர்ரில் நடிக்கிறார். இதன் மேக் அப்புக்காக ஆஸ்கர் வின்னர் கெவின் ஹேனி தான் இந்த கெட்டப்பிற்கு ஒரு அமைப்பு கொடுத்தார். இந்த மேக் அப்பை போடுறதுக்கு நாலு மணி நேரம், மேக் அப்பை எடுக்குறதுக்கு ஒரு மணி நேரமாகும். அதனால், ஸ்பாட்டுக்கு அவர் முதல்ல வரணும், கடைசியா போகணுமுங்கிற சூழல்!” என்று இந்தப் படத்துக்காக விஜய் சேதுபதியின் உழைப்பைப் புகழ்கிறார் இயக்குனர்.

## ஆட வந்த நாயகி!






## வித்தியாசம் காட்டும் வித்தகன்!

## ஆட்டத்தில் கெட்டிக்காரி!

## நடிப்பை நேசிக்கும் கலைஞன்!

சந்தோஷ் விஜயக்குமார் இயக்கத்தில், ஸ்டுடியோ கிரீன் தயாரிப்பில், ஆர்யா கதாநாயகனாக நடிக்க, வனமகன் படத்தில் அறிமுகமான சாயிஷா சைகல் கதாநாயகியாக நடிக்கும் படம் கஜினிகாந்த். இப்படத்தில் இடம்பெற்றுள்ள பாடல் காட்சியில் சாயிஷா அதிரடியாக நடனம் ஆடி இருக்கிறார். அவருடன் பாடலுக்கு நடனம் ஆட மிகவும் பயந்ததாக கதாநாயகன் ஆர்யா கூறியிருக்கிறார். “சாயிஷா பயங்கரமாக நடனம் ஆடுகிறார். நீங்க என்ன பக்கத்தில் சும்மா நிற்கிறீர்கள்?” என்று நண்பர்கள் தன்னைக் கேட்பதாகக் கூறியிருக்கிறார் ஆர்யா. சாயிஷாவின் நடனத் திறமை கோலிவுட் தாண்டி டோலிவுட், பாலிவுட் வரை பரவி வருகிறது.

## வீரமங்கையாக வெளிவரட்டும்!



## பரிதவிக்கும் பத்மாவதி!



## காலத்தை வென்றவன் நீ!

## காவியமானவன் நீ!

மக்கள் திலகம் எம்ஜிஆர் மறைந்த பிறகும் மீண்டும் கதாநாயகனாக ‘கிழக்கு ஆப்பிரிக்காவில் ராஜு’ எனும் புதிய படத்தில் விர்ச்சுவல் அனிமேஷன் வடிவில் தோன்றுகிறார். எம்ஜிஆர் இயக்கி, தயாரித்த படம், உலகம் சுற்றும் வாலிபன். இப்படத்தின் வெற்றிக்கு இணையாக இன்னொரு படத்தைச் சொல்ல முடியாத அளவுக்கு மகத்தான சாதனைக்குச் சொந்தமான படம் அது. அதன் அடுத்த பாகம்தான் இந்த ‘கிழக்காப்பிரிக்காவில் ராஜு’. நடிகர் ரஜினிகாந்த் இவ்விழாவுக்கு தலைமை ஏற்க, நடிகர் கமல் மற்றும் எம்ஜிஆருடன் நடித்த கதாநாயகிகள் முன்னிலையில், எம்ஜிஆரின் 101—வது பிறந்த நாளான ஜனவரி 17 அன்று படத்தின் தொடக்கவிழா சத்யா ஸ்டுடியோவில் நடந்தது. படத்தை நடிகர் ஐசரி வேலனின் மகனான ஐசரி கணேஷ் தயாரிக்கிறார். அடுத்த ஆண்டு இதே நாள், இப்படம் உலகம் முழுவதும் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சஞ்சய் லீலா பன்சாலி இயக்கத்தில் உருவாகியுள்ள ‘பதமாவத்’ திரைப்படத்தை வெளியிட சில அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ராணி பத்மாவதியின் கதாபாத்திரம் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளதாக போராட்டம் வெடித்துள்ளது. இதனிடையே பத்மாவதி திரைப்படத்தை பிரிட்டனில் வெளியிட அந்நாட்டு தணிக்கை வாரியம் முறைப்படி அனுமதித்துள்ளது. பத்மாவதி திரைப்படத்தை திரையிட மத்திய பிரதேசம், குஜராத் மாநில அரசுகள் தடை விதித்துள்ள நிலையில், வெளிநாடுகளில் ‘பத்மாவதி’ படத்தை வெளியிட தடை இல்லை என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.




## மண்ணும் மனிதனும் சார்ந்த பதிவுகளை

### 40. கோட்டை எல்லை !

ஆகஸ்ட் 13, 2005. பயணத்தின் 60 ஆம் நாள்!

காலை 7 மணிக்கு தலைவர் திரு. இளங்கோ அவர்கள் எங்களைச் சந்தித்தார். நாங்கள் கிளம்புவதற்குள் எங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தார். சொன்னதுபோலவே காலையில் எங்களைச் சந்தித்துவிட்டார்.

எங்களோடு சேர்ந்து காலைச் சிற்றுண்டி சாப்பிட்டார். அதுசமயம் அவர் பேசிய பேச்சுக்களைத் தொகுத்தால் ஒரு தனிநூல் கொண்டு வரலாம்.

“இந்தச் சமுகத்துக்காக உழைப்பதற்கு நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், அதைவிட வாழ்க்கைக்கு வரம் ஒன்றுமில்லை! நாம், நமக்கு என்ற வாழ்க்கை மனித வாழ்க்கைக்கு அழகல்ல, பிறர்க்கு என்று வாழும்போதுதான் வாழ்க்கை அர்த்தப்படுகிறது. அப்படியொரு அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு இயலாவிட்டால், செய் அல்லது செத்துமடி என்ற நிலையே மிகவும் உயர்ந்தது!”

—இந்தச் செய்திகள் அவரது உரையாடல் மூலம் எங்களுக்குச் கிடைத்த நற்செய்தி!

திரு. இளங்கோ அவர்கள், தனது ஊருக்கு உழைப்பதற்காக தான் பார்த்து வந்த கைநிறைய சம்பளமுள்ள வேலையை உதறிவிட்டு வந்தவர். தன் சுகம், தன் குடும்பம் என்றில்லாமல் ‘ஊருக்கு உழைத்திடல் யோகம்!’ என்ற பாரதியின் பாடலுக்கு இலக்கணமானவர்.

எங்கள் நடைப்பயணப் பதிவேட்டில் வாழ்த்துச் செய்தி எழுதினார்.

“தேவையான ஒரு தேவைக்கு நினைவூட்டுமுகமாக நீர்நிலைகளைப் புதுப்பித்து, புதிய பாரதத்தைப் படைக்கும் முயற்சிக்கு, முக்கியம் மறந்துபோன நம் மரபுகளில் ஒன்றான நீர் நிலைகளின் மேலாண்மையைத் தகுந்த நேரத்தில் நினைவூட்டும் முயற்சி இது!

தன்னம்பிக்கையோடு ஒரு பெரும் மாற்றத்திற்கான நடைபோடும் இவர்களுக்கும், இந்த இயக்கத்திற்கும் துணை நிற்க மீண்டும் இதன்மூலம் உறுதி எடுத்துக் கொள்வதாகவே எனக்கு நான் நினைத்துக் கொள்கிறேன்!”

என்று எழுதி கையெழுத்திட்டுத் தந்தார். அவரிடம் விடைபெற்றுக் கொண்டோம்!

இன்னும் இரண்டு நாட்களில் இந்த நடைப்பயணம் மேதகு அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளில் சென்னையில் நிறைவடையவிருக்கிறது. அச்சமயம் எனது கவிதைத் தொகுதியினை திரு. இளங்கோ அவர்கள் வெளியிட்டுச் சிறப்பிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு மகிழ்வுடன் இசைந்தவர், எங்களை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

நேற்றிரவு கடுமையான மழை பெய்திருந்ததன் விளைவை சாலைகளில் பார்த்தோம்.

குத்தம்பாக்கத்திலிருந்து தேசிய நெடுஞ் சாலையைப் பிடிப்பதற்காக நடந்த பாதையில், தண்ணீர் வேகமாக அறுத்துக்கொண்டு ஓடியது.

முழங்கால் அரை தண்ணீருடன் சாலையை நெருங்குகையில், சாலையோர பாலிதீன் பைகள் கால்களில் வந்து சிக்கி எங்களைத் தடுமாற வைத்தன.



# நினைவு...

## 40 கொற்றவன்

### பகிர்வுகளாய் முன்வைக்கும் பயணத் தொடர்!

வெள்ளம்போல ஓடிய மழைநீரில் நான்கைந்து பாம்புகள் நீந்திச் சென்றன.

சாலையில் சிறிதூரம் ஏறி நடந்தோம்.

தண்ணீரில் நடந்து வந்ததால் சில்லிட்ட கால்கள், நடப்பதற்கு சற்றே சிரமம் தருவதை உணரமுடிந்தது.



ஒரு டீ கடையில் அமர்ந்தோம்.

இங்கே ஒரு சிறுவன் எங்களுக்காக டீ போடுவதற்கு தயாரானான்.

சிறுவன் ஒரு சிலிண்டரை உருட்டிக் கொண்டு வந்தான்.

"தம்பி! பெரியவர்கள் இல்லையா?" என்றேன்.

"வருவாங்க!" ஒற்றை வார்த்தையைச் சொல்லிவிட்டு அவன் தேநீர் தயாரிப்பில் இறங்கிய விதம் ஆச்சரியப்படுத்தியது. உருட்டிவந்த சிலிண்டரை நிமிர்த்திய விதம், பழையதைக் கழற்றிவிட்டு, புதிய சிலிண்டரை மாற்றியவிதம் அதன்பின் அவன் டீ போட்ட விதம் என எங்களை ஆச்சரியப்படுத்தும்படி இருந்தது அவன் செயல்பாடு! வயதுக்கு மீறிய செயல்பாடு அது!

எல்லாம் சரி, அவன் போட்டுக் கொடுத்த டீ எப்படி இருக்கப் போகிறது என்ற எதிர்ப்பார்ப்புடன் பருகினால்... 'அடடா! என்ன அருமையான தேநீரைத் தந்திருக்கிறான்!' என வியந்து போனேன்.

அவனைப் பாராட்டிவிட்டு, நல்லவிதமாகப் படிக்கவும் சொல்லிவிட்டு கிளம்பினோம்.

மதியம் ஒரு வீட்டுக்குள்ளேயே இருந்த சிறிய உணவுவிடுதியில் வந்து அமர்ந்தோம்.

நண்பர் இராஜன் இங்கே வருவதாகத் தெரிவித்திருந்தார். நானும் இராஜனும் இதற்கு முன்பு திருவள்ளூர் வந்திருந்த சமயங்களில்,



வீட்டோடு அமைந்திருந்த இந்த உணவுச் சோலைக்கு வந்திருக்கிறோம். எனவே இராஜன் இங்கே வருவதற்கு காத்திருந்தோம்.

இங்கே திரு. ராமேஷ்பாபு என்பவர் எங்களை விசாரித்தார். அவரிடம் ஒரு துண்டறிக்கையைக் கொடுத்து விளக்கினோம்.

தன் வீட்டில் அதிக செலவு செய்து மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி இருப்பதாகத் தெரிவித்தார். எங்கள் பயணக்குறிப்பில் வாழ்த்துச் செய்தி எழுதினார். எங்கள் உணவுக்கான பணத்தைத் தான் தருவதாக அன்புடன் கேட்டுக் கொண்டார். ஆனால் நான் முன்கூட்டியே கொடுத்துவிட்டேன் என்ற தகவலைச் சொன்னேன்.

இதனிடையே நண்பர் இராஜனும் வந்து சேர்ந்தார். நீண்ட நாள் கழித்து நண்பரைச் சந்திக்கிறோம். இந்தப் பயணத்தில் அவர் தொடர்ந்து நடக்காவிட்டாலும் எங்களுடன் வருவது போன்ற உணர்வைத் தொடர்ந்து தந்துகொண்டே இருந்தார். எங்களை அவ்வப்போது விசாரித்துக் கொண்டிருப்பதைத் தவறாமல் செய்து வந்தார்.

இங்கிருந்து புறப்பட்டபோது, இராஜன் எங்களுக்காக பைக்கில் சிறிதுதூரம் போவதும், நிற்பதுமாக இருந்தார். சென்னையை விரைவில் நெருங்கிவிடுவோம் என்ற நினைப்பு மகிழ்ச்சியாகவும் இருந்தது. நடைப்பயணம் முடிகிறதே என்ற கவலையாகவும் இருந்தது.

எப்பேர்ப்பட்ட சாதனையும் ஒரு முதல் அடியுடன்தான் தொடங்குகிறது!

இப்பயணம் சாதனைக்காக நிகழ்த்தப்பட்டதல்ல, சாமானிய மக்களின் வாழ்வுநிலையான நீராதாரம் காக்கப்பட வேண்டும் என்பதற்கான அறைகூவலாகத்தான் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

துண்டறிக்கைகளை வழங்கியபடியே நடந்தோம். மாலையில் நண்பர் இராஜனை அனுப்பி வைத்தோம்.

இரவு வேலப்பன் சாவடியை வந்தடைந்தபோது, தங்குவதற்கு கிடைத்த இடம் ஒரு பழைய பள்ளி. இன்று இரவுதான் எங்கள் நடைப்பயணத்தின் கடைசி இரவு தங்கல்.

இதுபற்றி நண்பர் பழனிச்சாமியிடம் பேசிக் கொண்டிருக்கையில் இருவருக்குமே மனது கனத்து போனது.

இன்றோடு 60 நாட்களைக் கடந்து, 1982 கி.மீ. தூரத்தை நிறைவு செய்திருக்கிறோம்.

நாட்கள் என்னவோ 60 தான்! ஆனாலும் ஒவ்வொரு நாளும் நாங்கள் சந்தித்த அனுபவங்கள் ஏராளம்! அதையெல்லாம் பேசிப் பகிர்ந்தபடியே படுத்தோம். இருவருக்கும் உறக்கம் வரவில்லை! இதுநாள்வரை நடந்து வந்த பாதைகளும் பயண அனுபவங்களும்தான் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

மலர்ந்த பொழுது அக்டோபர் 14, —பயணத்தின் 61—வது நாள்!

இன்றைய தினம் மாலையில் கோட்டையை அடைவோம். இன்றோடு இந்தப் பயணம்

வேண்டுமானால் முடிந்துவிடலாம். இது தந்த நினைவலைகளை எங்கள் காலம் உள்ளவரை மறக்கவியலாது.

தொடர்ந்து தொடர்பு எல்லைக்குள் இருந்து வரவேண்டும் என்று நண்பர் பழனிச்சாமியிடம் கூறியபடியே நடந்தேன்.

திருவேற்காடு கோயில் வளைவு அருகே



வந்தபோது, ‘நல்லோர் வட்டம்’ அமைப்பின் நண்பர் திரு.இராமச்சந்திரன் தனது ‘போலிஸ் நண்பர்கள் குழு’வுடன் வந்து காத்திருந்தார். இதேநேரம் நண்பர் இராஜனும் இங்கே வந்து சேர்ந்தார். எங்கள் மூவரையும் வரவேற்று சால்வை அணிவித்துச் சிறப்பு செய்தது போலிஸ் நண்பர்கள் குழு.

எங்களுடன் இணைந்தாற்போல துண்டறிக்கைகள் வழங்கும் பணியை நண்பர்கள் குழு எடுத்துக் கொண்டது. எங்கள் முதுகில் இருந்த சுமையையும் நண்பர்கள் வாங்கிக் கொண்டனர்.

கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் கோயிலில் உள்ள சரபேஸ்வரர் மண்டபத்தில் ‘நல்லோர் வட்டம்’ ஐயா திரு.பாரதிபாலு அவர்களும் ஐயா திரு.விஸ்வநாதன் அவர்களும் காத்திருந்தார்கள்.

அங்கு ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தார் பாரதிபாலு ஐயா அவர்கள். அதன்படி மிகக் குறுகிய காலநேரத்தில் எங்கள் பயணத்தின் சில முக்கிய நிகழ்வுகளைச் சொன்னோம்.

நாளைய தினம் ‘நல்லோர் வட்டம்’ சார்பில் நடக்கவிருக்கும், மேதகு அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாள் விழா, எங்கள் நடைப்பயணம் நிறைவு விழா குறித்து ஐயா விளக்கினார்.

நாளைய தினம் காலையில் முதன்முறையாக நடைபெறவுள்ள ஒரு திட்டம் ‘அதிரடி சேவை’ என்பதும், அதன்போது அதிரடியாக செயல்படுத்தப்படவுள்ள சமுக சேவைகள் குறித்தும் பாரதிபாலு ஐயா விளக்கினார்.

பின்பு அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம்.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அரும்பாக்கம், அமைந்தகரை, கீழ்ப்பாக்கம் என நடை நீண்டது. வாகன நெரிசலும், இரைச்சலும், புகையும் எங்கள் நடையைச் சிரமமாக்கியது.

மதியம் கோட்டையை வந்தடைந்தோம். எங்கள் கைகளில் உள்ள துண்டறிக்கைகளை கோட்டை வாயிலில் நின்றிருந்த பொதுமக்களுக்கும், காவலர்களுக்கும் வழங்கினோம்.

இப்பயணத்தில் எங்கள் பார்வையில்பட்ட காக்கப்பட வேண்டிய குளம், கண்மாய்கள் குறித்த தகவல்களைத் தொகுத்து நாங்கள் சேகரித்து வைத்திருந்த குறிப்புகள் பலவற்றையும் முறைப்படி எழுதி, முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்களுக்கு பார்வைக்கு முன்வைக்க வேண்டும்!

எங்கள் பயணத்தில் எல்லையாக இருந்த கோட்டை வந்தடைந்து நடையை நிறுத்திக் கொண்டாலும், தொடர்ந்து நாங்கள்

செய்யவேண்டிய கடமையை விரைவில் செய்து முதல்வர் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும்!

கோட்டையிலிருந்து மேலும் சிறிதுதூரம் நடக்கலாம் என்றேன். நண்பர் பழனிச்சாமியும் மறுப்பேச்சில்லாமல் உடன் வந்தார்.

அண்ணா சதுக்கம் வந்தடைந்தோம்.




நன்றி என்ற அந்த ஒற்றை வார்த்தையில் அவருக்கு நான் ஈடு செய்துவிட முடியாதுதானே!

கண்கள் துளிர்க்க இருவரும் பிரிந்து சென்றோம்!

முதலில் நான் என் தாயைச் சந்திக்க வேண்டும்! அவர் மனம் என்னவெல்லாம் பறிதவித்திருக்கும்? எங்கு படுப்பானோ? எங்கு சாப்பிடுவனோ? சாலையில் எப்படி நடப்பானோ? என்றெல்லாம் பலப்பல கேள்விகளோடு இந்த 61 நாட்களும் அவர் பட்ட கவலை மிக மிக அதிகம்!

பேரறிஞர் நினைவிடத்தில் வணங்கிவிட்டு, பின்பு பொன்மனச் செம்மல் நினைவிடம் வந்து நின்றேன்.

என் வாழ்க்கைப் பயணத்தின் வழிகாட்டியாகவும், வாழ்க்கை நெறியாகவும் இருக்கின்ற மக்கள்திலகத்தை வணங்கினேன்.

மனம் நிறைந்தது. பயணம் நிறைந்தது.

எலுமிச்சைப் பழச்சாறு அருந்திவிட்டு, அண்ணா சதுக்கம் பேருந்து நிலையத்திலிருந்து வண்டி ஏறினோம். கோடம்பாக்கம் வந்திறங்கினோம்.

ஆனந்த விகடனில் கோட்டோவியக் கலைஞர் 'ஜெ.பி' எனும் திரு.ஜெ.பிரபாகர் அவர்கள், எங்களுக்குத் தன் வீட்டில் விருந்துக்கு அழைத்திருந்தார்.

அங்கே ஜெ.பி அவர்களும், அவர்தம் துணைவியார் அவர்களும் எங்களை மிகுந்த அன்போடு வரவேற்று அறுசுவை உணவளித்து உபசரித்தார்கள்.

எங்கள் பயண அனுபவங்களை ஆர்வமுடன் விசாரித்து அறிந்து கொண்டார்கள். பின்பு இங்கிருந்து 'நல்லோர் வட்டம்' வந்து, சிறிதுநேரம் அளவளாவிவிட்டு அவரவர் இருப்பிடங்களுக்கு புறப்படத் துவங்கினோம்.

நண்பர் பழனிச்சாமியைக் கட்டியணைத்து நன்றி கூறினேன்.

"நன்றி எதுக்கு? நாம் எடுத்துக் கொண்ட கடமையை நிறைவேற்றி இருக்கிறோம்! இதிலே பரஸ்பர பாராட்டோ நன்றியோ அவசியமே இல்லே அண்ணா!" என்றார்.

ஆம்! பொருள் பொதித்த வார்த்தைகள்!

எனவே முதலில் அன்னையின் முன்புபோய் 'இதோ வந்துவிட்டேன்!' என்று நிற்க வேண்டும்!

தன் மகன் நலமாய் இருக்கிறான் என்று தெரிந்துக் கொள்வதைவிட ஒரு தாய்க்கு வேறென்ன வேண்டும்?

இல்லம் நோக்கி நண்பர் இராஜனுடன் புறப்பட்டேன்.

இன்றோடு எங்கள் நடை நிறைவடைந்தாலும், நாளையதினம் முறைப்படி நடக்கும் நிறைவுவிழாவுடன் இப்பயணம் நிறைவடைகிறது!

இந்தப் பயணத்தில் 61 நாட்கள் 2005 கி.மீ தூரம் கடந்து, தமிழகத்தின் அரியலூர் மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களையும் நடந்து காத்திருக்கிறோம்!

மேதகு அப்துல்கலாம் அவர்கள் கேட்டுக்கொண்ட 'ஊரணிகளுக்கு உயிர்கொடுப்போம்!' என்ற வார்த்தைகளைத் தமிழகம் முழுவதும் கொண்டு சென்றிருக்கிறோம் என்ற ஒரு நிறைவு!

என் நண்பர்களிடம் அடிக்கடி நான் ஒன்றைக் கூறுவேன்.

'வாழ்க்கை என்பது வேறொன்றுமில்லை! நீங்கா நினைவுதான்!'

இந்தப் பயணமும் என் வாழ்க்கைப் பயணத்தில் என்றென்றும் நீங்கா நினைவு!

( நடை தொடரும்)

# புத்தக விமர்சனம்

## மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

**விலை : ரூ. 150**

**பக்கங்கள் : 288**

**நூல் ஆசிரியர்:**

## வித்வான் வே. லட்சுமணன்




**வெளியீடு:**
**வானதி பதிப்பகம்,**
**13, தீனதயாளு தெரு,**
**தியாகராய நகர்,**
**சென்னை– 17.**

*“1954 —ல் வித்வான் அவர்கள் எனக்கு அறிமுகமானார். 31 ஆண்டுகள் ஓடிவிட்டன. வாழ்க்கையில் மிகப் பெரிய காலப்பகுதி ஆகும் இது. என்னுடன் இணைபிரியாது இத்தனை ஆண்டுகளும் ஒரே நிலையில் ஒருமித்து இருக்கின்ற மிகச் சிலரில், வித்வான் தனி இடம் பெற்ற ஒருவர் ஆவார்!” என்று மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்களால் வாயார வாழ்த்துப் பெற்றவர் இந்நூலாசிரியர் வித்வான் வே.லட்சுமணன்.*

*அவர் எழுதியிருக்கும் இந்நூல், எம்.ஜி.ஆர் குறித்து வந்த நூல்களில் தலையாய நூல் என்று சொன்னால் அது மிகையல்ல. எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு எண்ணிலடங்கா நூல்கள் வந்திருக்கின்றன. ஆனால் எம்.ஜி.ஆர் வாழ்க்கை வரலாற்றினை அவர் வாழ்ந்த காலத்திலேயே, இன்னும் சொல்லப்போனால் அவர் முதல்வராவதற்கு முன்பே எழுதிய பெருமைக்கு உரியவர் இந்நூலாசிரியர்.*

*இந்நூல் எம்ஜிஆரின் குணநலன்களை, பண்புகளை, சிறப்புக்களை, ஆற்றல்களை, அவருடைய வாழ்வியல் சம்பவங்களை, அவரது ஜோதிடத்தை எனப் பல்வேறு தளத்தில் நின்று தெள்ளத்தெளிவாக விளக்கும் அரிய நூல்! எம்.ஜி.ஆர் ஆர்வலர்கள் தவறவிடக்கூடாத அருமையான காலப்பெட்டகம் இந்நூல்!*



# என்ன தவம் செய்தனை

சாந்தி நாதன்

"வாங்க கல்யாணி, கமலா வண்டி சரியான நேரத்துக்கு வந்ததா? டிரைவர் கரெக்டாக வந்துட்டான் இல்லையா?" முகம் மலர வரவேற்கும் அண்ணி விசாலத்தைப் பார்த்து அரைகுறை புன்னகை ஒன்றை உதிர்த்தாலும் பார்வை அந்த அழகிய பரந்த பங்களாவை அளவெடுத்துக் கொண்டிருந்தது.

"ரயிலடிக்கு சுதாகர் வருவான்னு நினைச்சோம். பெங்களூர் வண்டியும் கோவை வண்டியும் ஏறத்தாழ ஒரே நேரத்துக்கு வந்தாலும், பிளாட்பாரம் வேறவேறதானே ? உங்க டிரைவர் மாறிமாறி செல்லடிச்சு ஒருவழியா எங்களைப் பிடிச்சுக் கூட்டி வந்தாரு" குற்றம் சாட்டும் குரலில் கூறியவாறே படியேறிய கல்யாணியை ஆமோதித்தபடி பின்தொடர்ந்தாள் கமலா.

"சுதா அண்ணா ஆபீஸ் வேலையா டெல்லி போயிட்டு ராத்திரி வரவே ரொம்ப நேரமாயிடுத்து. எங்க டிரைவர்தான் கரெக்டா கூட்டி வந்துட்டாரில்ல. உள்ள வாங்க அத்தை! வாய்நிறைந்த புன்னகையுடன் வரவேற்பவளை ஏற இறங்க பார்த்தாள் கமலா.

"அட பாவனா, கல்யாணப் பொண்ணு! ஆளே அடையாளம் தெரியாத அளவுக்கு வளர்ந்துட்டியே!" என்றாள் கண்கள் விரிய.

"வாங்க அத்தை!" வரேவற்றபடி வந்த சுதாகர், "பாவனாவை அடையாளம் தெரியாலைங்கறீங்க, நீங்க அவளை ஐந்து வயசுக் குழந்தையா எங்க அப்பா இறந்தபோது பார்த்ததுக்கு அப்புறம் இப்பதானே பாக்கறீங்க?" கிண்டல் தொனிக்க பேசினான்.

"ரயிலடிக்கு வந்திருந்த என்னையும் அடையாளம் தெரிஞ்சிருக்குமான்னு தெரியலை" என்றான்.

"அதான் எங்க அண்ணனையே உரிச்செடுத்த மாதிரி இருக்கியே" தொடர்ந்து கமலா பேசுவதற்குள் "வணக்கம் அத்தை" என்றபடி சௌமியா வந்தாள்.

"என் மருமக" என விசாலம் அறிமுகம் செய்தாள்.

"முகம் கழுவிட்டு வந்தீங்கன்ன சூடா காபி குடிக்கலாம். நீங்க என்ன குடிப்பீங்க?"

"நாங்க வண்டியிலேயே பல் தேய்ச்சாச்சு காபிதான் குடிப்போம்" என்ற கல்யாணி, "அண்ணி! மக மருமக ரெண்டுபேருமே நல்ல அம்சமா இருக்காங்க" என்றாள்.

"எல்லாருக்குமே காபி கொண்டு வாங்க மாமி" என்ற பாவனாவின் குரலைத் தொடர்ந்து ஒரு நடுத்தரவயது மாது கொண்டுவந்த காபியை ருசித்தபடியே

"பரவாயில்லையே! சமையலுக்கு ஆளெல்லாம் இருக்காங்களா?" என்றாள் கல்யாணி.

"நாங்க மூணுபேருமே வேலைக்குப் போறவங்க. பொறுப்பான பதவியில இருப்பதால தாமதமா வரதும் சீக்கிரம போறதும் ஒவ்வொருநாள் எங்களுக்கு ஒவ்வொரு மாதிரியிருக்கும். பாதிநேரம் அம்மா தனியாகத்தான் இருக்கவேண்டியிருக்கு. இருபது வருட ஓயாத உழைப்பு அவங்க உடல் ஆரோக்கியத்தை சீர் குலைச்சிருக்கு. அதான் அவங்களுக்கு துணையாகவும் உதவியாகவும் இந்த

அம்மாவை வீட்டோட இருக்க வச்சிருக்கோம்" என்றான் சுதாகர்.

அவனது பதிலை கவனிக்காதது போல், "அண்ணி, வீடு ரொம்ப அழகா இருக்கு" வீட்டைச் சுற்றி பார்வையை சுழலவிட்டபடி கூறினாள் கல்யாணி.

"அத்தை, இந்த வீட்டுக்குப் பிளான் போட்டுக் கட்டிய செல்வி சௌமியா முதல்ல அம்மாவின் பிரியமானவளாகி, அடுத்து என் ஆருயிர் தோழியாகி, பிறகு எங்க அண்ணணின் அன்புக் காதலியாகி, இப்ப எங்கவீட்டு மகாலட்சுமி ஆகிட்டாங்க" பாவனா நாடக பணியில் பேசினாள்.



வெட்கத்தில் முகம் சிவக்க நாணி நிற்கும் சௌமியாவையும், அசட்டுச் சிரிப்போடு நிற்கும் சுதாகரையும் பார்த்து ரசித்து சிரித்தனர் மற்ற நால்வரும்.

ஹாலில் நடுநாயகமாக மாட்டப்பட்ட புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருநத அண்ணன் சபேசனின் படத்திற்கருகில் சென்றாள் கல்யாணி.

"எங்க அண்ணாதான் பாவம்! இந்த வசதியான வாழ்க்கையை அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவரா போய்ச் சேர்ந்துட்டாரு. ஏதோ அவர் சேர்த்து வைச்ச புண்ணியமும் எங்களைப் பெத்தவங்க ஆசியும் சேர்ந்து இன்னிக்கு உங்க குடும்பத்தை இந்த நிலைமைக்கு உயர்த்தியிருக்கு"மனதில் பொங்கியெழும் பொறாமையை மறைத்துக்கொண்டு கல்யாணி கூறினாள்.

"சரியாச் சொன்ன அக்கா" என ஆமோதித்தாள் கமலா.

"கூடப்பிறந்த உங்க இரண்டு பேருக்கும் குறையில்லாமதன் கடமையை பெத்தவங்கஇடத்துல நின்னு நிறைவேற்றிய திருப்தியில எங்க அப்பா திடீரென இறந்தப்ப, எங்கம்மா நிலைகுலைஞ்சு போனாலும், பெத்த குழந்தைகளுக்காக உழைக்கத் தயார் ஆனாங்க. குடியிருந்த வீடு, அவங்ககிட்ட இருந்த சொற்ப நகையெல்லாம் கடனுக்குச் சரியாகிவிட, தன் உழைப்பை மூலதனமாக்கி அவங்க உழைச்ச உழைப்புதான் இன்னிக்கு எங்களை இந்த நிலைக்கு உசத்தியிருக்கு. வயசான அவங்க அம்மா பொறுப்பில எங்களை விட்டுட்டு காலையிலிருந்து ராத்திரி வரைக்கும் கார்மெண்ட் கம்பெனியில அவங்க ஓடா தேய்ஞ்சு பட்டபாடுதான் எங்க உயர்வுக்கு பாதைபோட்டுக் கொடுத்திருக்குன்னு புரிஞ்சுக்கோங்க" ஆத்திரமும் உணர்ச்சியும் பொங்க சுதாகர் பேச, விசாலம் முகத்தில் கலவரம் குடிகொண்டதை சௌமியா கவனித்தாள்.

"இப்ப எதுக்குங்க இந்த பழைய நினைப்பெல்லாம்? மாமாவோட தன்னலமில்லாத நற்செயல்கள் உங்க அம்மாவோட உழைப்புங்கற அஸ்திவாரத்துக்கு அரணா அமைஞ்சு குடும்பத்தை நல்ல உயர்வுக்குக் கொண்டுவந்திருக்குன்னும் வச்சுக்கலாமில்லையா? இன்னிக்கு நம்ம எல்லாருக்கும் நிறைய வேலை இருக்கு." என்று பேச்சை மாற்றினாள் சௌமியா.

"பாவனா! அத்தைங்களை கூட்டிட்டுப் போய் அவங்க அறையை காமி! அவங்க பெட்டியெல்லாம் ஏற்கெனவே அங்க வச்சாச்சு. அத்தை, நீங்க ரெண்டுபேரும் குளிச்சு தயாரானீங்கன்னா டிபன் சாப்பிட்டுட்டு நாம புடவை கடைக்குப் போகணும்! பாவனா, நீயும் சுதாவுமா அம்மா பூஜை சாமான்கள் லிஸ்டு போட்டிருக்காங்க இல்லையா, அதுபடி சாமான்கள் வாங்கிட்டு தையல் கடையிலிருந்து உன் ஜாக்கட்டெல்லாம் சரி பார்த்து வாங்கிட்டு வந்துடு." சூழலை சகஜமாக்கினாள்.

"ஆமா! நீங்க ரெண்டுபேரும் சௌமியா

கூடப்போயி மனசுக்குத் திருப்தியா நல்ல சேலைகளா பாத்து வாங்கிக்குங்க. சுதாகர் கல்யாணத்துக்கே நீங்க வராதது எனக்குக் குறையா இருந்தது. குடும்பத்து மூத்தவங்க ஆசிவேண்டி நாளைக்கு செய்யப்போற சுமங்கலி பூஜையும், பாவனா கல்யாணமும் நல்லபடியா நடக்கணும்! நான் வேண்டிக்கிட்டிருக்கறது உங்க ஆசியால நல்லபடியா நிறைவேறணும்" நெகிழ்ந்த குரலில் விசாலம் பேசினாள்.



"நீங்க சுதாகர் கல்யாணத் தகவல் சொன்னப்ப எம் புருஷனுக்குக் கண் ஆபரேஷன். கமலா மக பிரசவ நேரம். சௌமியா அக்கா பிரசவத்துக்கு அவங்க அம்மாஅப்பா வெளிநாடு போறாங்கான்னு சொல்லி அவசரமா திருமணத்தை நடத்திட்டீங்க" குறைசொல்வது போல் பேசினாள் கல்யாணி.

அவளை முடிக்கவிடாமல், "அதனால் என்ன இப்ப, அண்ணா கல்யாணத்துக்கு ஒண்ணு, என் கல்யாணத்துக்கு ஒண்ணு, நாளைய பூஜைக்கு ஒண்ணுன்னு அமர்க்களமா மூணு புடவையா சேர்த்து வாங்கிக்கங்க. கூடவே ரெண்டு மாமாக்களுக்கும் பட்டு வேட்டி சட்டைகளும் மறக்காம வாங்கிடுங்க. கல்யாணத்துக்கு முதல் நாள்தான் அவங்க வருவாங்கான்னு அம்மா சொன்னாங்க. அப்ப கடைக்கெல்லாம் போக நேரமிருக்காது" பேசியபடியே அத்தைகளுடன் மாடியேறினாள் பாவனா.

அவர்கள் மூவரும் அறைக்குள் செல்லக் காத்திருந்த விசாலம் "சுதா, அவங்க என்னமோ பேசிட்டுப் போகட்டும். நீ அதுக்கெல்லாம் ஆத்திரப்பட்டு அவங்க மனம் நோக பேசாத. பொறுமையா இருப்பா" என்றாள் கெஞ்சுவது போல.

"ஆத்திரப்படாம எப்படி இருக்க முடியும்? இவ்வளவு நாளா நாம இருக்கோமா இல்லையான்னு கவலைப் படாதவங்க, நம்ம கஷ்டத்துக்கு உதாவதங்களை மதிச்சு கூப்பிட்ட உங்க மதிப்புத் தெரியாதவிதமா எல்லாம் எங்க அண்ணா ஆசியாலன்னு சொல்லும் போது ரத்தம் கொதிக்குது" என்றான் கோபமாக.

"நீங்க சொல்றதெல்லாம் சரின்னே வச்சுக்குவோம். ஆனா பாதிக்கப்பட்ட அத்தை பழசையெல்லாம் மறந்து எவ்வளவு பெருந்தன்மையோட அவங்க உறவை புதுப்பிச்சுக்க விரும்பறாங்கன்னு புரிஞ்சுக்கப் பாருங்க. எந்தவித தடங்கலும் இல்லாம நாளைய பூஜையும் பாவனா திருமணமும் நடக்கணும்னு அவங்க மனசில ஒரு பதட்டம் இருந்துக்கிட்டேயிருக்கு. இதனால ராத்திரி சரியா தூங்காம அவங்க பி.பி கொஞ்சம் அதிகமாயிருக்கு. இதையெல்லாம் மறக்காம, அவங்க சொல்றமாதிரி பொறுமையா இருக்கப் பாருங்க" சிறிது அதட்டலாகப் பேசும் மருமகளை அணைத்துக் கொண்டாள் விசாலம்.

அடுத்தஅரைமணியில் அனைவரும் காலை உணவை உண்டு முடிக்க, பாவனா அண்ணனுடன் ஒரு வண்டியில் கிளம்பிச் சென்றாள்.

சௌமியா மாமியிடம் மதிய உணவு மற்றும் இரவுக்கான தேவைகள் பற்றி ஆலோசித்தாள்.

"அம்மாவுக்கு மாத்திரை கொடுத்திருக்கேன். அவங்க இப்ப நல்லா தூங்கணும்.போன் வந்தாலோ காலிங்பெல் அடிச்சாலோ நீங்களே பாருங்க" என்று கூறி விசாலத்திடமும் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.


"போற வழியில சம்பந்தி வீட்டுக்கு அத்தைகளோட போயி நாளைக்கு பூஜைக்கு அழைச்சுடு" என்ற மாமியாரின் வார்த்தைகளுக்கு தலையசைக்க, டிரைவர் வண்டியை கிளப்பினார்.

"பாவனாவின் மாமனார் இந்த ஊரில பிரபலமான டாக்டர். எங்க குடும்ப மருத்துவர். கொஞ்சநாள் முன்பு அத்தைக்கு ரொம்ப உடல்நலம் மோசமானபோது அவர் தான் கூடுதல் அக்கறை எடுத்து நிலைமையை சரிசெய்தார். அப்பப்ப

வீட்டுக்கே வந்தும் பார்த்ததில் அவருக்கு நம்ம குடும்பத்தை, முக்கியமா பாவனாவை ரொம்ப பிடிச்சுப் போயி அவர் மகன் நரேனுக்கு பெண் கேட்டார். பாவனா போல அவரும் ஒரு பிரபல நிறுவனத்தில் முதன்மை இன்ஜினியர்." சௌமியா கூறி முடிக்கவும் வண்டி ஒரு பெரிய பங்களாவின் முன் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

"அண்ணி பெரிய இடமாகத்தான் பிடிச்சிருக்காங்க" முணுமுணுத்தாள் கமலா.

"மகன் மக ரெண்டுமே தங்க ஜோடியை தாங்களே பிடிச்சிருக்காங்க, ஆனா கொடுக்கற விளக்கம் வேற மாதிரியில்ல இருக்கு?" கிண்டலான கல்யாணியின் பதில் சௌமியாவின் காதில் தெளிவாக விழுந்தாலும், பொருட்படுத்தாமல் வாயிலில் வந்து வரவேற்கும் டாக்டர் கைலாசம் நரேன் ஆகியோரைப் பார்த்து புன்னகை பூத்தவளாய் அத்தைகளோடு வீட்டிற்குள் நுழைந்தாள்.




பின் தொடர்ந்து வந்த நரேனின் அம்மா லட்சுமி, அவர்களை வரவேற்று அமரச்செய்து பரஸ்பர அறிமுகத்துக்குப் பின் "என்ன குடிக்கிறீங்க? காபியா ஜூஸா?" என்றாள்.

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். இப்பத்தான் வயிறு முட்ட சாப்பிட்டுட்டு வரோம்" என்றாள் சௌமியா.

அவளது மறுப்பையும் மீறி லட்சுமி தந்த ஜூஸை பருகும் போது "சௌமி, உங்க அப்பா அம்மா வந்தாச்சா" என்று கேட்டாள் லட்சுமி.

"அவங்க வர இன்னும் நாலு நாளிருக்கு. நீங்களும் உங்க மாமியார் இறந்து ஒரு வருடம் ஆகலைன்னு பூஜை இலையில உட்கார இயலாதுன்னு ஆயிடுச்சு. என் அம்மா, அக்கா குழந்தையோட வரதால அவங்க வருவதும் கொஞ்சம் தாமதமாகுது. ஒரு சம்பந்தி கூட பூஜையில உட்கார முடியாம போச்சேன்னு என் அத்தைக்கு கொஞ்சம் குறைதான்" என்றாள் சௌமியா.

"இலையில உட்காரட்டாலும் நாங்க பூஜையில கலந்துக்க வரத்தானே போறோம். லட்சுமி, நாளைக்கு நரேன் நம்மோட வரானா?" என்று கைலாசம் கேட்டாள்.

"பாவனாவைப் பாக்கற சந்தர்பம் எப்ப வரும்னு காத்துக்கிட்டு இருக்கிற அவன் நமக்கு முன்ன தயார் ஆயிடுவான் பாருங்க" லட்சுமியின் பதிலால் எழுந்தது நகைப்பொலி.

தொடர்ந்து மூவரும் விடை பெற்றுக்கொண்டு கிளம்ப கூடவே வந்த கைலாசம் "சௌமி, அம்மா மருந்தெல்லாம் வேளை தவறாம சாப்பிடறாங்களான்னு கவனமா பாத்துக்க" என்ற எச்சரிக்கையுடன் கையசக்க வண்டி கிளம்பியது.

மறுநாள் காலை மனம் கொள்ளா மகிழ்ச்சியுடன் விழாக் கோலம் பூண்டிருந்த வீட்டைச் சுற்றி வந்த விசாலம் அமைதியாக கணவனின் படத்திற்கெதிரே கண்மூடி அமர்ந்துவிட்டாள்.

சமையலறையில் மாமி உதவிக்கு ஒரு பெண்மணியுடன் பம்பரமாகச் சுழன்று வேலைகள் பார்த்துக் கொண்டிருந்தாலும் "பூஜை நேரம் நெருங்குது. எல்லாம் தயாரா" என்ற கல்யாணியின் அதிகாரக் குரலால் மேலும் விரைந்து செயல்படத் துவங்கினாள்.

குறித்த நேரத்தில் பூஜை துவங்க அதேசமயம் நரேனும் பெற்றோர்களுடன் வந்து சேர்ந்தான்.

"சௌமி, உன் கையாலதான் எல்லாம் செய்யணும். பரிமாறுவதும் நீயும் பாவனாவுமா செய்யுங்க" மறைமுகமாக இதில் பங்குபெற விசாலம் தகுதியற்றவள் என்பதைச் சொல்லாமல் சொல்வது புரிந்தாலும் யாரும் பதில் பேசாமல்

விருந்து பரிமாறப்பட்டு சுமங்கலிப் படையல் நடந்து முடிந்தது.

கைகழுவிக்கொண்டு வந்த கல்யாணி, "இப்ப எங்களையெல்லாம் உட்கார்த்தித் தாம்பூல மரியாதைசெய்து, எங்களைத் திருப்திபடுத்தி, நாலு பேருமா எங்களை வணங்கிய பிறகுதான் நீங்க சாப்பிடணும். தாம்பூலத்தட்டு எல்லாம் நான் சொன்னமாதிரி தயாரா வைச்சிருக்கில்ல?" என்றாள்.

"சரி அத்தை, ஆனா அதுக்கு முன்னாடி நாங்க நாலுபேருமா செய்யப் போற ஒரு முக்கிய



வேலை இருக்கு." சொல்லியபடியே சௌமியா மாமியாரை, மாமனாரின் புகைப்படத்தை ஒட்டி ஒரு நாற்காலியில் அமரச் செய்தாள்.

"என்னம்மா இதெல்லாம்" என்று மறுப்புக் கூற வந்த அம்மாவின் கைபிடித்த பாவனா, "இவ்வளவு நேரம் மௌனமாயிருந்த மாதிரி இப்பவும் அமைதியா இரும்மா" என்றாள் புன்னகையுடன்.

"வாழவேண்டிய வயசுல எல்லாத்தையும் இழந்த எங்க அம்மா மனசாலயும் தோற்றத்துலயும் இப்ப வரைக்கும் ஆடம்பரமான உடைகளோ நகைகளோ போடறதேயில்லை. நாங்க வேலைக்குப் போக ஆரம்பிச்ச பிறகும் ஒவ்வொருமுறை நாங்க அவங்களுக்கு ஏதாவது வாங்க முயற்சி செஞ்சாலும் 'வீடுகட்டி முடி. பாவனா கல்யாணத்துக்கு பணம் சேருன்னு' எதாவது சொல்லி தடுத்துடுவாங்க" தொடர்ந்து பேசமுடியாமல் சுதாகர் நிறுத்தினான்.

"அண்ணிதான் இதுக்குத் தீர்வா ஒரு திட்டம் போட்டாங்க" என்றாள் பாவனா.

"முன்னோர்களையும் நம்ம முன்னேற்றத்துக்கு பாடுபட்ட மூத்தவங்களையும் வணங்கிக் கொண்டாடற இந்த நாளில் எங்க முதல் மரியாதைக்குரியவங்க இவங்களைத் தவிர யாராயிருக்கும?" பேசியபடியே சௌமியா கணவன் அருகில் நிற்க, விசாலத்தின் நலிந்த கைபற்றி ஒரு ஜோடி வலையல்களைஅணிவித்தாள்.

"வைரம் போன்ற மனவலிமையும் தங்கமான மனசும் கொண்ட எங்க அம்மாவுக்கு எங்க ரெண்டு பேரோட அன்பான சின்னப் பரிசு இந்த வைர டாலருக்கு நடுவில எங்க அப்பாவோட படத்தைப் போட்டிருக்கதால அவங்க இதை கழட்டவே மாட்டாங்க" பேசியபடியே பாவனா ஒரு செயினை தாயின் கழுத்தில் பூட்டினாள்.

"ஒரு தாயோட கடமையைத்தான் நா செஞ்சிருக்கேன், இதெல்லாம் எதுக்குப்பா?" நெகிழும் தாயின் கால்களில் நால்வரும் விழுந்து நமஸ்கரித்தனர்.

தொடர்ந்து வந்த கல்யாணியும் கமலாவும் அவள் கால்களில் விழுந்தனர்.

"எங்களை மன்னிச்சுடுங்க அண்ணி, உங்க கஷ்ட நேரத்துல கைகொடுக்காம சுயநலமிகளா ஒதுங்கி நின்னு வேடிக்கை பார்த்த எங்ககிட்ட நீங்க காட்டற உங்க பெருந்தன்மையும் இளையவங்களானாலும் உங்க வாரிசுகளோட பண்பட்ட செயல்களும் பத்தாம் பசலிகளான எங்க கண்களைத் திறந்து மனசையும் சுத்தமாக்கிடுச்சு. சௌமி கண்ணு, அந்த தாம்பூலத் தட்டைகொண்டுவந்து எங்க அண்ணி கைல கொடு. அவங்க கையால வாங்கிக்கறதுதான் எங்களுக்குப் பெருமை." கல்யாணி சொல்லிய படியே கண்கள் பனிக்க தாம்பூலத் தட்டை விசாலத்திடம் நீட்டினாள்.

சபேசனின் புகைப்படத்திலிருந்து பூ ஒன்று அந்தத் தட்டில் விழுந்தது.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

***editor@ithamil.com***

# அறிவோம் தமிழர்

## பெரியாரின் சோஷலிஸம்!

“தோழர்களே! பொதுவுடைமை நாட்டில் கடவுளோ, மதமோ, சாஸ்திர நம்பிக்கையோ இல்லை. அங்கு உயர்ந்தவன், தாழ்ந்தவன்; உயர்ந்த உத்தியோகஸ்தன், தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்கின்ற நிலையும் இல்லை. எல்லோரும் சமமானவர்கள்; எல்லோருக்கும் சம்பளம் (வாழ்க்கை வசதி) ஒன்றுதான் — வேலைதான் வேறு வேறு. அங்கு பெரிய வேலையை ஒப்புக்கொண்டால் பொறுப்புகள் அதிகம் என்று கருதுவான். எனவே, அங்கு மேல், கீழ் என்று பாராட்டப்படுவதே இல்லை. இதனால் அங்கே உற்பத்தி பெருகுகின்றது.”

சோஷலிஸத்தைத் தென்னிந்தியாவில் முதன்முதலாகப் பிரச்சாரம் செய்தவர் திராவிட இயக்கத்தின் தலைவரான பெரியார். இடதுசாரி முகாமில் இடம்பெறாத அவர், அப்பழுக்கற்ற தேசியவாதியாகவும் காந்தியவாதியாகவும் பொதுவாழ்வில் இருந்தவர். அனைத்து மக்களும் முன்னேற்றம் காண வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற தன்னுடைய கோரிக்கையை ஏற்காததையும், தலைவர்களில் பலர் சமூகரீதியாகப் பிற்போக்குவாதிகளாக இருந்ததையும் கண்டித்து, காங்கிரஸ் இயக்கத்தைவிட்டு வெளியேறினார்.


## ‘குடிஅர’சின் தலையங்கம்

சென்னை மாகாணத்தில் நாகப்பட்டினத்தில் 1925—ல் நடந்த ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தை நடத்திய தொழிற்சங்க இயக்கத் தலைவர்களின் தோழமையை அடுத்து, அவருடைய அரசியல் வாழ்க்கையில் புரட்சிகரமான பயணம் தொடங்கியது. வேலை நிறுத்தத்தை ஆதரித்ததற்காக அவர் கைதுசெய்யப்பட்டார். சமூகநீதிக்காக அவர் தொடங்கிய பணிகளில் ஒரு சகாவாக கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தொடங்கியவர்களில் ஒருவரான எம்.சிங்காரவேலுவை ஏற்றுக்கொண்டார். சமூகநீதி, சுயமரியாதை ஆகிய கொள்கைகளை மக்களிடையே பரப்ப அவர் தொடங்கிய ‘குடி அரசு’ இதழில் பல கட்டுரைகளை எழுதினார் சிங்காரவேலர்.

1931 அக்டோபர் 4—ம் தேதி இதழில் கம்யூனிஸ்ட் அறிக்கை பற்றிய அறிமுகக் கட்டுரை ‘குடிஅர’சில் வெளியானது. மேலும், கம்யூனிஸ்ட் அறிக்கை ப.ஜீவானந்தத்தால் மொழிபெயர்க்கப்பட்டு தொடராக வெளியானது. 1925—ல் எஸ்.ராமநாதன் தொடங்கிய சுய மரியாதை இயக்கத்தின் உறுப்பினரான ஜீவானந்தம் தொடக்க கால கம்யூனிஸ்ட் தலைவராவார். சோஷலிஸக் கருத்துகள் தோன்றி சில நூற்றாண்டு கள் ஆனாலும் கம்யூனிஸ்ட் அறிக்கை மூலம் 1847—ல் உருவம் பெற்று, 1917—ல் ரஷ்யாவில் அரசு அரசியல் வடிவம் எடுத்தது என்று ‘குடிஅர’சின் தலையங்கம் பதிவுசெய்திருக்கிறது.

## அடிமையாக இருப்பதே மோக்ஷ சாதனம்

“இது சம்பந்தமாக நமக்குக் கிடைத்த ஒரு அறிக்கை சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்களில் முதன்மையான முக்கியஸ்தர்கள் ஜெர்மனியர்களாயிருந்தாலும், அதற்காக மகாநாடு கூடினது லண்டன் பட்டணமாய் இருந்தாலும், அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சு தேசமாயிருந்தாலும், அது முதல் முதல் அனுபவத்தில் கொண்டுவர முயற்சிக்க வேண்டிய இடம் ரஷியாவாகவே



# பெருமை

ஆர். விஜயசங்கர்


ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும், அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயம் இல்லாமலில்லைஞ் உலக அரசாங்கங்களிலெல்லாம் ரஷிய ஜார் அரசாங்கமே மிக்கக் கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. அதனாலேயே அங்கு சமதர்மமுறை அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

இந்த நியாயப்படி பார்த்தால், அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் ரஷிய தேசத்தை விட இந்தியாவுக்கே முதன்முதலாக ஏற்பட்டு இருக்க வேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அனேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும், சூழ்ச்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே கல்வி, அறிவு, உலக ஞானம், சுயமரியாதையுணர்ச்சி முதலியவை பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டுமிராண்டித்தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும், மோக்ஷ சாதனமென்றும் புகட்டி வந்ததாலும், அதே சூழ்ச்சிக்காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்து வந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச் செய்து வந்ததாலும் உலகில் சமதர்ம உணர்ச்சி முதன்முதலாக இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி ரஷியாவுக்கு முதல் ஸ்தானம் ஏற்பட வேண்டியதாயிற்று".

## சமதர்மத்திற்கு இரட்டிப்பு எதிர்ப்பு

புரட்சிகரமான மனப்பான்மைக்கும் இந்திய மக்களுக்கும் இடையில் ஒரு பிரிக்கும் கோடாக இருப்பது எது? தலையங்கம் அதைப் பின்வருமாறு விளக்குகிறது:

"ஆன போதிலும் கூட சமதர்ம உணர்ச்சி இப்போது உலகில் மற்றும் எல்லாப் பாகங்களிலும் ஏற்பட்டுவிட்டதின் காரணமாய் இந்தியாவிலும் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாய்ப் போய்விட்டதால், இங்கும் தலை காட்ட ஆரம்பித்துவிட்டது. ஆனால், உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்துவருகின்றது. அதென்னவென்றால், மற்ற நாடுகளில் ஒரு விஷயம்தான் முக்கியமாய்க் கருதப்படுகின்றது. அதாவது, முதலாளி (பணக்காரன்) வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால், இந்தியாவிலோ




மேல் ஜாதியார் — கீழ் ஜாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் அது பணக்காரன், ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது. ஆதலால், இங்கு சமதர்மத்திற்கு இரட்டிப்பு அதிகமான எதிர்ப்பு இருந்துவருவது கொண்டு சமதர்ம உணர்ச்சி தலை தூக்க

முடியவில்லை”.

முழுசோஷலிஸவாதி

இந்தத்தலையங்கமும் கம்யூனிஸ்ட் அறிக்கை தொடரும் பிரசுரமான இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ராமநாதன் மற்றும் இளம் உறவினரான ராமு ஆகியோருடன் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்தார் பெரியார். அன்றைய சென்னை துறைமுகத்திலிருந்து 1931 டிசம்பர் 13—ல் தொடங்கிய இப்பயணம், 1932 நவம்பர் 7—ல் முடிவுற்றது. அப்போது சோவியத் ஒன்றியத்தில் மூன்று மாதங்கள் தங்கினார். அதன் பிறகு முழு சோஷலிஸவாதி யாகிவிட்டார்.



நீண்ட காலத்துக்குப் பிறகு 1972—ல் ‘உண்மை’ என்ற பத்திரிகையில் சோவியத் யூனியனில் சோஷலிஸம் சாதித்தவற்றை நினைவுகூர்ந்திருந்தார். அப்போது, பின்வரும் அவதானிப்புகளை வலியுறுத்தியிருந்தார்.

“அங்கு பிள்ளைகளைத் தாய் தந்தைதான் காப்பாற்றவேண்டும், வளர்க்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அரசாங்கமே ஏற்று வளர்த்துக்கொள்கின்றது. இங்கு நம்மவர்கள் ‘எதற்கடா குழந்தை?’ என்றால் ‘செத்த பிறகு கொள்ளிவைக்க, ஈமக்கடன் செய்ய’ என்கின்றான்; மற்றும் ‘அந்திமக் காலத்தில் எங்களைக் காப்பாற்ற, கஞ்சி ஊற்ற அவசியம் குழந்தை வேண்டும்’ என்கின்றான்; ‘என் சொத்துக்கு வாரிசாக வேண்டும்’ என்கின்றான்.”

## ரஷியாவில் தனிமனிதனுக்குச் சொத்தில்லை

“ரஷியாவில் அப்படியல்ல. அவன் உடலில் வலுவுள்ளவரைக்கும் உழைத்துச் சாப்பிடுகின்றான்; வயோதிகம் வந்தால், அரசாங்கம் அவனுக்கு உணவு முதலிய வேண்டிய சவுகரியங்கள் எல்லாம் செய்துகொடுத்துக் காப்பாற்றுகின்றது. அங்கு தனி மனிதனுக்குச் சொத்து வைத்துக்கொள்ள உரிமையில்லாத காரணத்தினால், தம் சொத்துக்கு வாரிசு — பிள்ளை இருந்தாக வேண்டும் என்ற அவசியமுமில்லை.”

“தோழர்களே! பொதுவுடைமை நாட்டில் கடவுளோ, மதமோ, சாஸ்திர நம்பிக்கையோ இல்லை. அங்கு உயர்ந்தவன், தாழ்ந்தவன்; உயர்ந்த உத்தியோகஸ்தன், தாழ்ந்த உத்தியோகஸ்தன் என்கின்ற நிலையுமில்லை. எல்லோரும் சமமானவர்கள்; எல்லோருக்கும் சம்பளம் (வாழ்க்கை வசதி) ஒன்றுதான் — வேலைதான் வேறு வேறு. அங்கு பெரிய வேலையை ஒத்துக்கொண்டால் பொறுப்புகள் அதிகம் என்று கருதுவான். எனவே, அங்கு மேல் கீழ் என்று பாராட்டப்படுவதேயில்லை. இதனால் அங்கே உற்பத்தி பெருகுகின்றது.”

“அங்கு ஒரு ஆள் இத்தனை மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்றும், இவ்வளவு வேலை செய்தாக வேண்டுமென்றும் உள்ளது. ‘டைம்’ முடிந்தால் நம் நாட்டுத் தொழிலாளர்கள் போல அவர்கள் ஓட மாட்டார்கள்; அதிகப்படியாகக் கொஞ்சநேரம் வேலை, அவனாக முன்வந்து செய்வான். இப்படிச் செய்கின்றவர்களின் வேலைகளையும் நேரத்தையும் கணக்கிட்டு, வருஷமோ, மாதமோ ஆன பிறகு அவர்களுக்குப் பட்டம் கொடுத்து மரியாதை பண்ணுவார்கள். தோழர்களே! அங்கு இந்த மரியாதையினைத்தான் எதிர்பார்ப்பானேயொழிய அதிகப்படி பணத்தை எதிர்பார்க்கவே மாட்டான். அங்கு புரட்டோ, திருட்டோ ஏமாற்றுவதோ அடியோடு கிடையாது.”

“அங்கு, நாணயம் என்பது மக்களிடம் கரைபுரண்டு ஓடும். அங்கு, நான் கூறியதுபோல — மக்களுக்கு எந்தவிதமான குறைபாடுகளோ, கவலைகளோ இல்லை. இதன் காரணமாக மக்கள் அங்கு 100 வயதிலும் 120 வயதிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வாழ்கிறார்கள்.”

## புதிய திட்டம்

பெரியாரும் சிங்காரவேலரும் சுயமரியாதை இயக்கத்துக்காகப் புதிய திட்டத்தை வகுத்தனர். ராமநாதன் உள்ளிட்ட சில தலைவர்கள் கடுமையாக எதிர்த்தும் ஈரோட்டில் நடந்த மாநாட்டில் அது ஏற்கப்பட்டது. ‘ஈரோட்டுத் திட்டம்’ என்று அழைக்கப்பட்ட இந்தத் திட்டம், பிரிட்டிஷாரிடமிருந்தும் இதர வகை முதலாளித்துவ அரசுகளிடமிருந்தும் முழுச் சுதந்திரம் கோரியது.

தேசியக் கடன் தள்ளுபடி, அனைத்து விவசாய நிலங்களையும் வன நிலங்களையும் பொதுவுடைமையாக்குவது, நீர்நிலைகள், ரயில் துறை, வங்கிகள், கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துவகை போக்குவரத்து ஆகியவற்றையும் அரசுடைமையாக்க வேண்டும்;

தொழிலாளர்கள், விவசாயிகளின் கடன்களை ரத்துசெய்ய வேண்டும், தொழிலாளர்களும் விவசாயிகளும் தலைமை தாங்கி நடத்தும் அரசுக் கூட்டமைப்பில் அனைத்து சுதேச சமஸ்தானங்களையும் இணைக்க வேண்டும் என்பவை கோரிக்கைகள்.

அந்தத் திட்டங்களை மாநாடு ஏற்றுக்கொண்டது சுய மரியாதை இயக்கத்தின் அரசியல் பிரிவால் வெளியிடப்பட்டதன் மூலம் தென்னிந்தியாவின் சமதர்மக் கட்சி உதயமாகிவிட்டது. 1933 ஏப்ரலில் திருப்பூரில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டில் புதிய அரசியல் முறைமை குறித்து பெரியார் விளக்கிப் பேசினார்.



“இந்த இயக்கமானது இத்தனைக் காலமாக இந்து மதம் குறித்தும் பிராமணர்களின் தந்திரம் குறித்தும்தான் பேசிவந்திருக்கிறது; பிராமணர் அல்லாத சமூகத்தவரின் பொருளாதார, அரசியல் நலன்கள் குறித்து கவனம் செலுத்தியதே இல்லை. அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதன் மூலம்தான் அவர்களை முன்னேற்ற முடியுமே தவிர, பிராமணர்களின் அர்த்தமற்ற சடங்குகளை எதிர்ப்பதால் மட்டுமே முன்னேற்றிவிட முடியாது. முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தும் இப்போதைய அரசு முறைமை மூலம் பிராமணர் அல்லாதவர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்திவிட முடியாது, தொழிலாளர்கள் சேர்ந்து உருவாக்கும் சோஷலிஸ அரசினால் மட்டும்தான் அதைச் சாதிக்க முடியும்” என்று பெரியார் பேசியதை ஈ.சா.விஸ்வநாதன் ஆய்வு நூலில் நினைவுகூர்கிறார்.

## ‘குடிஅர’சால் செயல்பட்ட அரசு

இந்தப் புதிய கண்ணோட்டத்துடன் சுயமரியாதை இயக்கத்தின் இரண்டு பிரிவுகளும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றையும் சோவியத்யூனியனின் முதலாவது ஐந்தாண்டுத்திட்ட அறிக்கையையும் மொழிபெயர்த்து வெளியிட்டன என்கிறார் விஸ்வநாதன். புரட்சி, பகுத்தறிவு, சமதர்மம், வெடிகுண்டு என்ற பெயர்களில் வாரப் பத்திரிகைகளையும் கொண்டுவந்தார். மே தினத்தன்று பொதுக் கூட்டங்களை நடத்தினார். சுமார் 50 மே தினப் பொதுக்கூட்டங்களில் பெரியார் கலந்துகொண்டார். தமிழக மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், தனியுடைமையைக் கண்டித்தும், சோவியத் பாணி அரசை அமைக்க வேண்டியதை வலியுறுத்தியும் பேசினார்.

இது அதிகார வட்டாரங்களில் எச்சரிக்கை மணியை அடிக்கச் செய்தது. சமூகநீதிக்கான போராளியை பிரிட்டிஷ் அரசால் ஆதரிக்க முடியும், ஆனால், அவர் புரட்சிவாதியாக மாறுவதையும் சோஷலிஸ உலகை விரிவுபடுத்துவதையும் பொறுத்துக்கொள்ள முடியாது; (இந்திய) அரசாங்கத்தைத் தூக்கி எறிவது அவசியம் என்று அவர் ‘குடிஅர’சில் தலையங்கம் எழுதியதும், அரசு செயல்பட்டது. அரசுக்கு எதிராகக் கலகத்தைத் தூண்டுவதாகக் குற்றம்சாட்டி 9 மாதங்கள் சிறைத் தண்டனையையும் ரூ.3,000 அபராதத்தையும் விதித்தது.

## பெரியாரின் முடிவு

பிரிட்டிஷ் அரசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை 1934—ல் தடை செய்தது. பிரிட்டிஷ் அரசின் ஒடுக்குமுறை தொடங்கியதும் அவருடைய புரட்சிகர திட்டங்களுக்கு சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களிலேயே ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கினர். சுயமரியாதை இயக்கம் தொடங்கிய முதல் பத்தாண்டுகளிலேயே சாதித்த நன்மைகளை இந்த அணுகுமுறையால் இழக்க நேரிடும், தேசிய அலையால் உச்சத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் காங்கிரஸில் பிராமணர்களின் தலையெடுப்பு அதிகமாகிவிடும் என்று எச்சரித்தனர். சோஷலிஸ அரசா, பிராமணர் ஆதிக்கம் தடுப்பா எது முக்கியம் என்ற கேள்விக்குப் பதில் காண வேண்டிய இக்கட்டான நிலை பெரியாருக்கு ஏற்பட்டது.

‘சுயமரியாதை இயக்கத்தை ஒடுக்க பிரிட்டிஷ் அரசு உறுதிபூண்டுவிட்டதை உணர்ந்தேன், அரசின் கண்காணிப்பு, தலையீடு காரணமாக இயக்கம் ஏற்கெனவே பாதிக்கப்படத் தொடங்கியதையும் கண்டேன்; அரசின் அடக்குமுறை காரணமாக காங்கிரஸ் கட்சிகூட மறைமுக நடவடிக்கைகளுக்கு மாறிவிட்டதையும் கண்டேன். சுயமரியாதை இயக்கத்தவர்களால் சோஷலிஸ பிரச்சாரம் செய்வதை நிறுத்துவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்’ என்று ‘குடிஅரசு’ இதழில் எழுதினார் பெரியார்.

பெரியார் அன்று எடுத்த அந்த முடிவு, தமிழகத்தின் வரலாற்றையும் அரசியலையும் பாதை மாற்றிவிட்டது!

— ஆர்.விஜயசங்கர், ‘ஃப்ரண்ட்லைன்’ ஆசிரியர் © ஃப்ரண்ட்லைன்
தமிழில்: சாரி




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# முற்றுகைக்கு ஆயத்தம் 16

கண்ணபிரானும் கமலியும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் அரண்மனை அந்தப்புரத்தின் முன் வாசல் மண்டபத்தில் அமர்ந்து, மகேந்திர பல்லவரின் பட்ட மஹிஷியான புவன மகாதேவியும், மாமல்ல நரசிம்மரும், தளபதி பரஞ்சோதியும் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.




"தேவி! சென்ற எட்டு மாதங்களாக இந்தக் கோட்டைக்குள்ளே அடைபட்டுக் கிடக்க நேர்ந்ததன் பொருட்டுக் குமார சக்கரவர்த்தி ஓயாமல் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறாரே? அவர் குறைப்படுவதற்குக் காரணம் ஒன்றுமே இல்லை. கோட்டை மதில், நகரம் எல்லாவற்றையும் நான் நன்றாய்ச் சுற்றிப் பார்த்தாகிவிட்டது. இந்தக் காஞ்சிக் கோட்டையை ஏறக்குறையப் புதிய கோட்டையாகவே செய்து விட்டிருக்கிறார். தேவேந்திரனும் விருத்திராசுரனும் சேர்ந்து படையெடுத்து வந்தாலும் கூடக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே புக முடியாது. வாதாபி புலிகேசியும் தலைக்காட்டுத் துர்விநீதனும் என்ன செய்துவிடப் போகிறார்கள்!" என்று தளபதி பரஞ்சோதி கூறினார்.

"கோட்டையை அவ்வளவு பலப்படுத்த மாமல்லன் என்னென்ன காரியங்கள் செய்திருக்கிறான்? நீதான் எனக்குச் சொல்லவேண்டும், பரஞ்சோதி! மாமல்லன் எனக்கு ஒன்றுமே சொல்வதில்லை. அந்தப்புரத்திற்குள் அடைபட்டுக் கிடக்க வேண்டிய அபலை ஸ்திரீக்கு யுத்த விஷயங்கள் என்ன தெரியப் போகிறது என்று அவருக்கு எண்ணம்!" என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமஹிஷி.

"அம்மா! அந்தப்புரத்தில் அடைபட்டுக் கிடக்கும் அபலை ஸ்திரீ உண்மையில் தாங்களா? நானல்லவா பெண்ணிலும் கேடானவனாகக் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறேன்! மகேந்திர பல்லவர் இப்படி என்னை வஞ்சிப்பார் என்று நான் நினைக்கவில்லை!" என்று கூறி மாமல்லர் கைகளைப் பிசைந்து கொண்டார்.

"குழந்தாய்! உன் தந்தையைப் பற்றி எதுவும் சொல்லாதே! அவர் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அது முன் யோசனையுடனும் தீர்க்க திருஷ்டியுடனும் இருக்கும்..." என்று புவன மகாதேவி கூறுவதற்குள் பரஞ்சோதி, "உண்மை தேவி! உண்மை! மகேந்திர சக்கரவர்த்தியைப் போல் மதிநுட்பமும் முன்யோசனையும் உள்ளவர்களை ஈரேழு பதினாலு உலகத்திலும் காண முடியாது என்று நான் சத்தியம் செய்வேன்!" என்றார்.

"ஒருவருக்கு இரண்டு பேராய்ச் சேர்ந்து கொண்டீர்கள் அல்லவா? அப்படியென்றால் நானும் உங்களோடு சேர்ந்து கொள்ளுகிறேன். மகேந்திர பல்லவர் ரொம்பவும் முன் யோசனையுடன் காரியங்களைச் செய்கிறவர்தான்; சந்தேகமில்லை. ஆனால், அவருடைய தந்தை சிம்மவிஷ்ணு மகாராஜா இன்னும் அதிக முன் யோசனை உள்ளவர். ஆகையினால்தான் அவர் துர்விநீதனுடைய தந்தைக்குப் பட்டங்கட்டி வைத்தார்.

அவரே நேரில் கங்கதேசம் சென்று தம் கையினாலேயே மகுடம் சூட்டினார்! அந்தக் காரியத்துக்கு எவ்வளவு நன்றாய் இப்போது துர்விநீதன் நன்றி செலுத்துகிறான் பாருங்கள்! சிங்கமும் சிங்கமும் சண்டை போட்டுக் கொண்டிருக்குபோது நடுவில் நரி நுழைவது போல், புலிகேசி படையெடுத்திருக்கும் சமயம் பார்த்துத் துர்விநீதனும் பல்லவ ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறான்! அவசர அவசரமாக




எங்கும் இராத் தங்காமல் துர்விநீதன் தன் சைனியத்துடன் வந்து கொண்டிருக்கிறான்! இது தெரிந்தும், நான் இந்தக் கோட்டைக் குள்ளே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது! நீங்கள் சக்கரவர்த்தியின் மதிநுட்பத்தையும் தீர்க்காலோசனையையும் பற்றி பேசுகிறபோது, எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது!" என்று மாமல்லர் கூறுகையில், அவருடைய கண்கள் நெருப்புத் தணலைப் போல் சிவந்து தீப்பொறியைக் கக்கின.

"குழந்தாய்! வீணாக நொந்து கொள்ளாதே! கங்கபாடி அரசனின் நன்றியற்ற துரோகச் செயலை நினைத்தால் எனக்கும் கோபமாய்த் தானிருக்கிறது! அதற்காக என்ன செய்யலாம்? எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா?" என்றாள் புவனமகாதேவி.

"தேவி! துர்விநீதனுக்குத் தக்க தண்டனை கொடுக்க இதற்குள்ளாகவே சக்கரவர்த்தி திட்டம் போட்டிருப்பார். சந்தேகமில்லை" என்றார் தளபதி பரஞ்சோதி.

"சக்கரவர்த்தி திட்டம் போட்டிருப்பார். அதை நிறைவேற்றவும் செய்வார். ஆனால் நான் ஒருவன் எதற்காக யுவ மகாராஜா, குமார சக்கரவர்த்தி, மாமல்லன் முதலிய பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறேன்? அம்மா! பாரதக் கதையில் வரும் உத்தர குமாரனைவிடக் கேடானவன் ஒருவன் உண்டு என்றால், அவன் நான் தான். உத்தர குமாரனாவது போர்க்களத்துக்குப் போய்விட்டுத் திரும்பி ஓடிவந்தான். நானோ அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை. மகாபாரதக் கதையை எழுதியதுபோல் இந்தக் காலத்து கதையை யாராவது எழுதினால், என்னுடைய வீரத்தையும் தீரத்தையும் எவ்வளவு பாராட்டுவார்கள்? ஆனாலும் நான் சாந்தமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் இருவரும் சேர்ந்து உபதேசிக்கிறீர்கள்!" என்று கூறியபோது, வீர மாமல்லரின் கண்களில் நீர் ததும்பி நின்றது.

அவருடைய முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாதவராயிருந்த பரஞ்சோதி சக்கரவர்த்தினியை நோக்கி, "தேவி! பல்லவ குமாரர் தம்மை உத்தர குமாரனுடன் ஒப்பிட்டுக் கொள்வது கொஞ்சமும் பொருத்தமாயில்லை. மற்ற எல்லாரும் போருக்குப் போனபோது உத்தர குமாரன் என்ன செய்து கொண்டிருந்தான்? தன்னுடைய தங்கை உத்தரகுமாரி நாட்டியம் கற்றுக் கொள்வதைப் பார்த்துக் கொண்டு காலம் கழித்தான். மாமல்லர் அப்படிக் காலம் கழிக்கவில்லையே!" என்றார்.

இவ்விதம் அவர் சொல்லி வருகையில் மூன்று



பேருக்கும் சிவகாமியின் நாட்டியக் கலை விஷயம் ஞாபகம் வந்தது மாமல்லரின் முகம் சுருங்கியது.

பரஞ்சோதி தாம் நடனக் கலையைப் பற்றிப் பிரஸ்தாபித்தது உசிதத் தவறு என்பதை உணர்ந்து கொண்டு, "மேலும், யுத்தம் இன்னும் ஆரம்பமாகக்கூட இல்லையே? மகாபாரத யுத்தத்தைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிய யுத்தம் இனிமேல் தானே நடக்க இருக்கிறது? மாமல்லர் வீரச் செயல்கள் புரிவதற்கு இனி மேல்தானே சந்தர்ப்பங்கள் வரப் போகின்றன?" என்றார்.




"போதும், போதும்! எத்தனை யுத்தம் நடந்தால்தான் என்ன? எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் வந்தால்தான் என்ன? அப்பா என்னை இந்தக் கோட்டைக்குள்ளேயே பூட்டி வைக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்?" என்று மாமல்லர் கொதிப்புடன் கேட்டார்.

புதல்வனின் மன நிலையைக் கண்ட அன்னை பேச்சை மாற்ற விரும்பி, "பரஞ்சோதி! கோட்டையைப் பத்திரப் படுத்துவதற்கு மாமல்லன் செய்திருக்கும் காரியங்களைப் பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லையே?" என்றாள்.

"தேவி! நமது கோட்டை மதிலைச் சுற்றியுள்ள அகழியைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆமாம்; எட்டு மாதங்களுக்கு முன்னால் பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தி புறப்பட்டுச் சென்ற பிறகு நான் அரண்மனையை விட்டு வெளிக் கிளம்பவே இல்லை."

"நானும் எட்டு மாதங்களுக்கு முன்பு பார்த்ததுதான். முன்னே பார்த்தபோது சிறு கால்வாய் மாதிரி இருந்தது. இப்போது பார்த்தால் சமுத்திரம் மாதிரி அலைமோதிக் கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு காணப்படுகின்றன. வாதாபிச் சைனியத்தில் எத்தனை பேருக்கு இந்த அகழியில் மோட்சம் கிடைக்கப் போகிறதோ!" என்றார் பரஞ்சோதி.

"அகழியில் அவர்கள் இறங்கினால் தானே? பாலங்கள் அமைத்துக் கொண்டு வந்தால்? அல்லது படகிலே வந்தால்?"

"தேவி! அகழியின் அருகில் வருகிறவர்கள் மீது அம்புகளைப் பொழிய ஐயாயிரம் வில் வீரர்கள் மதில் சுவர்கள் மீது மறைந்து காத்திருப்பார்கள்! அப்படியும் அகழியைத் தாண்டி வருகிறவர்களுக்கு மதில் சுவருக்கும் அகழிக்கும் மத்தியில் எத்தனையோ அதிசயங்கள் காத்துக்கொண்டிருக்கும். வெளிக்குத் தெரியாத பள்ளங்களில் அவர்கள் விழுந்து காலை ஒடித்துக் கொள்வார்கள். ஆங்காங்கே கண்ணுக்குத் தெரியாதபடி விரித்திருக்கும் வலைகளிலும் பொறிகளிலும் சிக்கிக் கொள்வார்கள். இவற்றையெல்லாம் மீறி வந்து மதில்சுவர் மேல் ஏற முயலும் சளுக்க வீரர் தலைகளின் மீது மதில்சுவரின் மேல் வைத்திருக்கும் பாறாங்கற்கள் உருண்டுவிழும்!"

"வாதாபிச் சைனியம் கடலைப்போல் பெரியதென்று சொல்கிறார்களே, பரஞ்சோதி! லட்சக்கணக்கான வீரர்கள் மனம் வைத்தால் அகழியை ஆங்காங்கே தூர்த்து வழி ஏற்படுத்திக் கொள்ளலாமல்லவா!"

"ஆமாம் தேவி! அகழியைத் தூர்க்கலாம். ஆனால் கோட்டை மதிலை அவ்வளவு சுலபமாக இடிக்க முடியாது!"

"கோட்டை வாசலுக்கு எதிரே அகழியைத் தூர்த்துக் கொண்டு யானைகளை ஏவினால் என்ன செய்கிறது? மத்த கஜங்களின் தாக்குதலுக்கு எதிரே கோட்டையின் மரக் கதவுகள் என்ன செய்யும்?" என்று பட்டமகிஷி கேட்ட போது, பரஞ்சோதி எதையோ நினைத்துக் கொண்டவர்போல் சிரித்தார்.

"அப்பா! ஏன் சிரிக்கிறாய்?" என்றாள் சக்கரவர்த்தினி.

"தாங்கள் கேட்டதை நினைத்துத்தான் சிரிக்கிறேன். உண்மைதான் தேவி! வாதாபி வீரர்கள் அப்படித்தான் செய்யப் போகிறார்கள். நமது கோட்டை வாசல்களுக்கு எதிரே அகழியைத் தூர்க்கப் போகிறார்கள் அல்லது பெரிய பெரிய மரங்களை வெட்டிக் கொண்டு வந்து பாலம் போடப் போகிறார்கள். போட்டுவிட்டுக் கோட்டைக் கதவுகளைத் தகர்க்க யானைகளை ஏவப் போகிறார்கள். அந்த யானைகளுக்கு

முதலில் மதுவைக் கொடுத்து விட்டுத்தான் ஏவப்போகிறார்கள்! ஆனால், ஆகா! அந்த யானைகள் எப்பேர்ப்பட்ட அதிசயத்தை அனுபவிக்கப் போகின்றன? கோட்டை வாசலின் மேல்மண்டபத்திலிருந்தும் பக்கத்து மதில் சுவர்களின் மேலிருந்தும் வஜ்ராயுதம் விழுவது போல் வேல்கள் வந்து அவற்றின் தலைமீது விழும்போது, அந்த மதுவுண்ட யானைகள் பயங்கரமாய்ப் பிளிறிக் கொண்டு திரும்பி ஓடி வாதாபி வீரர்களை துவைத்து நாசமாக்கப் போகிற காட்சியை நினைத்துப் பார்க்கையிலே எனக்குச் சிரிப்பு வருகிறது! இது மட்டுமா? மேலேயிருந்து விழுகிற வேல்களுக்குத் தப்பிச் சிற்சில யானைகள் வந்து கதவிலே மோதக் கூடுமல்லவா? அதனால் கோட்டைக் கதவு பிளக்கும் போது அந்த யானைகளுக்கு மகத்தான அதிசயம் காத்திருக்கும் தேவி! வெளிக் கதவு பிளந்ததும், உள்ளே நீட்டிக் கொண்டிருக்கும் வேல் முனைகள் அவற்றின் மண்டையைப் பிளக்கும்போது ஆகா, அந்த யானைகள் வந்த வேகத்தைக் காட்டிலும் திரும்பி ஓடும் வேகம் அதிகமாயிராதா?" என்றார் பரஞ் சோதி.



"அப்படியா?" என்று மாமல்லரின் அன்னை அதிசயத்துடன் கேட்டாள்.

அதுவரையில் மௌனமாயிருந்த மாமல்லர் அப்போது சம்பாஷணையில் சேர்ந்து, "ஆம் அம்மா! ஆனால், இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் மூல காரணம் யார் தெரியுமா? நமது தளபதி பரஞ்சோதிதான்! இவர் முதன் முதலில் காஞ் சியில் புகுந்த அன்று மதயானையின் மேல் வேல் எறிய, யானை திரும்பி ஓடிற்றல்லவா? அதற்கு மறுநாளே இந்தக் காஞ்சி மாநகரிலுள்ள கொல்லர்கள் எல்லோரும் வேல் முனைகள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்! தளபதி அன்று செய்த காரியத்தினாலேதான், வாதாபியின் யானைப் படையை எதிர்ப்பதற்குத்தக்க யோசனை அப்பாவின் மனத்தில் உதயமாயிற்றாம். இதையெல்லாம் அப்பாவே என்னிடம் சொன்னார்!" என்று மாமல்லர் பெருமையுடன் கூறிப் பரஞ்சோதியை அன்புடன் தழுவிக் கொண்டார்.

"தேவி! இந்த எட்டு மாதத்தில் காஞ்சி நகர்க் கொல்லர்கள் செய்திருக்கும் வேலையை நேற்று நான் பார்த்தேன். லட்சோபலட்சம் வேல்களைச் செய்து குவித்திருக்கிறார்கள். காஞ்சி நகர் கொல்லர்கள் வெகு கெட்டிக்காரர்கள், அம்மா! நான் கொண்டு வந்திருந்த சோழ நாட்டு வேலைப்போலவே அவ்வளவும் செய்திருக்கிறார்கள். என்னையே அவர்கள் ஏமாறச் செய்து விட்டார்கள். வடநாட்டுக்கு நான் யாத்திரை சென்றபோது என்னிடம் கொடுக்கப்பட்ட வேல் என்னுடைய சொந்த வேல் தான் என்று எண்ணி நான் ஏமாந்துபோனேன். இங்கே திரும்பி வந்ததும்தான் என்னுடைய வேலை மாமல்லர் பத்திரமாய் வைத்திருந்தார் என்று தெரிந்தது. எட்டு மாதமும் வீணில் கழித்ததாக மாமல்லர் எண்ணுவது பெரும் பிசகு. அம்மா! கோட்டை மதில் பாதுகாப்புக் காரியம் மட்டுமல்ல. கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக இன்னும் எவ்வளவோ செய்திருக்கிறார். காஞ்சி மக்களுக்கு இரண்டு வருஷத்துக்குத் தேவையான தானியங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. நகருக்குள்ளிருந்த அநாவசியமான மக்கள் எத்தனையோ பேரை வெளியேற்றியாகிவிட்டது. முக்கியமாகக் காஞ்சி நகருக்கே அவலட்சணமாயிருந்த காபாலிகர்களை வெளியேற்றிவது பெரிய காரியம். அதற்குக் குமார சக்கரவர்த்தி வெகு நல்ல யுக்தியைக் கையாண்டார். தேவி! காஞ்சியிலுள்ள மதுபானக் கடைகளையெல்லாம் மூடிவிட வேண்டும் என்று நேற்றைய தினம் கட்டளை போட்டார். இன்றைக்கு அவ்வளவு காபாலிகர்களும் கையில் மண்டை ஓட்டையும் மாட்டுக் கொம்பையும் எடுத்துக் கொண்டு வடக்குக் கோட்டை வாசல் வழியாகப் போய்விட்டார்கள்...!"

இப்படிப் பரஞ்சோதி சொல்லிக் கொண்டே வருகையில் அந்தப்புரத்துச் சேடி ஒருத்தி, அரண்மனை முன்கட்டிலிருந்து உள்ளே வந்து புவனமகாதேவியின் அருகில் நின்று மெதுவான குரலில் ஏதோ கூறினாள்.

அதைக் கேட்ட தேவி முகத்தில் கிளர்ச்சியுடன், "மாமல்லா! அப்பாவிடமிருந்து செய்தியுடன் சத்ருக்னன் வந்திருக்கிறானாம்!" என்று சொன்னாள்.

மாமல்லர் பரபரப்புடன் எழுந்து போக முயற்சித்தபோது, "குழந்தாய்! சத்ருக்னன் இங்கேயே வரட்டும். செய்தி என்னவென்று நானும் தெரிந்து கொள்கிறேன்" என்றாள் அன்னை.


(சபதம் தொடரும்)



# சித்தர்

*சித்தர் சொல் கேளீர்!*

மானுடத்தை நேரிய வழியில் நெறிப்படுத்த ஒவ்வொரு கண்டத்திற்கும் ஒரு மதம் தோன்றியது. ஆனால், நாளடைவில் அந்த மதங்கள் தடம் மாறியதோடு, அதனைப் பின்பற்றிய மனிதர்களையும் தடம் புரள வைத்தது. இரண்டு உலகப் போர்களுக்குப் பிறகு உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கென்று ஐ.நா சபை உருவாகிற்று. ஆனால், வீட்டோ அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கின்ற வல்லரசுகளால், அது செயலிழந்து நிற்கிறது. இப்பொழுது உலகச் சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதற்கு மொழி கடந்து, மதம் கடந்து, தேசிய குணம் கடந்து வாழ்கின்ற சித்தர் பெருமக்களால்தான் முடியும்.



சித்தர்கள் “சித்தர்” என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர் என்பது பொருள். இயமம், நியமம், ஆதனம்,பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டு வகையான யோகாங்கம் முலம் எண் பெருஞ் சித்திகளை பெற்றவர்கள் சித்தர்கள் ஆவார்.

சித்தர்கள் பொது வாழ்க்கை நெறிக்கு உடன்படாதவர்களாகத் தங்களுக்கென்று தனி வாழ்வியல் வழி முறைகளை உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்த இயற்கையோடு இயற்கையான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆவார். சித் — அறிவு, சித்தை உடையவர்கள் சித்தர்கள். நிலைத்திருக்கும் பேரறிவு படைத்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் என்றால் நிறைமொழி மாந்தர் என்னும் அறிஞர்கள் என்றும் பொருள்படுவதாக பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. மருத்துவத்தோடு யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியலையும் தந்தவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டனர்

சித்தர்கள் இயற்கையை கடந்த (supernatural) சக்திகள் உடையவர்கள் என்று சிலர் இயம்புவதுண்டு, எனினும் இவர்கள் உலகாயுத (material) இயல்புகளை சிறப்பாக அறிந்து பயன்படுத்தினர் என்பதுவே தகும். இவர்களின் மருத்துவ, கணித, இரசவாத, தத்துவ, இலக்கிய, ஆத்மீக ஈடுபாடுகள் வெளிப்பாடுகள் இவர்களின் உலகாயுத பண்பை எடுத்தியம்புகின்றன. ஆயினும் இவர்கள் வெறும் பெளதிகவாதிகள் (materialists) அல்ல. மெய்ப்புலன் காண்பது அறிவு என்பதிற்கிணங்க, உண்மை அல்லது நிஜ நிலை அடைய முயன்றவர்கள் சித்தர்கள்.

“சாதி,சமய சடங்குகளை கடந்து; சமுகத்தில் பயனுடையவை எவை, என்பதைப் பிரித்தறிந்து அவற்றுள் புதுமைகளைப் புகுத்து கின்ற அறிஞர்களாகவும், சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, சாதி சமய மன மாச்சரியங்களை மாற்றக் கருதிய சீர்த்திருத்த வாதிகளாகவும்“ சித்தர்கள் வாழ்ந்தனர். “விந்தையான செயல்கள், பட்டறிவு தமிழ், சீரிய ஆராய்ச்சி” ஆகிய அம்சங்கள் சித்தர்களை வருணிப்பன எனலாம். அப்படிப்பட்ட மேலோட்டமான வருணிப்புக்களுக்கு மேலாக, சித்தர்கள் என்பவர்கள் சித்தி அடைந்தவர்கள்.



# ஆகலாம்!

தி. இராசகோபாலன்

தங்கள் இருப்பை (existence), உடம்பை, சிந்தையை, சுற்றத்தை, இவ்வுலகின் இயல்பை நோக்கி தெளிவான புரிதலை (understanding), அறநிலை உணர்வை (மீஜ்மீமீகூஷீஸீணீறீ ணீஷ்ணீகூஷீமீஸீமீடீவ), மெய்யடைதலை (actuality) சித்தி எய்தல் எனலாம்.

சித்தர்களை புலவர்கள், பண்டாரங்கள், பண்டிதர்கள், சன்னியாசிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஓதுவார்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அரசர்கள், மறவர்கள், ஆக்கர்கள், புலமையாளர்கள்,அறிவியலாளர்கள்,பொதுமக்கள் ஆகியோரிடம் இருந்து வேறுபடுத்தி அடையாளப்படுத்தலாம். சித்தர்களின் மரபை, கோயில் வழிபாடு, சாதிய அமைப்பை வலியுறுத்தும் சைவ மரபில் இருந்தும்,[சான்று தேவை] உடலையும் வாழும்போது முக்தியையும் முன்நிறுத்தாமல் "ஆத்மன்", சம்சாரம் போன்ற எண்ணக்கருக்களை முன்நிறுத்தும் வேதாந்த மரபில் இருந்தும் வேறுபடுத்திப் பார்க்கலாம். இன்று, சித்தர் மரபு அறிவியல் வழிமுறைகளுடன் ஒத்து ஆராயப்படுகின்றது. எனினும், சித்தர் மரபை தனி அறிவியல் கண்ணோட்டத்தில் பார்ப்பது அதன் பரந்த வெளிப்படுத்தலை, அது வெளிப்படுத்திய சூழலை புறக்கணித்து குறுகிய ஆய்வுக்கு இட்டு செல்லும்.

புதிய யுகத்திற்குப் பூபாளம் பாடிய மகாகவி பாரதி, "எனக்கு முன்னே சித்தர் பலர் வந்தாரப்பா, யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்' என்று தம்மை ஒரு சித்தர் என்றே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர் காலத்தில் வாழ்ந்த மக்களால், இந்தியாவுக்கே நல்வாழ்வு கிடைக்கவில்லை என்பதைப் பாரதி, "மனவலிமையும் பொருள் வலிமையும் அற்ற இந்திய அரசர்களாலோ, வேத மந்திரங்களைப் பொருள் தெரியாமல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் பிராமணர்களாலோ, கொடைக்குணம் மறந்த வணிகர்களாலோ,



மூடத்தன்மை மிக்க மற்றவர்களாலோ, இந்தியாவுக்கு அமரத்தன்மை கிடைக்கவில்லை' என்றவாறு புலப்படுத்துகின்றார்.

மேலும் சித்தர்களும் யோகியர்களும் தாம் காத்து வருகிறார்கள் என்பதை, "இந்த தேசத்திலுள்ள ஜீவனை யுகயுகாந்தரங்களாக அழியாதபடி பாதுகாத்து வருவோர் யோகிகளே! கொடூரமான கலியில் உலகம் தலைகீழாகக் கவிழ்ந்து போகும் சமயத்தில்கூட, இந்துஸ்தானம் அழியாமல் தானும் பிழைத்து, மற்றவர்களையும் காக்கக் கூடிய ஜீவசக்தி, இந்நாட்டிற்கு இருப்பது அந்த யோகியரின் தபோ பலத்தாலன்றி வேறு இல்லை' என்பதாக பாரதியார் எழுதுகின்றார்.

பாரதியின் அடிச்சுவட்டில் தடம் பதித்து வந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும், "சித்தர்களும் யோகிகளும் சிந்தனையில் ஞானிகளும், எத்தனையோ உண்மைகளை எழுதி எழுதி வச்சாங்க' என்றார்.

சித்தர்கள், உலகத்துக்கே ஒரே நாயகனாகத் திகழ்கின்ற இறைவனின் வாக்குப்படி நடப்பவர்கள் என்பதால், "சித்தம் போக்குச் சிவன் போக்கு' எனும் பழமொழி உருவாகிறது. மேலும், சித்தமயம் இவ்வுலகம் எனும் உறுதி, நம் சித்தத்தில் ஓங்கிவிட்டால், துன்பம் அத்தனையும் வெல்லலாம் என்றார் பாரதியார். சித்தர்கள் சிலரோடு பழகிய மகாகவி பாரதி, சித்தர்களின் சுபாவங்களைக் "கந்தை சுற்றித் திரிவதென்னே? தேவனைப்போல் விழிப்பதென்னே? சிறியாரோடும் தெருவிலே நாய்களோடும் விளையாட்டென்னே? பாவனையிற் பித்தரைப் போல் அலைவதென்னே? பரமசிவன் போலுருவம் படைத்ததென்னே? ஆவலற்று நின்றதென்னே' என்றெழுதிக் காட்டுவதோடு, அவர்களை ஆச்சரியத்தோடும் பார்த்து நிற்கின்றார்.

பாரதியாரும் ஒரு சித்தரே என்பதால் சித்தர்களின் பேராற்றலை முதன் முதலில் வியந்து சொன்னவரும், அவராகவே திகழ்கின்றார். "தெளிந்த ஞானி, பாசத்தை அறுத்துவிட்டான்; பயத்தைச் சுட்டான்; பாவனையாற் பரவெளிக்கு மேலே தொட்டான்; நாசத்தை அழித்துவிட்டான்; யமனைக் கொன்றான்; ஞானகங்கை தனை முடிமீது ஏந்தி நின்றான்; ஞானகுரு புகழினை நாம் வகுக்கலாமோ? எனச் சித்தர்களின் பெருமையினைப் பேசுகின்றான், பாரதி!

இறைவனுடைய ஆற்றலுக்கும் சக்திக்கும் ஈடான ஆற்றலைப் பெற்றவர்கள் சித்தர்கள் என்றார், திருமூலர். முற்பிறவியின் முடிச்சை அவிழ்க்கக் கூடியவர்கள் சித்தர்கள் என்றும் அவர்களே இந்தப் பிறவியின் கர்மவினையை வலுவிழக்கச் செய்யக்கூடியவர்கள் என்றும் திருமூலர் கூறினார்.

நீரின் தன்மையும் நெருப்பின் தன்மையும் நாட்டுக்கு நாடு வேறுபடாதிருப்பது போல், சித்தர்களின் தன்மையும் உலகளவில் ஒன்றாகவே இருக்கும்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமய ஒருமைப்பாட்டைப் பாடினார்களே தவிர, உலக ஒருமைப்பாட்டை எண்ணிப் பார்த்ததில்லை. கிறித்தவத்தில் இருக்கின்ற ரோமன் கத்தோலிக்கர்களும், பிராட்டடஸ்டன்ட்களும் ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போவதில்லை. அரபு நாடுகளிலுள்ள சியா முஸ்லீம்களும், சன்னி முஸ்லீம்களும் ஒத்துப் போகாததோடு வேற்றுமைகளையும் வளர்த்து வருகின்றனர். அப்படியிருக்கையில் திருமூலர் என்ற சித்தர்தான், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று உலக ஒற்றுமைக்கும், உலகச் சகோதரத்துவத்திற்கும் முதல் குரல் கொடுத்தார்.

சித்தர்கள் இறைவனின் பிரதிநிதிகளாய் இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள் என்பதை, "மனிதரிலே மரமுண்டு, விலங்குண்டு, பறவையுண்டு, மனிதரிலே மனிதருண்டு, வானவரும் மனிதராய் வருவதுண்டு' எனும் சித்தர் பாடலால் அறியலாம்.

சித்தர்களுக்குத் தோற்றம் உண்டு; மறைவு கிடையாது. அவர்கள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து வாழ்வதைப் "பரகாயப் பிரவேசம்' என்பர். ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் சாதிகளும் உண்டு; மதமும் உண்டு. சாதி பேதம்தான் ஒழிய வேண்டும் என்று பாடினார்கள். ஆனால், சித்தர்கள் சாதியின் பெயரும் மதத்தின் பெயரும் இல்லாமல் போக வேண்டும் என்று நினைத்தவர்கள். இடைக்காட்டுச் சித்தர், "பலமதம் பொய்ம்மையே என்று ஓது குயிலே!' என்றார். பாம்பாட்டிச் சித்தர் "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்' எனப் பாடினார். "சாதியாவது ஏதடா?...

சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ' என நொந்து பாடினார் சிவவாக்கியர்.


"சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கிச், சூத்திரத்தைக் கண்டு துயர் அறுப்பது எக்காலம்' எனப் பாடினார் பத்திரகிரியார். "பொய் வேதந்தன்னைப் பாராதே! அந்தப் போதகர் சொற்புத்திப் போதவராதே!' என்றார் கடுவெளிச் சித்தர்.

சமுதாயச் சீர்திருத்தத்தோடு பொருளாதாரச் சமத்துவமும் திகழ்ந்தால்தான், உலக ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என எண்ணியவர்கள் சித்தர்கள். எனவே, "பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா? இறைச்சிதோல் எலும்பிலும் இலக்கமிட்டு

இருக்குதோ? பறைச்சி போகம் வேறதோ? பணத்தி போகம் வேறதோ?' எனப் பாடினார் என்பது மட்டும் அன்று; சாடினார் சிவவாக்கியர்.

இன்றைக்கு உலகமெல்லாம் போற்றிப் பின்பற்றுகின்ற மூச்சுப் பயிற்சி, யோகாசனம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அன்றைக்கே பாடிச் சென்றுள்ளனர் சித்தர்கள்!

அப்படி மூச்சுப் பயிற்சியை வழக்கமாகக் கொண்டால், முதியோர்கள் இளமையை அடைய முடியும் என்றும், கருநிறமான மேனியுடையவர்களும் செந்நிறமுடையவர்களாய் ஆக முடியும் என்றும் பாடியுள்ளார், சிவவாக்கியர். (உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக் கருத்தினால் இருத்தியே, கபாலம் ஏற்ற வல்லிரேல், வியத்தரும் பாலராவர்; மேனியும் சிவந்திடும்).



இதே கருத்தை வற்புறுத்தி திருமூலர், மூச்சுப் பயிற்சியின் மூலம் எமனையும் எட்டி உதைக்க முடியும் என்கிறார்.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும், காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாரில்லை, காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்குக் கூற்றை உதைக்கும் குறியதுவாமே' என்பது திருமந்திரம். சித்தர்கள் இவ்வுலகப் பற்றுக்களிலிருந்து தங்களை முற்றாக விடுவித்துக் கொண்டிருந்தாலும், மற்ற மனிதர்கள் வாழ்வதற்குரிய செம்மையான நெறிகளைக் கூறிச் சென்றிருக்கிறார்கள்.

இவ்வுலகத்தில் வாழும் எல்லா மனிதர்களின் துன்பங்களுக்கும் காரணம், ஆசை — பேராசை என்பதை ஆதியிலே கண்டு சொன்னவர்கள் சித்தர்கள்! வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்றால், மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டும் என்று உலகத்தவரை எச்சரித்தவர்கள் சித்தர்கள்!

அளவுக்கு அதிகமாக ஆசைப்பட்டு, அந்த ஆசை நிறைவேறாதபொழுது ஆத்திரப்பட்டு, அதனால் மன அதிர்வு ஏற்பட்டு, அந்த அதிர்வால் இதயவலி உண்டாகி, அதன் மூலம் உயிரிழப்பிற்கு உள்ளாகின்றனர். இதனைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்த திரிகாலஞானியாகிய பத்திரகிரியார், "ஓயாக் கவலையினால், உள்ளுடைந்து வாடாமல், மாயாப் பிறவி மயக்கு அறுப்பது எக்காலம்?' எனப் பாடுகின்றார்.

அந்த மனத்தை எப்படிச் செம்மைப்படுத்துவதென்றும் சாற்றினார் இடைக்காட்டுச் சித்தர். புழுவொன்று, குளவியாவது எப்படித் தெரியுமா? குளவி ஒன்று இலையிலே இருக்கும் புழுவை எடுத்து வந்து தனது கூட்டிலே வைத்து, அதனைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடும். அந்த ரீங்காரத்திலே வயப்பட்டுப் புழுவும் நாளடைவில் குளவியாகிவிடும்.

அதுபோல மனத்தை அதன் இடத்திலேயே நிறுத்தி, ஞானம் எனும் உளியால் அதனைச் சுற்றிச் சுற்றிச் செதுக்கிப் பக்குவப்படுத்த வேண்டும்' என்றார் இடைக்காடர். "குளவி புழுவைக் கொணர்ந்து கூட்டில் உருப்படுத்தல் போல், வளமுடைய வன்மனத்தை வசப்படுத்து மடவன்னமே' என்பது அப்பாடல்.

சித்தர்கள் நாடுகளுக்கிடையேயுள்ள சுவர்களை உடைத்தெறிந்தவர்கள்; மதங்களுக்கு இடையே இருந்த வேலிகளை முறித்து எறிந்தவர்கள்; உலகெங்கனும் மூடியிருந்த மூடநம்பிக்கையாகிய முகமூடிகளைக் கிழித்து எறிந்தவர்கள். மனித குலம் முழுமையும் ஒருமைப்பாட்டோடு வாழ வேண்டுமென்பதை, "குலம் ஒன்றாய் நீ படைத்த குறியை அறியாமல், நான் மலபாண்டத்து உள்ளிருந்து மயங்கினேன் பூரணனே' எனத் தம்மை முன்னிலைப்படுத்திப் பாடினார் பட்டினத்தார்.

இதனையே பாம்பாட்டிச் சித்தர், "எல்லா உலகமும் எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும், எண்ணரிய வல்லாளன் ஆதி பரம சிவனது சொல்லால் ஆகும்' எனப் பாடினார்.

நீண்ட நாட்களாகப் பாழ்பட்டும், பழுதுபட்டும் கிடக்கும் உலகம், பையக் கையூன்றி எழுந்து நடக்க வேண்டுமென்றால், சித்தர் சொன்ன சொற்களைக் கேட்க வேண்டும்! கழிந்த காலம் போக எஞ்சியுள்ள நாட்களில் இனியது காண வேண்டுமென்றால், சித்தர்கள் காட்டிய வழியில் நடப்போமாக!



# மருத்துவத்

## மூலிகை ஆரோக்கியம்

பெண்கள் உட்கொள்வதற்கு ஏற்ற கனி மாதுளம்கனி. மாதவிலக்கின்போது ரத்தப்போக்கு அதிகமாக ஏற்பட்டு அத்துடன் வலியும் கடுமையாக இருந்தால் மாதுளம்பழத்தோலை சுட்டு அதன் சாம்பலை தேனுடன் குழைத்து சாப்பிட வலி நீங்கும். அத்துடன் பழச்சாற்றையும் குடிக்கலாம்.

உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் இயங்கும்பொழுது தோன்றும் வெப்பம் ரத்தத்தின்



மூலமாக பரவலாக நமது தோல் முழுவதும் எடுத்துச் செல்லப்படுகிறது. தோலிலுள்ள வியர்வை சுரப்பிகள் மற்றும் நுண்ணிய துளைகள் மூலமாக இந்த வெப்பம் நீராவியாகவும், காற்றாகவும் வெளியேறிவிடுகின்றன. நமது உடலின் வெப்பம் சீராக வெளியேறாவிட்டால் உடல் உறுப்புகளின் செயல்பாடும் ஸ்தம்பித்து போய்விடும்.

ரத்தம் மற்றும் தோலில் தங்கியுள்ள நீர்ச்சத்தே உடலின் வெப்பத்தை சீராக வைக்க உதவுகிறது. ஆனால் நெருப்பு தாக்குதல், கத்தரி வெயில், அனல்காற்று போன்ற காரணங்களால் நமது உடலின் வெப்பம் திடீரென 100 டிகிரிக்கும் மேல் அதிகரிப்பதால் வெப்பத்தின் பாதிப்பு உடலை பல வகைகளில் பாதிக்கிறது. சோடா, மோர், பழச்சாறு, இளநீர், கரும்புச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கற்றாழை ஜுஸ், தண்ணீர் பழச்சாறு போன்ற பானங்கள் உடலின் வெப்பத்தை தணிப்பதுடன் நீர்ச்சத்தை நிலைநிறுத்துகின்றன. இதுபோன்ற பானங்களை உட்கொள்ளாவிடில் உப்பு மற்றும் நீர்ச்சத்து உடலில் குறைவதால் கடும் சோர்வு மற்றும் தசை இறுக்கம் உண்டாகிறது.

வெயிலின் கொடுமையை தணிக்க காரம் அதிகமுள்ள உணவுகளை குறைப்பதுடன் அசைவ உணவுகளை தவிர்க்க வேண்டும். குறைந்தது 3 முதல் 5 லிட்டர் நீர் அருந்தவேகுடும். வெயிலில் வேலை செய்யும்பொழுது அடிக்கடி நீர் அருந்தினால் வெயிலின் கொடுமையிலிருந்து தப்பிக்கலாம். கோடையின் கொடுமையை தணிக்க விலை மலிவான, எளிதில் கிடைக்கக்கூடிய தக்காளிப்பழச்சாற்றை உட்கொள்ளலாம்.

சீனி அல்லது குளுக்கோஸ் கலக்கப்பட்ட தக்காளிச்சாறு உடலின் நீர்ச்சத்தை நிலைநிறுத்துவதுடன் உடலையும் குளிர்ச்சி செய்கிறது.

லைக்கோபெர்சின் எஸ்குலன்டம் என்ற தாவரவியல் பெயர் கொண்ட சோலனேசியே குடும்பத்தைச் சார்ந்த நன்கு பழுத்த சீமைத் தக்காளிப்பழத்தில் லைக்கோபீன் வகை கரோட்டினாய்டுகள் உள்ளன. இவை வயிறு மற்றும் சிறுநீர்ப் பாதையில் தோன்றும் புற்றுநோய் செல்களை தடுக்கின்றன. த

தக்காளிப்பழச் சாற்றிலுள்ள அஸ்கார்பிக் அமிலம் செல் அழிவை தடுப்பதுடன் சுண்ணாம்பு சத்தை நிலைநிறுத்துகின்றன. தக்காளிப்பழச்சாற்றிலுள்ள வலி நிவாரணத் தன்மை உடல் வலியையும் குறைக்கிறது. குறைந்தளவில் நன்கு நீரில் கலக்கப்பட்ட, இனிப்பூட்டப் பட்ட தக்காளிச்சாற்றை தொடர்ந்து குடித்துவர கல்லீரல் மற்றும் சிறுநீர்ப்பாதையில் தோன்றும் கிருமித்தொற்று மற்றும் நச்சுக்கிருமிகள் நீங்கும்.




தக்காளியைப் பிழிந்து, விதை மற்றும் தோலை நீக்கி, வடிகட்டி, வெறும் சாற்றுடன் கற்கண்டு அல்லது சீனி கலந்து சாப்பிடுவதாலும், நன்கு பழுத்த தக்காளிப்பழத்தை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, சீனி கலந்து குழந்தைகளுக்கு கொடுப்பதாலும் உடல் உஷ்ணம் தணியும்.

தக்காளியை சூடு செய்யாமல் வடிகட்டி அப்படியே சாப்பிடுவதால் சிறுநீர் கிருமித்தொற்று நீங்குகிறது. ஆனால் தக்காளியை தோல் மற்றும் விதையுடன் சேர்த்து உட்கொள்வதால் சிறுநீர்ப் பாதையில் சுண்ணாம்பு, யூரிக் அமிலம் மற்றும் பாஸ்பரஸ் சத்து சேகரிக்கப்பட்டு, கற்கள் உண்டாகிவிடுகின்றன. ஆகவே பச்சை தக்காளிச்சாறு உடல் குளிர்ச்சிக்கு ஏற்றது.

சர்க்கரை நோயாளிகளுக்கு தொடர்ந்து வெப்பத்தாக்குதலை நீக்க தக்காளியை அடிக்கடி உட்கொள்ளலாம். தக்காளியை தொடர்ந்து உட்கொள்வதால் உணவுப்பாதை, சிறுநீர்ப்பாதை மற்றும் புராஸ்டேட் கிளான்டில் ஏற்படும் புற்றுநோய் தடுக்கப்படுவதாக அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கோடைகாலத்தில் முகத்தில் ஏற்படும் முகச்சுருக்கங்கள் மறைய தக்காளிச்சாற்றை முகத்தில் பூசி வருவதால் தோல் மென்மையடைவதுடன் குளிர்ச்சியும் உண்டாகும்.



## தக்காளி

அசைவ உணவுகள் செரிமானமாக குறைந்தது 90 நிமிடங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் காய்கறிகள் மற்றும் பழச்சாறுகள் உட்கொண்ட 15—20 நிமிடங்களில் செரித்துவிடுகின்றன. ஆகவே அசைவ உணவைவிட சைவ உணவை நம் உடல் எளிதில் ஏற்றுக்கொள்கிறது.



காரட், பீட்ரூட், புடலை, பீன்ஸ், வெள்ளரி, முட்டைகோஸ், வாழைத்தண்டு, திராட்சை, ஆரஞ்சு, எலுமிச்சை ஆகியவற்றை ஒன்றாக இடித்து சாறெடுத்து அத்துடன் இஞ்சி சாற்றின் தெளிநீரை கலந்து சாப்பிட உடல் குளிர்ச்சியடைவதுடன் உணவுப்பாதையின் செரிமான ஊக்குநீர்கள் நன்கு சுரக்கின்றன. இது அனைவருக்கும் ஏற்றது.

## முலிகை இலைகளும் அதன் மருத்துவக் குணங்களும்

துளசி: ஜீரண கோளாறுகள், காய்ச்சல், இருமல், ஈரல் சம்பந்தமான நோய்கள், காதுவலி முதலியவற்றிற்கு சிறந்தது. இரத்தத்தில் உள்ள விஷத் தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்கின்றது.

வில்வம்: காய்ச்சல், அனீமியா, மஞ்சள் காமாலை, சீதபேதி போன்றவற்றிற்குச் சிறந்தது.

காலரா தடுப்பு மருந்தாக வில்வம் செயல்படுகிறது. சிவன் கோயில்களில் வில்வ இலை கிடைக்கும்.

அருகம்புல்: எல்லா நோய்களுக்கும் ஏற்ற சிறந்த மருந்து. காலையில் 9.00 மணிக்கு பசி ஆரம்பித்தவுடன் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். பசிப்பதற்கு முந்தியே சாப்பிடுவது தவறு. அருகம்புல் சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து ஒரு பழம் சாப்பிட்டால் போதும். அடுத்து மதியச் சாப்பாடுதான். இந்த மாதிரி செய்தால் எல்லா நோய்களும் குணமடையும்.



உடல் எடை குறைய, கொலாஸ்டிரல் குறைய, நரம்புத்தளர்ச்சி நீங்க, இரத்தப்புற்று குணமடைய அருகம்புல் ஒரு உலகப் புகழ்வாய்ந்த டானிக். இரத்தத்தில் ஹீமோகுளோபின் அதிகரிக்கச் செய்வதில் சிறந்தது அருகம் புல்தான். தோல் வியாதிகள் அனைத்தும் அருகம்புல்லில் நீங்கும். இரத்தத்தில் உள்ள விஷத்தன்மைகளை வெளியேற்றுவதில் திறமையானது. விநாயகர் கோயில்களில் அருகம்புல் கிடைக்கும்.

கல்யாண முருங்கை (முள் முருங்கை): அதிகமான பித்தத்தை நீக்கும். முடி நரைக்காமலிருக்க உதவுகிறது. காய்ச்சலைக் குறைக்கும். நீர் பின்யும், மலமிளக்கி, மாத விடாய்த் தொல்லையை நீக்கும் கிருமிகளை வெளியேற்றும். வீக்கங்களை குறைக்கும். நீன்ழிவு, சீதபேதி, வாதம் குணமடையும், 17 வயது வரை வயதுக்கு வராத பெண்களுக்கு இதன் சாறு நல்ல பலன் தருகின்றது.

கொத்தமல்லி: இதுவும் நல்ல டானிக் பசியைத் தூண்டும், பித்தம் குறையும். காய்ச்சல், சளி, இருமல், மூலம், வாதம், நரம்புத்தளர்ச்சி குணமாகும். இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையை குறைக்கவும், இரத்த அழுத்தம், கல்லடைப்பு, வலிப்பு, ஆகியவை குணமாகும். மன வலிமை மிகும். மன அமைதி, தூக்கம் கொடுக்கும். வாய் நாற்றம், பல்வலி, ஈறு வீக்கம் குறையும்.



கறிவேப்பிலை: நல்ல டானிக், பேதி, சீதபேதி, காய்ச்சல், எரிச்சல், ஈரல் கோளாறுகள் மறையும். பித்தத்தைத் தணித்து உடல் சூட்டை ஆற்றும். அதோடு கறிவேப்பிலைக் கீரை மனதுக்கு உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. குமட்டல், சீதபேதியால் உண்டான வயிற்று உளைச்சல், நாட்பட்ட காய்ச்சல் ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். பித்த மிகுதியால் உண்டாகும் பைத்தியத்தைக் குணப்படுத்த கறிவேப்பிலை உதவுகின்றது.

புதினா: நல்ல டானிக் சிறுநீர் பிரச்சினை, ஜீரணக் கோளாறு, உஷ்ண நோய்கள் மறையும். சிறந்த மலமிளக்கி. புதினா கீரையில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைடிரேட், நார்ப்பொருள் உலோகச்சத்துக்கள், பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் ஏ, நிக்கோட்டினிக் ஆசிட், ரிபோ மினேவின், தயாமின் ஆகிய சத்துக்களும் அடங்கியுள்ளன.

கற்பூர வல்லி (ஓமவல்லி): மிகச் சிறந்த இருமல் மருந்து. 5 இலைகளை அப்படியே சாப்பிட்டால் உடனே மூக்கடைப்பு, தொண்டை வறட்சி, இருமல் மறையும். புகழ்பெற்ற இருமல் மருந்துகளைப் போல் விரைவாக செயல் புரியும்.

வல்லாரை: நல்ல டானிக், எல்லா நோய்களையும் நீக்கும். மஞ்சள் காமாலை, அல்சர், தொழுநோய், யானைக்கால் வியாதி, பேதி, நரம்புத்தளர்ச்சி, ஞாபக சக்தி முதலியவற்றிற்கு சிறந்தது. ஒரு நேரத்திற்கு பத்து இலைகள் போதும்.

தூது வேளை: நரம்புத்தளர்ச்சி மறையும், மார்புச்சளி அகற்றும், தோல் வியாதிக்கும் நல்லது. குழந்தைகளுடைய மூளை வளர்ச்சிக்கும், ஞாபகசக்தியை வளர்ப்பதற்கும் இது சிறந்த டானிக் ஒரு நேரத்திற்கு பத்து இலைகள் போதும். காது மந்தம், நமைச்சல், உடல் இளைப்பு முதலியவற்றிற்கும் தூது வேளை நல்லது.



தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37



# தப்பில்லா

## பிழைகள் மறைக்கப்பட வேண்டியவை அல்ல

**பி**ழைகள் எதுவுமே இல்லாமல் எந்தச் செயலையாவது செய்ய முடியுமா? ஒருவர் பல பணிகளைச் செய்யும்போது, ஏதேனும் சில பிழைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால், பிழைகளை இழைத்துவிடுவோமோ என அஞ்சி, எந்தச் செயலையும் செய்யாமல் இருப்பதுதான் பெரும் பிழையாக அமையும்.




தனி மனிதராக மட்டுமல்ல, பலர் இணைந்து செய்யும் செயல்களிலும் சரியான ஒருங்கிணைப்பு — கூட்டுமுயற்சி — ஒற்றுமை, இவற்றுள் ஏதேனும் குறைவேற்படும்போது, தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால், கவனிக்கப் பட வேண்டிய விஷயம், தவறுகளில் இருந்து — பிழைகளில் இருந்து பாடம் — படிப்பினை கற்றுக் கொள்வதுதான்.

இதற்கு “உள்ளதை உள்ளபடி’ அங்கீகரிக்கும் பழக்கமும், இரண்டாவதாக, எந்தத் தவறையும் “மூடி மறைக்காமல்’ இருக்கும் பழக்கமும் வேண்டும்.

எந்த ஒரு விஷயத்தையும் மிகைப்படுத்தியோ அல்லது மட்டுப் படுத்தியோ கூறுவதன் மூலம் அல்லது அணுகுவதன் மூலம் நமக்கு நாமே எந்த நன்மையையும் செய்து கொள்ளப் போவதில்லை.

மாறாக, ஒரு பிரச்னையின் வீரியத்தை அதிகப்படுத்தியோ — குறைத்தோ அணுகுவதால், அப்பிரச்னையை சரிவரக் கையாளும் வாய்ப்பைத் தவறவிடுகின்றோம்.

இத்தகைய பழக்கத்தின் நீட்சியாக, சில விஷயங்களை மறைப்பது — அல்லது அங்கீகரிக்க மறுப்பது எனும் வழக்கமும் நம்மிடம் இருக்கிறது.

தவறுகளை — பிழைகளை மூடி மறைக்காமல் ஒப்புக்கொள்ளும்போது — உள்ளதை உள்ளபடி பார்க்கும்போது, அவற்றிலிருந்து நாம் படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள முடியும்.

பிழைகளை இழைப்பதனை விட, அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாமல் இருப்பது பெரும் தவறாகும்.

ஏவுகணைகளை விண்ணில் செலுத்தும்போது, விஞ்ஞானிகள் அதன் பாதையை — பயணத்தைத் தொடர்ந்து இடைவிடாது கண்காணித்து



# தப்பு

வருவார்கள்; அதன் பாதையில் திட்டமிடப்படாத சிறு மாறுதல்கள் ஏற்படும்போது அதனது பயணம் சரியான திசைக்கு மாற்றப்படும்; சற்று யோசியுங்கள், ஏவுகணை திசை மாறிச் செல்லுகிறது என்பதனை விஞ்ஞானிகள் குழு ஏற்க மறுத்தால் அல்லது மூடி மறைத்தால் என்னவாகும்?

ஒரு பெரும் நிர்மாணப் பணியின் களநிலை குறித்த ஆய்வு நடத்தும்போது, அதில் ஏற்பட்டிருக்கும்

**இரா. கதிரவன்**

எந்தெந்தப் பணிகளில் இத்தகைய பொருள் சேதம் — கால விரயம் போன்றவை ஏற்பட்டன, அவற்றுக்கான காரணங்களாகக் கருதப்படுபவை யாவை, அத்தகைய தவறுகளை எவ்வாறு தவிர்த்திருக்க முடியும் என்பதனை, "தவறுகளில்




தாமதத்தை, குறைபாடுகளை ஏற்க மறுத்தால் என்னவாகும்? பல கோடி பொருள் இழப்பும் — உழைப்பின் விரயமும் ஏற்படும்.

பெரிய தனியார் நிறுவனங்கள் தங்களது நிர்மாணப் பணிகள் — கட்டுமானப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடும்போது, தவிர்க்கப் பட்டிருக்கக் கூடிய தவறுகள் சில நிகழ்வது உண்டு. அவற்றின் காரணமாக, பொருள் சேதம், பணமிழப்பு, கால விரயம் போன்றவை ஏற்படக் கூடும்.

அந்நிறுவனங்கள், அவற்றை மூடி மறைக்காது, இருந்து கற்றுக் கொண்ட படிப்பினைகள்' என்று ஆவணப் படுத்தி, நிறுவனத்தின் பல்வேறு தளங்களிலும் பகிர்ந்து கொள்வார்கள்.

இதன் மூலம், பிறரும் இத்தகைய தவறுகளை இழைக்காமல் இருப்பதனை உறுதி செய்வார்கள்.


தனது தவறுகளில் இருந்து பாடம் கற்பதனைவிட, பிறரது தவறுகளில் இருந்து பாடம் கற்பது என்பது மேலும் சிறந்தது ஆகும். எனவே, தவறுகளைத் தாமாக உணராவிட்டால், பிறர் சுட்டிக் காட்டும்போதாவது உணர வேண்டும்.

இதனை நமது அரசு — நிர்வாக இயந்திரம் ஆகியவற்றோடு கூட பொருத்திப் பார்க்கலாம். பெரும் விபத்து, பேரிடர் குறித்த விவரங்கள், திடீர் நோய் பரவல் குறித்த விவரங்கள் போன்றவற்றை அரசு உடனடியாக, வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். வெளிப்படையான அணுகுமுறை என்பது அரசு — பெரு நிறுவனங்கள் — பொதுமக்கள் ஆகியோருக்கும் பொருந்தும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் — ஒவ்வொரு பெற்றோருக்குமான செய்தி இதில் அடங்கியிருக்கிறது.

குழந்தைகள் தங்களது தவறுகளை உணர, மூடி மறைக்காது இருக்க, அவற்றுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள, தயக்கமின்றி அவை குறித்து பேசிப் பரிசீலிக்க, தவறுகளில் இருந்து பாடம் கற்று கொள்ள, மறுபடியும் அத்தகைய தவறுகளை இழைக்காமல் தவிர்க்க நாம் பழக்கப்படுத்த வேண்டும். பெற்றோர்கள் — ஆசிரியர்கள் ஆகியோர் இளைய தலைமுறையினரை இதற்குப் பழக்க வேண்டும். இளைய தலைமுறையினருக்குப் பெரியோர் முன்னுதாரணமாகவும் இருக்க வேண்டும்.

பெற்றோர்களைப் பொறுத்தவரை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கும், குணாதிசயங்கள் இருக்கும். இருப்பினும், குழந்தைகளை இப்படித் தான் நடத்த வேண்டும் என்ற பொதுவானதொரு வழிமுறை இருக்கின்றது. அதனைப் பின்பற்றினால் ஒழுக்கமுள்ள குழந்தைகளை உருவாக்க முடியும். நாம் நினைத்தமாதியெல்லாம் குழந்தைகளை வளர்த்து விட முடியாது. திட்டமிட்ட அடிப்படையில் அவர்களை வழிநடத்தும் பொழுது, நல்லபல விளைவுகள் ஏற்படும்.




## இளமையில் கல்வி

இந்த வயதில் அதற்கு என்ன தெரியும் என்று அங்கலாய்ப்பவர்களைக் காண முடியும், ஆனால் குழந்தைகளில் இளமைப் பருவம் தான் அவைகள் கற்றுக் கொள்ளக் கூடிய நல்லதொரு பருவமாகும், அவர்களை நல்லதொரு வழித்தடத்தின் கீழ் பயணிப்பது எப்படி என்பதை பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டிய தருணம், குழந்தைகளின் ஆரம்ப நாட்களாகும். ஒருமுறை அவர்களிடையே நல்லதொரு பண்பாட்டை பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி விட்டால், அது அவர்களது வாழ்நாள் முழுவதும் தொடரும், அதிலிருந்து அவர்கள் மாற மாட்டார்கள்.

## கோபமான நிலையில் குழந்தைகளுக்கு உத்தரவிடாதீர்கள்

நீங்கள் உங்களது குழந்தையிடனோ அல்லது சாதாரணமாக எதற்காகவோ நீங்கள் கோபமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றீர்கள். அப்பொழுது உங்களது குழந்தைகளைத் திருத்த நினைக்காதீர்கள். உங்களது குழந்தைக்கு நல்லதைத் தான் நாடுகின்றீர்கள். ஆனால் அதுவல்ல இப்போது பிரச்னை.., நீங்கள் எந்த நிலையில் அதனைச் சொல்கின்றீர்கள் என்பது தான் பிரச்னை. எனவே, கோபம் இல்லாத நிலையில் அதனைத் தொடருங்கள்.

## பெற்றோர்கள் இணைந்து முடிவெடுத்துச் செயல்படுங்கள்

குழந்தைகளை எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது குறித்த திட்டத்தை குடும்பத்தலைவியும், தலைவனும் இணைந்து தீர்மானிக்க வேண்டும். அதனை இருவரும் இணைந்து நிறைவேற்றுவதற்கு திட்டமிடல் வேண்டும். ஒருவர் கறாராகவும், இன்னொருவர் இலகுவாகவும் நடந்து கொண்டால்,




இருவருக்கு மத்தியில் குழந்தைகள் விளையாட ஆரம்பித்து விடும். பெற்றோர்களில் கறாரானவர் மறுக்கின்ற பொழுது, அடுத்தவரிடம் சென்று அனுமதி கேட்க ஆரம்பித்து விடுவார்கள். இருவரும் ஒரு விசயத்தில் ஒத்த கருத்தில் இருந்தால் தான் குழந்தைகளை நெறிப்படுத்த முடியும். பெற்றோர்களில் ஒருவர் சம்மதித்து இன்னொருவர் சம்மதிக்கா விட்டால், பெற்றோரில் ஒருவரின் மீது குழந்தைகளுக்கு வெறுப்புணர்வு ஏற்படும். எனவே, இது விசயமாக நாங்கள் கலந்தோலசித்து முடிவு சொல்கின்றோம் என்று குழந்தைக்குக் கூறுங்கள். பின்னர், குழந்தைகள் இல்லாத சூழ்நிலைகளில் அந்த விவகாரத்தை கலந்தாலோசித்து முடிவெடுங்கள். குழந்தைகளை வைத்துக் கொண்டு கலந்தாலோசனையில் ஈடுபடாதீர்கள். எடுத்த முடிவில் இருவரும் உறுதியாக இருங்கள்.

## உறுதியாக இருத்தல்

பெற்றோர்கள் தங்களது கொள்கைகளில் உறுதியைக் கடைபிடிக்க வேண்டும். அடிக்கடி சட்ட திட்டங்களை மற்றும் எதிர்பார்ப்புகளை மாற்றிக் கொள்வது குழந்தைகளை குழப்பத்தில் ஆழ்த்தி விடும். உதாரணமாக, சுவரில் எழுதிக் கொண்டிருக்கின்ற குழந்தையை இன்றைக்கு தடுப்பது, நாளைக்கு தடுக்காது எழுதட்டும் என அனுமதிப்பது, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இனிவரும் நாளில் நாம் சுவற்றில் எழுதினால் பெற்றோர்கள் கண்டிப்பார்களா, கோபப்படுவார்களா என்ற புரிந்துணர்வின்மை குழந்தைகளிடத்தில் தோன்றி விடும். உங்களது மனநிலைக்குத் தக்கவாறு உங்களது சட்ட திட்டங்களையும் மாற்றிக் கொள்வது நல்லதல்ல. இவ்வாறான நிலையில், எந்தக் காரியத்தையேனும் குழந்தை செய்ய ஆரம்பிக்கும் பொழுது, நீங்கள் அதனை அனுமதிப்பீர்களா மாட்டீர்களா, அதனால் கோபமடைவீர்களா என்று உங்களைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்து விடும். எனவே தான் கூறுகின்றோம்.., குழந்தைகளை ஒரு விசயத்தின் மீது அதனைச் செய்யாதே என்று தடுத்தால், அந்தத் தடை எப்பொழுதும் நீடிக்க வேண்டும். அப்பொழுது தான் ஓ.., இதைச் செய்வது நல்லதல்ல என்று அந்தக் குழந்தை உடனே கற்றுக் கொள்ளும்.

அப்படியென்றால் சமய சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு நம்மை மாற்றிக் கொள்ளக் கூடாதா என்றால், மாற்றிக் கொள்ளலாம்.., நீங்கள் ஏன் முதலில் அனுமதி மறுத்தீர்கள்.., பின்னர் இப்பொழுது ஏன் நீங்கள் அனுமதிக்கின்றீர்கள் என்பது குறித்து அந்தக் குழந்தைக்கு விளக்கம் அளிக்க





வேண்டியது அவசியமாகும். இன்னும் அதனை அதன் ஆரம்ப கட்டத்திலேயே விளக்கி விடுவது புரிந்துணர்வுக்கு நல்லதாகும். பெற்றோர்களிடம் உறுதி இல்லை என்றால், அதுவே குழந்தைகளின் கட்டுப்பாடின்மைக்கான ஆணி வேராகும்.

தவறுகளை உணரும் பழக்கமும் தங்களது தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்புகள் தரப்படும் எனும் உணர்வும் குழந்தைகளுக்கும் பதின்பருவத்தில் இருப்பவர்களுக்கும் மேலும் நேர்மையையும் — தன்னம்பிக்கையையும் தரும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் சொல்லித் தர வேண்டிய இன்றியமையாச் செய்திகளுள் ஒன்று, “பிழைகள் தவிர்க்கப்படவேண்டியவை மட்டுமே — மறைக்கப்படவேண்டியவை அல்ல’ என்பதாகும்.

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

editor@ithamil.com






# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**

# 2018 CALENDAR

**2018**

### JANUARY




### FEBRUARY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | | |

### MARCH

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ઢોસા નું ખીરું

इडली/ दोसा आटा